# எட்டாந் திருமுறை

பேராசிரியர் ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# எட்டாந் திருமுறை

(திருவாசகம், திருக்கோவையார்)

**பேராசிரியர் ஆ. சிவலிங்கனார்**
மேனாள் முதல்வர்,
சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி,
மயிலம்.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி. டி. டி. ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை-600 113.

**தாமரைத் திரு. வ. சுப்பையாபிள்ளை**

அறக்கட்டளைச் சொற்பொழிவு—2

(12, 13-10-92)

PadmaSri V. Subbaiya Pillai Endowment Lecture No. 2

Endowment Lecture—Publication No. 32

---


## BIBLIOGRAPHICAL DATA

| | |
|---|---|
| Title | : Eṭṭāntirumuṟai |
| Author | : Prof. A. Sivalinganar,<br>Former Principal,<br>Sivagnana Palaya Swamikal<br>Tamil College, Mayilam |
| Publisher & Copy right | : International Institute of<br>Tamil Studies, T.T.T.I. (Post)<br>Taramani, Madras-600 113. |
| Publication No | : 166 |
| Language | : Tamil |
| Date of Publication | : 12-10-92 |
| Edition | : First |
| Paper used | : Tamilnadu Creamove |
| Size | : 21×14 cms |
| Printing types | : 10 Point |
| No. of Copies | : 1200 |
| No. of Pages | : XI+129 |
| Price | : Rs. 22 |
| Printers | : Kavinkalai Acchagam,<br>Madras-41, Ph. No. 41 71 41 |
| Artist | : Sathya |
| Subject | : The Eigth book of the<br>Saiva cannon |


---


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

# பதிப்புரை

சைவ சமய சிந்தனைகளை ஆய்வு செய்ய, நிறுவனத்தில் நிறுவப்பட்ட அறக்கட்டளை **'தாமரைத் திரு. வ. சுப்பையா பிள்ளை அறக்கட்டளை'** யாகும். அன்னார் தமிழிற்கும், சைவத்திற்கும் ஆற்றிய அருந்தொண்டினைப் பாராட்டுமுகமாக இவ்வறக் கட்டளைத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. 1983இலேயே இது நிறுவப் பட்டு விட்டாலும் 1989இல் தான் முதற் சொற்பொழிவு நிகழும் வாய்ப்பேற்பட்டது. மீண்டும் நீண்ட இடைவெளிக்குப்பின் இரண்டாவதாக இச்சொற்பொழிவு 'எட்டாந்திருமுறை' பற்றியமைகிறது சொற்பொழிவாளரின் விருப்பிற்கேற்ப நூல் வெளியீட்டுடன் சொற்பொழிவமைவதில் மகிழ்ச்சி கொள்கிறோம். இவ்வறக் கட்டளை சார்பில் இந்நூலே முதலாவதாக வெளிவரும் பெருமையும் கொண்டுள்ளது.

இவ்வறக்கட்டளைக்காக இடைவிடாது பலரையும் தொடர்பு கொண்டுள்ள போதிலும், நிறுவன அழைப்பை உடன் ஏற்றுக் கொண்டு மிகக் குறுகிய காலத்தில் தம் பணியைப் பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் நிறைவு செய்தளித்தமை மிகுந்த போற்றுதலுக் குரியது. தமிழுலகு நன்கறிந்த இலக்கண அறிஞரான இவர் தம்மைச் சிறந்த இலக்கிய அறிஞராகவும் இதனுள் வெளிப்படுத்தியுள்ளார். முன்பே தொல்காப்பிய உரைவளத் திட்டப்பணியாளராக நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு அதனை நிறைவேற்றியவர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. மிக நுணுக்கமாகவும், தெளிவாகவும் சிறப்புற எட்டாந்திருமுறை நூல்களான திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் ஆய்வு செய்து மாணிக்கவாசகரைப் புதிய கோணத்தில் திறம்படக் காட்டியுள்ள நூலாசிரியருக்கு நிறுவனம் நன்றி தெரிவிக்கின்றது.

நிறுவனத்தில் இவ்வறக் கட்டளையினை நிறுவிச் சிறப்பித்துள்ள தமிழறிஞர் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக மேலாளர் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள்; அறக்கட்டளைச் சொற்பொழிவிற்கும், நூலாக்கத்திற்கும் துணை நின்ற நிறுவன இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு அவர்கள்; மெய்ப்புத் திருத்தியுதவிய திரு. சு. சண்முகவேலாயுதம், செவ்வையாக அச்சிட்டுத் தந்துள்ள கவின்கலை அச்சகத்தார் அனைவருக்கும் எங்கள் நன்றி.

அன்புடன்,
ச. சிவகாமி

சென்னை-113
1—10—92

அறக்கட்டளைப் பொறுப்பாளர்,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.



# ஆசிரியர் அறிமுகம்

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத்தின் ஐந்தாம் குருமூர்த்திகளாக விளங்கிய ஞானியார் அடிகளின் மாணவர் ஆ. சிவலிங்கனார். 30-11-1922இல் பிறந்த இவர், 1940இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டம் பெற்றவர்.

திருநெல்வேலி மாவட்டம் வீரவநல்லூர் இந்து நடுநிலைப் பள்ளியில் ஓராண்டு (1941 - 1942) தமிழாசிரியராகப் பணி புரிந்தவர். 1942 - 1971 வரை மயிலம், சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியில் விரிவுரையாளராகப் பேராசிரியராக, முதல்வராகப் பணி புரிந்தவர். 1972-73இல் மோகனூர் சுப்பிரமணியம் தமிழ்க் கல்லூரியில் முதல்வராக இருந்தவர்.

10-9-1979 முதல் 9-9-1987 வரை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தொல்காப்பிய உரைவள வெளியீட்டுப் பணியில் அமர்ந்து 20 உரைவள நூல்களைப் பதிப்பித்தவர்.

சென்னை, அண்ணாமலை, தஞ்சைப் பல்கலைக்கழகங்களும் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றமும் நடத்தி வந்த கருத்தரங்குகளில் இலக்கணக் கட்டுரைகள் படித்தவர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நாவலர் சோமசுந்தரபாரதியார் நினைவு அறக்கட்டளையின் சார்பில் 1992இல் தொல்காப்பியப் பொருளதிகார உரைவேறுபாடு பற்றிச் சொற்பொழிவாற்றியவர். செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில் முதலிய திங்கள் இதழ்களில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் எழுதியவர்.

அகத்தியர்கள், பாரியைக் கொன்றவர் யார் முதலிய ஆய்வு நூல்களும், சிலம்புமணிகள், பெரியபுராணப் பெண்மணிகள் முதலிய திறன்ஆய்வு நூல்களும், மயிலம் கார்த்திகைக் கதம்பம் (100 பாடல்கள்), சின்னதச்சூர்ப் பொன்னிமாலை (100) பால சித்தர் பாமாலை (100) முதலிய தோத்திர நூல்களும் இயற்றியவர்.

திருச்சித் தமிழகப் புலவர் குழு உறுப்பினர். குன்றக்குடி அடிகளாரின் திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்க உறுப்பினர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் கல்விக்குழு (Academic-council) ஆட்சிக்குழு (Senate) உறுப்பினராக இருந்தவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதலில் B.Lit பட்டவகுப்புத் தொடங்குதற்குப் பரிந்துரை செய்த குழுவில் இருந்தவர் எனப் பல பெருமைகளுக்குரியராவார்.

# எனது பாயிரம்

'பயிர்' என்ற சொல் 'அழை'' என்ற பொருளுடையது. அதனால், 'பாயிரம்' என்பதற்கு 'அழைப்பது' என்னும் பொருள் கொள்ளலாம். எட்டாந்திருமுறை என்னும் இந்நூலுட்புக அறிஞர் பெருமக்களை அழைப்பது 'எனது பாயிரம்'. அழைப்பதன் நோக்கம், மரபாகக் கூறப்பட்டுவரும் கருத்தின் மேலும், புதிய கருத்துகளைக் கூற வேண்டும் என்பதே.

எட்டாந்திருமுறை என்பது மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தைக் குறிக்கும். அவர் அருளிய திருக்கோவையாரையும் சேர்த்துக் கொள்வர். மாணிக்கவாசகர் வரலாற்றில் இதுகாறும் கூறப்படாத புதிய கருத்துகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

(1) கோகழி என்பது திருப்பெருந்துறையைச் சார்ந்த பொழிலிடம்.

(2) மாணிக்கவாசகரை ஆட்கொண்ட குருமணியானவர் தம் மனைவியாருடன் இருந்தவர்.

(3) திருப்பாதிரிப்புலியூரின் தெற்கே ஓடிய கெடில ஆறு மாணிக்கவாசகர் பொருட்டு இறைவன் வடக்கே ஓடுமாறு திருப்பிய கதை.

இவை வரலாறு தொடர்பான புதிய கருத்துகள்.

மாணிக்கவாசகர் காலம் பற்றி, மறைமலையடிகள் முதலானோர் பலவாறு கூறினும், அடிகள் கூறிய கி.பி. 3ஆம் நூற்றாண்டே பொருந்தும் என்பதை, அவர்கள் வழி நின்று முடிவு செய்யப்பட்டாலும், மாணிக்கவாசகர்திருக்கோவையாரில் கூறிய கதை-அதாவது திருமால் இறைவனின் திருவடி காணாது மீண்டு இறைவனை வேண்ட, இறைவன் தன் ஒரு திருவடியைக் காட்டி நிற்க, 'மற்றதும் காட்டுக' என்று தில்லைச் சிற்றம்பலவன் முற்றத்தில் தவம் கிடந்தான் என்று கூறிய கதையும், 'தில்லை மூவாயிரவர் போற்றும் சிற்றம்பலம்' என்று கூறிய கூற்றும் மாணிக்கவாசகர் காலம் பற்றி அறியத் துணை செய்தன. அவர் ஆசீவகர் பரவி வாழ்ந்த காலத்தவர் என்பதும் புதிய செய்தியே.

மாணிக்கவாசகர் சமயம் சைவம் என்று பலரும் சொல்லிவர, மறைமலையடிகள், வீரசைவம் என்று கூறி இரண்டொரு சான்றுகள் கூறினர், தமது 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' என்னும் நூலில். திருவாசகப் பாடல்களிலிருந்தே பல சான்றுகள் இந்நூலில் காட்டப்பட்டுள்ளன.

திருக்கோவையார் பற்றிச் சில ஐயங்களும் எழுப்பப்பட்டுள்ளன.

மேற்குறித்த கருத்துகளை இந்நூலில் கண்டு, தங்கள் ஆய்வின் மூலம் சிறந்த முடிபினைத் தருமாறு அறிஞர் பெருமக்களை வேண்டிப் பணிந்து அழைப்பது 'எனது பாயிரம்'.

'எனது பாயிரத்'துக்குரிய எட்டாந்திருமுறை என்னும் இந்நூல், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் நிறுவப் பெற்றுள்ள, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சியாளராக இருந்த அமரர், தாமரைத் திரு. வ. சுப்பையாபிள்ளை அறக்கட்டளையின் சார்பில், இவ்வாண்டு (1992), என்னால் நிகழ்த்தப் பெறும் சொற்பொழிவாகும்,

யான் ஐம்பதாண்டுகளாக அவ்வப்போது பல பொருள்களில் எழுதி வந்த ஆய்வுக் கட்டுரைகளைச் செந்தமிழ்ச் செல்வி என்னும் திங்கள் இதழ் மூலம் வெளியிட்டு என்னை ஊக்கப்படுத்திய அமரர், வ. சுப்பையாபிள்ளை நினைவு அறக்கட்டளைச் சொற்பொழி வாற்ற வாய்ப்புக் கிடைத்தமைக்குப் பெரிதும் மகிழ்கிறேன். அவ்வாய்ப்பை அளித்த உலகத்தமிழாராய்ச்சி நிறுவனப் பொறுப்பு இயக்குநர், முனைவர், அன்னிதாமசு அவர்களுக்கு மிக்க நன்றி யுடையேன். அவர்களுடன் இருந்து துணைபுரியும் முனைவர், ச. சிவகாமி அவர்களுக்கும் நன்றி.

என்னைச் சிறப்பாகத் தொல்காப்பிய உரைவள நூல் வெளியீட்டின் மூலம் தமிழுலகுக்கு அறிமுகப்படுத்தியவரும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மேனாள் இயக்குநரும் ஆம் முனைவர். ச. வே. சுப்பிரமணியன் அவர்களை நன்றியுடன் நினைக்கிறேன்.

வேண்டும் நூல் தந்துதவியவர் புலவர், க.வா. சச்சிதானந்தம், ஆய்வுக் கருத்துக்கு உதவியவர் முனைவர், வை. இரத்தினசபாபதி, தம் கல்லூரி நூலக நூல்களைப் பயன்படுத்திக் கொள்ள உதவிய வர்கள் மயிலம் சிவஞான பாலயசுவாமிகள் தமிழ்க்கல்லூரி

முதல்வர், முனைவர் து. கார்த்திகேயன் M.A., B.T., Ph.D., அவர்களும், நூலகர், க. நக்கீரன் M.A., B.L.I.S., அவர்களும் ஆவர். அவ்வப்போது வினாவிடை மூலம் கலந்துரையாடி உதவிய வர்கள், சு. திருநாவுக்கரசு, க. விநாயகம், மா. சற்குணம், இரா. இலட்சாராமன் ஆகிய முனைவர்கள், யாவர்க்கும் உளம் கனிந்த நன்றி. மாணிக்கவாசகர் பற்றிய என் கட்டுரைகளைத் தமது வீரசைவ முரசு எனும் திங்கள் இதழில் வெளியிட்டு வந்த கவிஞர் ஆ. திருவாசகன் அவர்களுக்கும் நன்றி.

என் எழுத்துகளை அழகுறப் படியெடுத்து ஒழுங்குபடுத்திய என் மருமகள் விசயலட்சுமி முருகவேலனுக்கு வாழ்த்துகள்.

யான் படித்த இடம், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம்; படிப்பித்த இடம், மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீமத் சிவஞான பாலயசுவாமிகள் திருமடத்தின் சிவஞானபாலய சுவாமிகள்தமிழ்க் கல்லூரி. இவ்விரு திருமடங்களின் அருள் ஞானி யர்களுக்கு என் வணக்கம்.

தாய்தண்டமிழ் நாட்டிற்பெருந் தக்கோர்பலர் முன்னே
போய்தங்குதற் கேற்றம்மிகப் போற்றப்பெறும் கல்வி
ஏய்தந்துநன் னெறிசேர்ந்திட என்னையருள் செய்த
தாய்தந்தையர் தாட்டாமரை தாழாதிறைஞ் சுவனே

ஆ. சிவலிங்கனார்
மயிலம்

## உள்ளே


1. எட்டாந் திருமுறை 1-5

திருமுறை — பெயர்க் காரணம் — திருமுறை வரலாறு—சில ஐயங்கள்—எட்டாந் திருமுறை ஆய்வுத் துணைகள்

2. மாணிக்கவாசகர் வரலாறு—திருவாசகமும் புராணங்களும் : 6-36

திருவாதவூரர்—குருமணி—நரிபரி—பிட்டுக்கு மண் சுமந்தது—தில்லைப்பயணம்.

அகச்சான்று :

நாடு—ஊர்—பெயர் — கல்வியறிவு — குடும்பம்—பாண்டியன்தொடர்பு — நரிபரியாக்கியது— கோகழி—குருமணி—குருமணிமனைவியார்—பிரம்படி பட்டது — குருமணியுடனிருந்த அடியவர்—புத்தரொடுவாதிட்டது.

புராணங்கள் கூறியன :

தந்தையார் பெயர்—குதிரைச் செய்தி—குருமணியைக் கண்ட இடம்—சிவஞானபோதம்—குருமணி தங்கிய நாள்—பாண்டியன் அவமதிப்பு—பாண்டியனை விட்டு மீளல்—பதிகம்பாடிய இடங்கள்—கெடிலநதி மாற்றம்—உத்தரகோசமங்கைப் புராணம் மட்டும் கூறும் கதை—முன்வரலாறு—திருவாதவூரர் புராணம் மட்டும் கூறும் கதை—மாணிக்கவாசகர் குடமுழ நந்தீசரா—மாணிக்கவாசகர் வீரசைவர்.

3. மாணிக்கவாசகர் காலம் 37-65

கி.பி. 8-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் : திருக்கோவையார்ச் சான்று. கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் : திருவாசகச் சான்று. கி. பி. 4-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் : புத்தர் செய்யுள் வெண்பா — சிவபுராணம் — ஆசீவகம் — மூவர்க்குப் பிற்பட்ட 9-ஆம் நூற்றாண்டினர் அல்லர் : திருமுறை

வகுப்பு—சிராப்பள்ளி—அரிகேசரி— தத்துவம் — மாயா வாதம்—சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் மாணிக்கவாசகரைக் கூறவில்லை—சிலவூர்கள்

4. சமயம் 66-76

வீரபுத்திரர் — உடலிடம் — உடல்புகுந்தான் — சச்சையன் — இட்டலிங்கபூசை— பழஞ்சொல்—மூன்று இலிங்கம் —பாதோதகம்—ஐயம்—சமயக் கோட்பாடு

5. திருவாசகம் 77-108

முன்னுரை—எண்ணிக்கை—யாப்பு— முறைவைப்பு —பாடிய தலங்கள்—பதிகத் தலைப்பு—பதிக உட் பொருள்—இறையனுபநூல்—தத்துவ சாத்திரநூல்—சிறந்த இலக்கணநூல்—உவமை நயம்: குருட்டுமாடு—குருட்டுப் பசு—சொல்லாட்சி—கற்பனை—முடிப்பு

6. திருக்கோவையார் 109-120

வரலாறு —பெயர்க்காரணம்—யாப்பு—பொருள்—உரை—நூற் சிறப்பு — அகச்சான்று — சில அரிய செய்திகள் : இரத்தினசபாபதி —மழை வேண்டி வழி பாடு—தில்லையைக் கண்டால் முத்தி—நந்தி—திருமால் வரம் கிடந்தது—காக்கைக்குணம் ஐந்து — நாய்க் குணம்—தில்லை கடற்கரையூர்—வீரசைவக்குறிப்பு-பிற

நிறைவுரை 121-125

துணை நூற்பட்டியல் 126-128

சிறப்புச் சொல்லகராதி 129

# சுருக்க விளக்கம்

அகத் - அகத்திணையியல்
அச்ச - அச்சப் பத்து
அச்சோ - அச்சோப் பதிகம்
அடைக் - அடைக்கலப் பத்து
அதிசய - அதிசயப் பத்து
அருட் - அருட்பத்து
அற்புத - அற்புதப் பத்து
அன்னை - அன்னைப் பத்து
ஆசை - ஆசைப் பத்து
ஆனந்த - ஆனந்த மாலை
உயிருண் - உயிருண்ணிப் பத்து
எண்ணப் - எண்ணப்பதிகம்
கண்ட - கண்டபத்து
கீர்த்தி - கீர்த்தித் திருவகவல்
குயிற் - குயிற்பத்து
குலாப் - குலாப்பத்து
குழைத் - குழைத்தபத்து
கோயில்மூத் - கோயில்மூத்த திருப்பதிகம்
கோயிற் - கோயிற்றிருப் பதிகம்
சிவ, சிவபு - சிவபுராணம்
சிவ, சிற்றுரை - சிவபுராணச் சிற்றுரை
செத்தி - செத்திலாப் பத்து
செய் - செய்யுளியல்
சென்னி - சென்னிப் பத்து
திருக்கழுக் - திருக்கழுக்குன்றப் பதிகம்
திருக்கோ - திருக்கோத் தும்பி
திருச்ச - திருச்சதகம்
திருச்சா - திருச்சாழல்
திருத்த - திருத்தசாங்கம்
திருத்தெள்- திருத்தெள்ளேணம்
திருத்தோ-திருத்தோணோக்கம்
திருப்படையா - திருப்படையாட்சி
திருப்படையெ - திருப்படையெழுச்சி
திருப்பள் - திருப்பள்ளியெழுச்சி
திருப்பாண் - திருப்பாண்டிப் பதிகம்
திருப்புல - திருப்புலம்பல்
திருப்பூ - திருப்பூவல்லி
திருப்பொற் - திருப்பொற் சுண்ணம்
திருப்பொன் - திருப்பொன் னூசல்
திருவண் - திருவண்டப் பகுதி
திருவம் - திருவம்மானை
திருவா - திருவாசகம்
திருவார் - திருவார்த்தை
திருவுந் - திருவுந்தியார்
திருவெண் - திருவெண்பா
திருவெம் - திருவெம்பாவை
திருவே - திருவேசறவு
திருவாத.புரா.-திருவாதவூரர் புராணம்
தொல் - தொல்காப்பியம்
நால். நான் - நால்வர் நான்மணி மாலை
நீத் - நீத்தல் விண்ணப்பம்
பண்டாய - பண்டாய நான்மறை
பன்.திரு.வர - பன்னிரு திருமுறை வரலாறு
பிடித்த - பிடித்த பத்து
பிரார்த் - பிரார்த்தனைப் பத்து
புணர்ச் - புணர்ச்சிப் பத்து
பொருள் - பொருளதிகாரம்
போற்றித் - போற்றித் திருவகவல்
மா.கா.ச - மாணிக்கவாசகர் காலமும் சமயமும்
மா.வ.கா - மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்
யாத்திரை - யாத்திரைப்பத்து
வாழா - வாழாப் பத்து

# எட்டாந் திருமுறை

**திருமுறை—பெயர்க்காரணம்**

திரு என்னும் சொல், மங்கலம்[1], செல்வம்[2], சிறப்பு[3], அழகு[4] என்னும் பொருள்களோடு திருவருள்[5] என்னும் பொருளிலும் திருவாசகத்தில் ஆளப்பட்டுள்ளது.

முறை என்னும் சொல், படிப்படியான ஒழுங்கு[6], தகுதி[7], நேர்மை[8], ஏழாம் வேற்றுமை யுருபு[9], முறையீடு[10] என்னும் பொருள்களில் ஆளப்பட்டுள்ளது.

அவற்றுள், திரு என்பதற்குத் திருவருள் என்னும் பொருளை யும், முறை என்பதற்கு முறையீடு என்னும் பொருளையும் கொண்டு, திருமுறை என்பதற்குத், திருவருளை வேண்டி எழுப்பும் முறையீடு என்னும் பொருளைக் கொள்ளலாம். முறை என்பது, முறையீட்டுப் பாக்களுக்காகிப், பின் அப்பாக்களின் தொகுதிக் காகிப், பின் அத்தொகுதியுடைய நூலுக்காகியது. தேவாரப் பதிகங்களை முறை என்ற சொல்லாலேயே ஆண்டுளது திருமுறை கண்ட புராணம்.[11]

'திருமுறை' என்பது சைவ சமய மரபுச் சொல்லாகத் தேவாரம், திருவாசகம் முதலிய சமய இலக்கியங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது; வைணவ மரபுச் சொல்லாக ஆழ்வார்களின் பாக்களின் தொகுதிக்குத் திவ்வியப் பிரபந்தம் என்று வழங்கப்பட்டு வருவது போல.

**திருமுறை வரலாறு**

திருநாரையூர் என்னும் ஊரில் ஆதிசைவக் குடும்பத்தில் பிறந்தவர் நம்பியாண்டார் நம்பி. அவர் தந்தையார் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார்க்குப் பூசனை செய்து வருபவர். ஒருநாள்,

---

1. கீர்த்தித் திருவகவல் 122
2. திருவண்டப் பகுதி 68
3. திருச்சதகம் 5
4. திருக்கோத்தும்பி 56
5. திருத்தெள்ளேணம் 15
6. திருவண்டப் பகுதி 127
7. போற்றித் திருவகவல் 180
8. திருச்சதகம் 22
9. திருவண்டப் பகுதி 178
10. நீத்தல் விண்ணப்பம் 41
11. திருமுறை கண்ட புராணம் 2

அவர் வெளியூர் சென்று வர வேண்டியிருந்ததால், பள்ளியில் பயின்று வரும் தம் மகனிடம், பொல்லாப் பிள்ளையார்க்குப் பூசனை செய்து வரும்படிச் சொல்லிப் போனார். நம்பியும் சென்று அன்போடு பொல்லாப் பிள்ளையார்க்குத் திருநீராட்டு செய்து, அப்பம், எள்ளுருண்டை முதலியவற்றைப் படையல் (நிவேதனம்) செய்தார். பிள்ளையார் அவற்றை உண்ணவில்லை. 'தம் தந்தையார் பூசனைக் காலங்களில் பிள்ளையார்க்குப் படைக்கும் பொருள்களைப் பிள்ளையார் உண்பார்' என்ற எண்ணம் உடையவரான நம்பி, தம் படையலைப் பிள்ளையார் உண்ணாமைக்கு வருந்தி, உண்ணுமாறு வேண்டினார். பயன் இல்லை. உடன் தம் படையலில் குறையுண்டோ என எண்ணித் தம் தலையை ஒரு கல்லில் மோதப் போனார். பிள்ளையார் தடுத்துப் படையலை உண்டார். மகிழ்ந்த நம்பி, பிள்ளையாரிடம், "எந்தையே! இனி நான் பள்ளிக்குச் சென்றால் காலம் தாழ்த்தமைக்காக ஆசிரியர் பாடம் சொல்ல மாட்டார்; ஆதலின் நீயே எனக்குப் பாடம் சொல்லியருள்க" என வேண்டினார். பிள்ளையாரும் அன்று முதல் அவர்க்குக் கலைகளைச் சொல்லி வந்தார். நம்பியும் பொல்லாப்பிள்ளையாராகிய நம்பியால் ஆட்கொள்ளப்பட்டமையின் நம்பியாண்டார் நம்பி எனப் போற்றப் பட்டார்.

அக்காலத்தில் இராசராசச் சோழன் திருவாரூரில் தங்கி இறைவனை வழிபட்டு, ஆண்டு வந்தான். அவன்பால் சிவனடியார்கள் வரும்போது, திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய பதிகங்களைப் பாடி மகிழ்வித்தனர். அரசன் மூவர் பதிகங்களும் கிடைக்கப் பெறாமல் வருந்தினான்.

ஒருநாள் திருநாரையூர் நம்பியின் பெருமைகளைச் சிலர் சொல்லக் கேட்டு அவரை நாடி வந்தான். வந்தவன், பல்வகைப் பழங்களும் பண்டங்களும் கொண்டு வந்து, 'அவற்றைப் பொல்லாப் பிள்ளையார் உண்ணுமாறு செய்ய வேண்டும்' என நம்பியிடம் வேண்டினான். நம்பியின் வேண்டுகோட்படிப் பிள்ளையார் அவற்றை உண்டருளினார். அரசன் மகிழ்ந்து நம்பியைப் போற்றித், தான் மூவர் பதிகங்களைத் தேடித் திரட்ட விரும்புவதைக் கூறினான். நம்பியும் பிள்ளையாரை வேண்டினார். பிள்ளையார், தேவாரப் பதிகங்கள் தில்லையில் நடராசப் பெருமான் திருக்கோயிலில் ஓர் அறையில் மூவராலும் பாதுகாப்பாக வைக்கப் பட்டிருப்பதாகவும், அறைக்கதவில் மூவர் கைச்சாத்திட்ட

இலச்சனையிருப்பதாகவும் கூறினார். அதை நம்பி அரசனிடம் கூற, இருவருமாகத் தில்லையை அடைந்து, தில்லை மூவாயிரவரை அவ்வறைக் கதவம் திறந்து பதிகங்களை வெளிக் கொணருமாறு வேண்டினர். தில்லை மூவாயிரவர், பதிகங்களுக்குரிய மூவரும் வந்தால்தான் கதவம் திறக்கப்படும் என்றனர். உடன் அரசன் மூவர் திருவுருவங்களையும் ஐம்பொன்னாற் செய்து வீதிவலமாகக் கொண்டு வந்து, தில்லை மூவாயிரவரையும் கதவம் திறக்க வேண்டினான். அவரும் வேறு வழியின்றித் திறந்தனர். உள்ளே பதிக ஏடுகள் செல்லுப்புற்றால் மூடப்பட்டுக் கிடந்தன. அவற்றை ஒழுங்குபடுத்திப் பதிகங்களை முறைப்படுத்த நம்பியை வேண்டினான் அரசன். நம்பியும், திருஞானசம்பந்தர் பாடல்களை மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் பாடல்களை மூன்று திருமுறைகளாகவும், சுந்தரர் பாடல்களை ஒரு திருமுறையாகவும் வகுத்தார்.

பின்னர், மற்றுமுள்ள சிவபிரான் தோத்திரப் பாடல்களை யெல்லாம் திரட்டி, மாணிக்கவாசகர் திருவாசகப் பாடல்களை, மூவர் திருமுறைகள் ஏழற்கும் அடுத்து எட்டாந் திருமுறையாக வகுத்தார். 'திருவிசைப் பாக்களை (திருப்பல்லாண்டு) ஒன்பதாவ தாகவும், திருமூலர் திருமந்திரத்தைப் பத்தாவதாகவும் வகுத்தார். பின்னர் இறையனார் முதல் பல புலவோர் பாடல்களைத் திரட்டிப் பதினொன்றாந் திருமுறையாக அமைத்தார். இறைவன் அருள்செய்தபடித் திரு எருக்கத்தம் புலியூரில் இருந்த யாழ்ப்பாணர் மரபில் வந்த ஒரு பாடினியைக் கொண்டுப் பதிகங்களுக்கு இசை யமைக்கச் செய்தனர் நம்பியும் அரசனும்.

இது திருமுறை கண்ட வரலாறு; உமாபதி சிவாசாரியார் என்பவரால் இயற்றப்பட்ட திருமுறை கண்ட புராணம் என்னும் நூலில் காணப்படுவது. பிற்காலத்தார் பெரியபுராணத்தைப் பன்னிரண்டாந் திருமுறை என்றனர்.

**சில ஐயங்கள்**

திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் கி. பி. 7ஆம் நூற்றாண்டினர். சுந்தரர் கி. பி. 8ஆம் நூற்றாண்டினர். இம் மூவரும் தாம் பாடிய தேவாரப் பதிகங்களைத் தில்லைத் திருச்சிற்றம்பல அறையொன்றில் வைத்துப் பூட்டித் தம் கைச் சாத்திட்டனர் என்றால், அதை எப்படி ஏற்பது என்பது புரிய வில்லை. சம்பந்தரும் நாவுக்கரசரும் தம் பதிகங்களை அறையில் வைத்துப் பூட்டிச் சென்றது, சுந்தரருக்குத் தெரிந்து, அவரும்

அப்படிச் செய்தாரா? பதிகங்களைப் பூட்டி வைக்கக் காரணம் என்ன? சுந்தரர் காலம் வரையிலும் அதற்குச் சற்றுப் பிற்காலம் வரையிலும் இருந்த தில்லைவாழ் அந்தணர்கள் யாது காரணத் தாலோ அப்பதிகங்களைத் திரட்டி மறைவாகப் பாதுகாத்து வந்தனர் என்று கொள்ளலாமா? இராசராசன் காலம்வரை அவை யிருக்கும் இடம் தெரியாமல் இருந்ததால் அப்படி எண்ணலாமா?

சுந்தரர் காலத்துக்குப் பின்னரும் இராசராசன் காலத்துக்கு முன்னரும் வாழ்ந்த தில்லைவாழ் அந்தணர்கள், யாது காரணத் தாலோ தில்லையை விட்டுச் செல்லப் பின்னர், வடநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட ஆரியப் பிராமணர்கள் ஓர் அரசன் துணையால் தில்லைக்கோயிலில் தங்கி நிலைத்த காலத்தில், அவர்களால் அப்பதிக அறை திறக்கப்படாமல் இருந்திருத்தல் வேண்டும். இராசராசன் பதிகங்களை வெளிக்கொணர எண்ணி அவ்வாரியர் களிடம் கூறியபோது, அவர்கள் மறுத்திருக்க வேண்டும். 'தேவார முதலிகள் மூவரும் வந்தால்தான் பதிக அறை திறக்கப்படும்' என்று அப்பிராமணர்கள் சொன்னதின் நோக்கம், பதிகங்களை வெளிக் கொணரக் கூடாது என்பதாகலாமா? இராசராசன் மூவர் திருவுருவங்களையும் ஐம்பொன்னால் செய்து கொண்டு வந்து நிறுத்தியபோது, அரசனுக்கு அஞ்சிய அவ்வாரியர் ஒன்றும் செய்ய இயலாது கதவு திறந்தனர் போலும் எனக் கொள்ளலாமா?

திருமுறை கண்ட புராணத்தில் ஏதோ ஒரு வரலாற்று உண்மை புதைந்து கிடக்கின்றது என்பது மட்டில் நன்கு புலப்படு கின்றது.

### எட்டாந் திருமுறை

திருமுறை என்பதற்கு 'இறைவன் திருவருளை வேண்டி முறை யிடும் நூல்' எனப் பொருள் கொண்டமைக்கு ஏற்பப் பன்னிரு திருமுறைகளுள், திருக்கோவையார், திருமந்திரம், பெரியபுராணம் என்பன அமையவில்லை. முறையீட்டுத் தோத்திரப் பாக்களாக மற்றையன அமைந்துள்ளன. திருக்கோவையார் அகத்துறைப் பாடல்களைக் கொண்ட நூல். முறையீட்டுக்கு அதில் இடம் இல்லை. திருமந்திரம் சமயச் சாத்திர நூல். பெரியபுராணம் அடியவர் வரலாற்று நூல். மாணிக்கவாசகர் பாடியதால் திருவாசகத்துடன் பிற்காலத்தார் திருக்கோவையாரையும் எட்டாந் திருமுறையிற் சேர்த்தனர் போலும். திருமுறை கண்ட புராணம் திருவாசகத்தை மட்டில் எட்டாந் திருமுறையாக வகுக்கப்பட்டது என்று கூறுவதும் நோக்குதற்குரியது.[1]

1. திருமுறை கண்ட புராணம் 26.

திருமந்திரத்தைச் சைவ சமய நூல் என்ற அடிப்படையில், சாத்திர நூல்கள் அக்காலத்தில்லாமையால் பத்தாம் திருமுறையாகச் சேர்த்தனர் போலும். பிற்காலத்தார் சைவ சமய நூல் என்ற அடிப்படையிலேயே பெரிய புராணத்தைப் பன்னிரண்டாந் திருமுறையாகக் கொண்டனர். அத்துடன் திருமுறை எண்ணிக்கையை முடித்து விட்டனர்.

**ஆய்வுத் துணைகள்**

எட்டாந் திருமுறைகளாகிய திருவாசகம், திருக்கோவையார் என்பனவற்றைப் பாடிய மாணிக்கவாசகர் வரலாற்றை, அந்நூல்களின் துணை கொண்டே ஒருவாறு உணரலாம். எனினும், அவர் வரலாறு கூறிய புராணங்களின் துணை கொண்டு பெரிதும் அவர் வரலாறு, காலம் சமயம் முதலியன எழுதப்படும்.

1. பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவிளையாடற் புராணம் (கி. பி. 13ஆம் நூற்றாண்டின் தொடக்கம்)
2. உத்தரகோச மங்கைப் புராணம் (கி. பி. 16ஆம் நூற்றாண்டு)
3. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் (கி. பி. 17ஆம் நூற்றாண்டு)
4. திருப்பெருந்துறைப் புராணம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, (கி. பி. 19ஆம் நூற்றாண்டு)
5. திருவாதவூரர் புராணம் (கி. பி. 18ஆம் நூற்றாண்டு)
6. திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம் (கி. பி. 18ஆம் நூற்றாண்டு)

இந் நூல்களோடு இக்கால ஆராய்ச்சியாளரின் ஆய்வு நூல்களும் துணை புரிய,

1. மாணிக்கவாசகரின் வரலாறு—அகச்சான்றும் புராணக் கதைகளும்
2. மாணிக்கவாசகர் காலம்
3. மாணிக்கவாசகர் சமயம்
4. திருவாசகம்
5. திருக்கோவையார்
6. நிறைவுரை

என்னும் ஆறு தலைப்புகளில் எட்டாந் திருமுறையாசிரியர் மாணிக்கவாசகர் பற்றிய கருத்துகள் எண்ணப்படும்.

# மாணிக்க வாசகர் வரலாறு

## திருவாசகமும் புராணங்களும்

### திருவாதவூரர்

பாண்டிய நாட்டுத் திருவாதவூரில் தோன்றியவர் மாணிக்க வாசகர். அவர் பெற்றோர் வீரசைவ நெறியினர்; அவர்கள் பெயரும் மாணிக்கவாசகர் இயற்பெயரும் அறியக் கூடவில்லை. அவரைத் திருவாதவூரிற் பிறந்தார் எனக் கொண்டு திருவாதவூரர் என்ற பெயராலேயே அவரைப் பற்றிய புராணங்கள், வரலாறு கூறுகின்றன. அதனால் அவரைத் திருவாதவூரர் என்ற பெயரினர் என்றே கொள்ளலாம்.

திருவாதவூரர் இளமையில் உலகியலறிவுக்கான கல்வியும் முத்தி நெறிக்கான தத்துவக் கல்வியும் கற்றவர். திருமணமாகி ஒரு பெண் குழந்தைக்கும் தந்தையாக விளங்கினார். மனையறத்தில் ஈடுபட்டிருந்த போதிலும் முத்தி நெறியிலும் நாட்டம் உடையவராயிருந்தார்.

திருவாதவூரரின் கல்வித் திறனை அறிந்த மதுரைப் பாண்டிய மன்னன் அவரைத் தன் தலைமை அமைச்சராக்கினான்.

### குருமணி

ஒருகால், பாண்டிய மன்னன், தன் அமைச்சராகிய வாதவூரரிடம் தன் படைபலத்துக்கு வேண்டிய குதிரைகளை வாங்கி வருமாறு கூறிப் பெரும் பொன்னையும் கொடுத்துப் போக விட்டான்.

குதிரை வாங்கப் புறப்பட்ட வாதவூரர், திருப்பெருந்துறைப் பக்கம் பரிவாரங்களுடன் வந்தார். ஒரு பொழிலிடத்து ஓர் அந்தணர் பல அடியவர் புடைசூழக் குருந்த மரத்தினடியில் வீற்றிருந்தார். அந்தணருடன் அவர் மனைவியும் இருந்தனர். அவர் இருந்த இடம் கோகழி எனப்படும்.

திருவாதவூரர் அவ்வந்தணரையணுகி வணங்கினார். அந்தணரும், அவரைத் தம் திருநீற்றை அணிவித்து ஐந்தெழுத்தையும் உரைத்தருளினார். மேலும், அவர் கரத்தில் இட்டலிங்கத்தையும்

எழுந்தருளப் பண்ணினார். ஐந்தெழுத்து திருவாதவூரர்க்கு மணி வார்த்தை யாகியது.

அன்று முதல் வாதவூரர் கோகழிப் பக்கம் தங்கித் தாம்வந்த காரியத்தில் ஈடுபாடில்லாமல், கொண்டு வந்த பொருள்களையெல் லாம் சிவத் தொண்டுக்கே செலவிடலானார். குருவே சிவமெனக் கொண்டார்.

**நரிபரி**

திருவாதவூரரின் செயல் பாண்டியனுக்கு எட்டியது. அவரை வரவழைத்துச் சிறைப்படுத்தினான். அவர், தம் குருமணியாகிய சிவனை எண்ணியவராய் வருந்தினார். சிவபிரான் நரிகளைப் பரிகளாக்கித், தான் குதிரைத் தலைவனாகக் கோலங்கொண்டு, தேவர்களைக் குதிரை வீரர்களாகச் செய்து பாண்டியனிடம் வந்து, குதிரைகளின் தரம் காட்டி, விட்டுச் சென்றான். பாண்டியன் மகிழ்ந்தான். திருவாதவூரரைத் துன்புறுத்தாது சிறைவீடு செய்தான்.

அன்றிரவே பரிகள் எல்லாம் நரிகள் ஆயின. மீளவும் திருவாத வூரரைச் சிறைப்படுத்தினான் பாண்டியன்.

**பிட்டுக்கு மண் சுமந்தது**

அந்நாளில் மதுரையில், வந்தி என்னும் நரை மூதாட்டி ஒருத்தி, மதுரை இறைவன்பால் அன்புடையவளாய்ப் பிட்டமுது செய்து, இறைவனுக்கு ஏற்பித்து, அதை விற்றுப் பிழைத்து வந்தாள். அவளுக்கு அருள் செய்யும் காலம் வந்தது; திருவாதவூரரை உலகப் பற்றிலிருந்து விடுவிக்கவும் காலம் வந்தது. அதனால் இறைவன் வையையாற்றில் வெள்ளப் பெருக்கெடுத்தோடச் செய்தான். வெள்ளம் மதுரையையே அழிக்கும் நிலையில் பெருகியது. உடன் பாண்டிய மன்னன், மதுரையார் ஒவ்வொரு வீட்டினரும் வையைக்குக் கரைகட்டி அடைக்க வேண்டி ஆணையிட்டான். வந்தி, தான் தனித்தவளாதலின், வையைக் கரைகட்ட வேண்டித் தனக்களந்துவிடப்பட்ட பாகத்தைக் கட்டியடைக்க ஆளில்லாமல், வருந்தி, இறைவனை வணங்கி நின்றாள். இறைவன் கூலியாளாக வந்து கரைகட்டியடைப்பதாகவும் கூலியாகப் பிட்டு வேண்டும் என்றும் கூறிக் கூலியாளாக வந்தமர்ந்தான். கூலியாளாகிய இறைவன், கரையை அடைக்கும் தொழில் செய்யாமலும் அடைப் பவரைக் கெடுத்தும் விளையாடிக் கொண்டிருந்தான். மதுரை யார்க்கு அளந்துவிடப்பட்ட கரைப் பகுதிகள் யாவும் கட்டியடைக்

கப்பட்டன. வந்தியின் பாகம் மட்டும் அடைக்கப்படவில்லை. கரை யடை படுவதைப் பார்வையிட்டு வந்த பாண்டியன், வந்தியின் பகுதி அடைபடாமைகண்டு, ‘அதைச் செய்ய வந்தவன் யார்?’ என்று கேட்டு, இறைவனாகிய கூலியாளைத் தன் கைப் பிரம்பால் அடித்தான். அவ்வடி கூலியாள் மேல்பட்டதோடு, எல்லாவுயிரி னங்கள் மேலும் உயிரில்லா இனங்கள் மேலும் பட்டது. உடன் கூலியாள் மறைந்தான் கரையும் அடைபட்டது. ‘நிகழ்ந்த யாவும் திருவாதவூரரின், சிவபக்தி காரணமாகவே நிகழ்ந்தன’ என்பது ணர்ந்த பாண்டியன், திருவாதவூரரைப் போற்றிப் புகழ்ந்து அவர் விருப்பப்படியே சிவத்தொண்டில் ஈடுபட விடுத்தான்.

**தில்லைப்பயணம்**

பாண்டியனை விட்டு நீங்கிய திருவாதவூரர், திருப்பெருந் துறைக் கோகழியிடத்தை அடைந்து, அங்கு முன்னர்த் தம்மையாட் கொண்ட குருமணியை மனக்கண்ணால் கண்டு வணங்கினார். அங்கேயே சிலநாள் தங்கினார். அந்நாளுள் ஒருநாள், இறைவன், குருமணி வடிவில் திருவாதவூரரின் கனவில் தோன்றி, “இங்குள்ள பொய்கையில் பேரொளி தோன்றும்; அதில் அடியவர் மூழ்குவர்; நீ மூழ்காமல் வணங்கி நின்று, பின்னர்ப் பல தலங்களில் சென்று வழிபட்டுத் தில்லைக்கு வருக” என்று சொன்னான். அப்படியே மறுநாள் பொய்கையில் பேரழல் தோன்ற அடியவர் பலர் அதில் மூழ்கினர்; சிலர் நின்று ஏங்கினர்; திருவாதவூரர், இறைவன் ஆணைப்படி அப்பேரொளியை வழிபட்டுத் தலங்கள் பல வழிபடச் சென்றார். உத்தரகோசமங்கை என்னும் ஊரில் பலநாள் தங்கி இறைவனை வழிபட்டார். திருவாதவூர், திருவண்ணாமலை. திருக்கழுக்குன்றம் முதலான பலவூர்களுக்கும் சென்று வழிபட்டு இறுதியில் தில்லையை யடைந்தார். அங்குப் புத்தரை வாதில் வென்று, ‘சிவபிரானே முழு முதற்பொருள்’ என நிலைநாட்டினார், பின்னர்த் தில்லையில் இறைவனோடு இரண்டறக் கலந்தார்.

இவ்வளவே எட்டாந்திருமுறை மூலம் நாம் அறியும் மாணிக்க வாசகர் வரலாறாகும். இனி, இவ்வரலாற்றுக்கான அகச்சான்று களைக் காணலாம்.

**அகச்சான்று**

**நாடு**

புராணங்கள் யாவும் மாணிக்கவாசகரைப் பாண்டியநாட்டினர் என்று கூறும்,

"தென் பாண்டி நாட்டானே"[1]
"தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானை"[2]
"தென்பாண்டி நாட்டானை"[3]
"பாண்டிநன் னாடுடையான்"[4]

எனப் பல விடத்தும் கூறியதன்றிச், சிவபிரானின் தசாங்கம் கூறும் இடங்களில், சிவபிரானுக்கு நாடு,

"மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்"[5]

எனவும்,

ஏதமிலா இன்சொல் மரகதமே ஏழ்பொழிற்கும்
நாதனமை யாளுடையான் நாடுரையாய்—காதலவர்க்
கன்பாண்டு மீளா அருள்புரிவான் நாடென்றும்
தென்பாண்டி நாடே தெளி[6]

எனவும் பாண்டி நாட்டைக் கூறியமையாலும் மாணிக்கவாசகர் நாடு பாண்டிய நாடு எனத் தெளியலாம்

**ஊர்**

மாணிக்கவாசகரின் ஊராகத் திருவாதவூர் கூறப்படுகின்றது. எல்லாப் புராணங்களும் திருவாதவூர் என்றே கூறுகின்றன. உலகச் செவிவழிச் செய்திகளும் திருவாதவூர் என்றே கூறின. கி.பி. 17 ஆம் நூற்றாண்டுப் புலவர், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும்,

" ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ"[7]

என மாணிக்கவாசகர் ஊர் திருவாதவூர் என்றே கூறியுள்ளார். ஆனால், திருவாசகத்திலோ திருக்கோவையாரிலோ அகச்சான்று நமக்குக் கிடைக்கப் பெறவில்லை.

" வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்"[8]

என ஓரிடத்து மாணிக்கவாசகர் கூறியது தக்க சான்றாக அமையாது. ஏன்எனின், திருவாதவூரில் சிவபிரான் தமக்கோ அல்லது யாருக்கோ பாதச் சிலம்பொலியைக் கேட்கச் செய்த

1. சிவபுராணம் 90
2. திருவம். 10
3. ஷை 19
4. திருப்படை 1
5. கீர்த்தி 17.18
6. திருத்தசா-2
7. நால்வர் நான்மணி மாலை 6
8. கீர்த்தி-53

செய்தியையே அவர் குறித்தார் என்னலாம். உத்தரகோச மங்கையுள் இருந்து வித்தக வேடம் காட்டியதாகவும், திருப்பூவ ணத்தில் தன் திருமேனியைக் காட்டியதாகவும் கூறிப் பின்னர், வாதவூரினில் வந்து பாதச் சிலம்பொலி காட்டிய செய்தி கூறுதலின், மாணிக்கவாசகர் தம்பிறந்தவூரைக் குறித்துக் கூறினார் என்பதற்கில்லை. வேறிடங்களில் திருவாசகத்தில் திருவாதவூர் சிறப்பித்துக் கூறப்படவும் இல்லை, எனவே புராணங்கள் ஒத்துக் கூறுவதாலும், பிற்காலத்தும் புலவர்களால் கூறப்படுவதாலும் மாணிக்கவாசகர் பிறந்தவூர் திருவாதவூர் எனக் கொள்ளலாம்.

பெயர்

திருவாதவூரிற் பிறந்தமையின் திருவாதவூரர் என்றே மக்களாலும் புராணங்களாலும் குறிக்கப்பட்டார். மாணிக்க வாசகர் என்ற பெயர், யாரோ ஒருவரால் முதலில் குறிக்கப்பட்டு அதுவே வழிவழியாகக் கூறப்பட்டுவந்த பெயராகலாம்.

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமும், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணமும், கோகழிக்குரு மணி, திருவாதவூரரின் பாடல்களைக் கேட்டு, அவரை, 'மாணிக்க வாசக' எனக் கூறியதாகக் கூறும். அதனால், திருவாதவூரர் மாணிக்கவாசகர் என்னும் பெயரினரானார் என்பர். திருவாலவா யுடையார் திருவிளையாடற் புராணம் மாணிக்கவாசகர் காலத் திற்குச் சில நூற்றாண்டுகள் கழித்து எழுந்தது. கி. பி.1 3ஆம் நூற் றாண்டில் எழுந்தது. அதனால், அப்புராண காலத்தில் திருவாத வூரர்க்கு மாணிக்கவாசகர் என்ற பெயர் உலகில் வழங்கி வந்திருத்தல் வேண்டும் என்பது பெறப்படும். பழைய கல்வெட்டு களில் திருவாதவூரர், திருவாதவூராளி நாயனார் எனவே குறிக்கப் படுகின்றார் என்பர்.[9]

"சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி"[10]

எனவும்,

"பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசில் மணியின் மணிவார்த்தை"[11]

---

9. பன்னிரு திருமுறை வரலாறு இரண்டாம் பாகம். பக்.51
10. திருச்ச-26 11. பண்டாய-7

எனவும் வரும் தொடர்களில் மணிவார்த்தை என்பது இறைவனின் புகழைக் குறிக்கும். மணி போலும் வாசகம் என்பது அதன் பொருள். இறைவன் தமது வாக்கினை மணிபோலும் வாசகத்துக்காக ஆக்கினான் எனக் குறிப்பதால், திருவாதவூரரது வார்த்தை, மணிவார்த்தையாகி, அவரது பாடல்கள் அடங்கிய தொகுப்புக்கு 'மாணிக்கவாசகம்' ஆகியது என்னலாம். அதனாலேயே கோயிற் புராணத்தில் உமாபதி சிவாசாரியார் மாணிக்கவாசகர் வணக்கத்தில்,

> '' தேசமலி தரப்பொதுவார் சிவபோகம் மிகவிளைவான்
> வாசகமா மாணிக்க மழைபொழிமா முகில் போற்றி,''[12]

என்று திருவாசகத்தை மாணிக்கவாசகம் என்றார். அதனால், மாணிக்கவாசகம் அருளிய திருவாதவூரர் மாணிக்க வாசகர் ஆனார் என்று கூறுவாரும் உளர். இக்கருத்திலேயே திருப்பெருந்துறைப் புராணம் உபதேசப் படலத்திலும்,

> மன்னநன் மணியே வார்த்தையாய்த் திரண்டு
> வரும்ஒரு காரணக் குறியால்
> அன்ன மாணிக்க வாசகர் எனும் பேர்
> ஆக இன்றாதி என்றறைந்தார்''

என்று கூறப்பட்டுளது என்றும் கூறுவர்.[13]

திருவாதவூரர் தம் குருமணியால் மாணிக்கவாசகர் என்றழைக்கப்பட்டார் எனக் கூறும் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமும், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணமும் மாணிக்கவாசகர் எனும் பெயரை அடிக்கடி ஆளாமையும் கருதத்தக்கதாம்.

''சிவபிரான், தமது சிந்தனையை அவனையே சிந்திக்க ஆக்கினான்; கண்களைத் அவன் திருவடி மலர்களைக் காணவே ஆக்கினான் வழிபாட்டினையும் அம்மலரடிக்கே ஆக்கினான்'' எனக் கூறிய மாணிக்கவாசகர், தமது வாக்கை மணி வார்த்தைக் காக்கினான் என்றது இறைவன் புகழைக் கூற ஆக்கினான் என்பதைக் குறியாது. வந்தனை என்பது வழிபாடு. வழிபாட்டில் புகழ்ப்பாடல் இசைப்பதும் அடங்கும். அதனால், 'தமது வாக்கினைச் சிவாயநம எனும் வார்த்தையைக் கூறுவதற்கு ஆக்கினான்' என்ற கருத்தில் தான் 'வாக்கு உன் மணிவார்த்தைக்

12. கோயிற் புராணம்
13. பன்னிருதிருமுறை வரலாறு இரண்டாம் பகுதி. பக். 52

காக்கி' என்று கூறினாராதல் வேண்டும். மணிவார்த்தை என்றது சிவாயநம எனும் ஐந்தெழுத்தை.

"என்னையோர் வார்த்தையுட் படுத்துப் பற்றினாய்"[14]

என்றவிடத்தில் வார்த்தை என்பது ஐந்தெழுத்தைக் குறித்தல் காணலாம். "ஓர் வார்த்தை—ஒரு தொடர்மொழி. அது திருவைந்தெழுத்து மந்திரம். அதன் கருத்து 'நீ என் அடியவன் என்பது'[15] என அருணைவடிவேல் முதலியார் எழுதிய குறிப் புரையும் இங்கு நினைக்கத் தக்கது.

மாணிக்கவாசகரால் கூறப்பட்ட 'வார்த்தை' எனும் சொல் ஐந்தெழுத்தைக் குறிக்குமானால் 'மணிவார்த்தை' எனும் தொடர் மூலம் 'மாணிக்கவாசகர்' எனும் பெயர் வந்திருக்கக் கூடும் எனும் உய்த்துணர்வு பொருந்தாதாம்.

மாணிக்கவாசகர் எனும் பெயர்க் காரணத்தின் மூலம், அறியக் கூடவில்லை என்பதே நன்று.

**கல்வியறிவு**

கல்வி என்பது ஒரு கடல்; அதில் மூழ்குபவர் பிழைப்பது அரிது என்னும் கருத்துடையவர் மாணிக்கவாசகர். "கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்"[16] என்பது அவர் வாக்கு. இதனால் கல்வி கற்கத் தொடங்கி அளவு கடந்த நூல்களைக் கற்றவர் என அறியலாம்.

கல்வி உலகவியற் கல்வி, சமயக்கல்வி என இருவகைப்படும். உலகவியற் கல்வி கற்றமையால் தான் பாண்டியனின் அமைச்சராக அமர முடிந்தது. சமயக்கல்வி பல வகைப்பட்டது. அவர் காலத் தில் அவர் சார்ந்த சைவசமயமேயன்றி ஆசீவகம், பௌத்தம், சைனம், என்னும் 'கடவுள் இல்லை' என்னும் சமயங்களும், வைணவம், சௌமியம், வாமம் முதலிய சமயங்களும் இருந் துள்ளன. அவைபற்றிக் கூறும் நூல்களையெல்லாம் நன்கு கற்றவராய் அவற்றின் கடவுளர் யாவரும் சிவபிரானை நோக்கப் புழுவுக்குச் சமம் என்றார்.[17] கடவுள் இல்லை என்பவரை,

"ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்"[18]

---

14. செத்திலா. 2
15. ஷை குறிப்புரை
16. போற்றித். 37
17. திருவண்ட 17-19
18. போற்றித் 46, 47

என்றார். எல்லாச் சமய நூல்களையும் நன்கு கற்றுத் தெளிந்தமையால், பௌத்த சமயம் முதலியவற்றைப் "புத்தன் முதலாய புல்லறிவிற் பல் சமயம்"[19] என்றார். சிவபிரானையன்றி வேறு கடவுளரை வணங்குபவரைக் 'கற்றிலாதவர்' என்றும், அவர்களைக் கண்டு தாம் அஞ்சுவதாகவும்[20] கூறினார்.

பிற சமயத்தாரின் கல்வி புரை (குற்றப்) படும் கல்வி என்று, அக்கல்வியுடையாரைச் சார்ந்து கெடாமல் இருக்க வேண்டிக் "கற்றாரை யான் வேண்டேன்"[21] என்றார்.மேலும் தாம் நிறையக் கற்றிருந்தும் அக்கல்விகளாற் பயன் இல்லையென்று தெளிந்து "கற்பனவும் இனி அமையும்"[22] என்றும் கூறினார்.

கற்க வேண்டிய கல்வியை, அதாவது சிவபரம்பொருளை யடைதற்குரிய கல்வியை அவர் விரும்பிக் கற்றார். அக்கல்வியே பொல்லா (குற்றப்படா)க் கல்வி[23] என்றார். அக்கல்வியை முழுதும் பயிலாத தமது குறையை,

"கற்றறியேன் கலைஞானம்"[24]

என்றும்,

"கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை"[25]

என்றும்,

"கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை"[26]

என்றும் கூறினார்.

எனவே தாம் கற்றதைப் பலவிடங்களில் கூறியமையால் அவர் அக்காலக் கல்விகளை நன்கு கற்றுத் தெளிந்தவர் என்பது உணரலாம்.

குடும்பம்

"மாணிக்கவாசகர் திருமணமானவர்; ஒருபெண் குழந்தைக்குந் தந்தையானவர்"[27] என்று மறைமலையடிகள் கூறுவர். அன்னைப் பத்து மகளை வைத்துப் பாடியது என்பர்.

---

19. திருத்தோ-6
20. அச்சப்-1
21. திருப்புலம்-3
22. ஷை-3
23. அடைக்-1
24. திருவே-5
25. கண்ட-4
26. திருவம்-5
27, மா. வ. கா. பக்கம்-21

தாம் துறவு கொண்ட போதும் இல்லற இன்பத்தில்—சிற்றின்பத்தில் திளைத்த நினைவினராய்ப் பலவிடங்களில் பாடியுள்ளார்.

''வேனில்வேள் மலர்க்கணைக்கும்
வெண்ணகைச் செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும்
பதைத்துருகும் பாழ் நெஞ்சே''[28]

என்றும்,

''தனியனேன் பெரும் பிறவிப் பவ்வத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை''[29]

என்றும்,

''மானி லாவிய நோக்கியர் படிறிடை
மத்திடு தயிராகி''[30]

என்றும்,

''......... சோரனேன் இங்கு ஒருத்திவாய்
துடித்த வாறும் துகில் இறையே
சோர்ந்த வாறும் முகம்குறுவேர்
பொடித்த வாறும் இவையுணர்ந்து
கேடென் றனக்கே சூழ்ந்தேனே''[31]

என்றும்,

''கொள்ளேர் பிளவக லாத்தடங்
கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளேன் எனினும்''[32]

என்றும்,

''செழுகின்ற தீப்புகு விட்டிலிற்
சின்மொழி யாரிற் பன்னாள்
விழுகின்ற என்னை''[33]

என்றும்,

---

28. திருச்ச-19
29. ஷை-27
30. ஷை-40
31. ஷை-57
32. நீத்தல்-2
33. ஷை-5

"கொழுமணி யேர்நகையார் கொங்கைக்
குன்றிடைச் சென்று குன்றி
விழுமடி யேனை"[34]

என்றும்,

"முதலைச்செவ் வாய்ச்சியர் வேட்கைவெந்
நீரிற் கடிப்ப மூழ்கி
விதலைச் செய் வேனை"[35]

என்றும்,

"உழைதரு நோக்கியர் கொங்கைப்
பலாப்பழத் தீயின் ஒப்பாய்
விழைதரு வேனை"[36] என்றும்,

இப்படிப் பல இடங்களில் மாணிக்கவாசகர் தம் காமக் குறிப்பினையும் மனைவிபால் வைத்த காம வேட்கையினையும் குறித்தது காணலாம். இக் கூற்றுகளுக்கு, 'ஞானிகள் உலகவர் செயலைத் தம் செயல்போல் கூறும் மரபினர் ஆதலின், மாணிக்கவாசகரும் இவ்வாறெல்லாம் கூறினார்' என்று அமைதி கூறலாம். அது ஏற்பதற்கில்லை.

மாணிக்கவாசகர், தமது நெஞ்சம் இறைவன் பாலும் மனைவி பாலும் அடிக்கடிச் சென்று உலவுவதற்கு ஓர் உவமை கூறினார். நெசவாளனது தறியில், பாவின் ஊடே இப்படியும் அப்படியமாக— இடவலமாகச் சென்று வரும் குழலை ஒப்புமைப்படுத்திக் கூறிய பாடல் வருமாறு :

மாவடு வகிரன்ன கண்ணி
பங்காநின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே
யிடுவாய்நின் குறிப்பறியேன்;
பாவிடை யாடு குழல் போற்
கரந்து பரந்த துள்ளம்
ஆகெடு வேனுடையாய்
அடியேன் உன் அடைக்கலமே[37]

இப்பாடலில், என் மனம், பாவிடையாடு குழல்போல் கரந்து, நின்திருவடி மலரையும், மகளிர் மனையையும் நாடுதலின், என்னை

34. ஷை-27
35. ஷை-41
36. ஷை-46
37. அடைக்-8

நின் மலரடிக்குக் கூவிடுவாயோ அன்றிப் பிறவிக்கே தள்ளுவாயோ நின் குறிப்பறியேன்'' என்று வருந்தினார்.

மாணிக்கவாசகர், தம் மனைவியைப் பன்மையால் பலவிடத்தும் கூறினாலும், பல மகளிரைக் கூறினார் என்று கொள்ளாமல் தம்மனைவியையே நினைந்து கூறினார் எனக் கொள்ளுதல் வேண்டும். ''சோரனேன் இங்கு ஒருத்திவாய் துடித்தவாறும்[38] என ஒருமையிற் கூறியது தம் மனைவியையே யாம்.

பொதுவாகச் சிற்றின்பத்தில் மாணிக்கவாசகருக்கு அதிக ஈடுபாடு இருந்தது என்பதை மேலே கண்ட செய்யுட்கள் மூலம் அறியலாம். போற்றித் திருவகவலில் உயிர்கள் பல துன்பங்களினின்றும் பிழைக்க வேண்டும் என்பதை விவரித்துக் கூறி வந்தபோது,[39] மகளிரின் நோக்கத்தினின்றும் பிழைக்க வேண்டும் எனக் கூறவந்தவர்,

''கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல்''[40]

உடைய மாதரைப்பற்றி,

''......... நெருங்கி யுள்மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்துமுன் பணைத்து
எய்த்துஇடை வருந்த எழுந்து புடை பரந்து
ஈர்க்குஇடை போகா இளமுலை மாதர்''[41]

என்றார். எனவே, மாணிக்கவாசகர் சிற்றின்பத்தும் நாட்டமுடையவராய் இருந்தார் என்னலாம்.

**பாண்டியன் தொடர்பு**

மாணிக்கவாசகர் பாண்டியனிடம் அமைச்சராய் இருந்தவர் என்பதற்குச் சான்று இல்லை. ஆனால் பாண்டியன் தொடர்புடையவராக இருந்தார் என்பதற்குச் சில சான்றுகள் உண்டு.

''பாண்டியன் தனக்குப் பரிமா விற்று''[42]

எனவும்,

''நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி''[43]

எனவும்,

38. திருச்ச-61
39. போற்றித்-11-49
40. ஷை-30, 31
41. ஷை-31-34
42. கீர்த்தி-38
43. போற்றி-213, 214

"மதுரையர் மன்னன் மறுபிறப் போட
மறித் திடுமே"[44]

எனவும்,

"தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல்"[45]

எனவும், பாண்டியனைப் பற்றிக் கூறியதால் ஓரளவு தெளியலாம். பாண்டியன் பெயராக அரிமர்த்தன பாண்டியன் என்று கூறும், பரஞ்சோதி திருவிளையாடற் புராணம். உறுதிப்படுத்தச் சான்றில்லை. ஆராய்ச்சியாளர் ஒருவர், வரகுண பாண்டியன் என்பவனே மாணிக்கவாசகரை அமைச்சராகக் கொண்டவன் என்பர். அவரை மறைமலையடிகளார்,

"ஓடும் பல்நரி ஊளைகேட் டரனைப்
பாடின என்று படாம்பல அருளியும்"

என்று பட்டினத்தாரால் குறிக்கப்பட்ட வரகுணன், நரிகளின் ஊளைக் குரலைக் கேட்டு, அக்குரல் சிவபிரானின் பெயர்போலக் கருதி, அந்நரிகளுக்குப் போர்வை வழங்கினான்; அப்படிப்பட்ட சிவபத்தனா மாணிக்கவாசகரைத் துன்புறுத்துவான்?" எனக் கேட்டு மறுத்தனர்.[46]

## நரிபரியாக்கியது

நரியைப் பரியாக்கிப் பாண்டியனிடம் விற்ற செய்தி திருவாசகத்தில் கூறப்பட்டுள்ளது.

"அரியொடு பிரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்"[47]

"ஒருங்குதிரை யுலவுசடை யுடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை யாக்கியவா றன்றேயுன் பேரருளே"[48]

"நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞாலம் எல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையாய்"[49]

---

44. திருப்பாண்-2
45. திருப்பூ-16
46. மா. வ. கா, பக்-200
47. கீர்த்தி-35, 36
48. திருவே-1
49. ஆனந்த-7

என்பன நரியைக் குதிரையாக்கிய செய்தியைக் குறிக்கும். பின் வருவது அக்குதிரைகளைப் பாண்டியனுக்கு விற்றதைக் குறிக்கும்.

"ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டியன் தனக்குப் பரிமா விற்று"[50]

இறைவன் குதிரைச் சேவகனாய், வணிகனாய் வந்த செய்தியைப் பல பாடல்களிற் கூறியுள்ளார் மாணிக்கவாசகர்.

நரிபரியாக்கிய செய்தியைக் கூறிய மாணிக்கவாசகர், பரிகள் நரிகளாகிய செய்தியைக் கூறவில்லை. ஆனால், குறிப்பாகக் கூறியுள்ளார்.

"அந்தண னாகி ஆண்டுகொண் டருளி
இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்"[51]

என்றவிடத்து 'இந்திர ஞாலம்' (வித்தை) என்றது, பரி நரி யாக்கியதைக் குறிக்கும் என்பர் அருணை வடிவேலர்.[52]

**கோகழி**

"கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க"[53]

என்பது, மாணிக்கவாசகர் 'கோகழி' என்னுமிடத்தில் வீற்றிருந்த குருமணி, தம்மையாட்கொண்டவர் என்பதைக் குறிப்பிட்டதைக் குறிக்கும். அக்கோகழி என்பது எவ்விடம்?

கோ என்பது பசு. 'கோகழி' என்பது, 'பசுத்தன்மையைக் கழித்த இடம்' எனப்படும். அவ்விடம் திருவாவடுதுறை என்றும், திருப்பெருந்துறை என்றும் பலர் பலவாறு கூறுவர். சைவப் பெரியார் மு. அருணாசலம், திருப்பெருந்துறைக் கோயிலைக் குறிக்கும் என்பார். அதற்கு அவர் இரண்டு காரணங்கள் கூறுவர். (1) மாணிக்கவாசகரின் பசுத்துவம் கழித்த இடம் திருப்பெருந் துறைக் கோயில். (2) திருப்பெருந்துறை என்பது ஊர்ப் பெயர்; அவ்வூர்க் கோயிலுக்குக் கோகழி என்பது பெயர். ஊருக்கு ஒரு பெயரும் கோயிலுக்கு ஒரு பெயரும் இருப்பது உண்டு. வெண்ணை நல்லூர்—அருட்டுறை, கரூர்—ஆனிலை, கச்சி—ஏகம்பம் எனக் காணலாம்[54] என்பர்.

பசுத்துவத்தைக் கழித்தவிடம் கோகழி என்பது பொருந்தாது. அவ்வாறு ஆட்சியில்லை. பலருக்குப் பசுத்துவம் கழித்த ஊர்கள் உண்டு. அவை கோகழி எனப்படவில்லை.

---

50. கீர்த்தி-37, 38
51. ஷெ-42, 43
52. ஷெ குறிப்புரை
53. சிவ-3
54. திருவாசகம் சில ஆராய்ச்சிக் குறிப்புகள், பக்-30

திருப்பெருந்துறை ஊர்ப்பெயர்; கோகழி, கோயிற் பெயர்; என்றால், திருப்பெருந்துறைக் கோகழி எனச் சேர்த்தே கூறப்படல் வேண்டும். 'கருவூர் ஆனிலை', 'கச்சி ஏகம்பம்' என்பன போலக் கூறப்படல் வேண்டும். ''கடந்தையுள் தூங்கானை மாடச்சுடர்க் கொழுந்தே''[55] என அப்பரடிகள் பெண்ணாகடத்தையும் கோயிலையும் கூறியிருப்பதும், ''தக்கிருந்தார் ஆக்கூரில் தான் தோன்றி மாடமே''[56] என ஞானசம்பந்தர் ஆக்கூரையும் கோயிலையும் கூறியிருப்பதும், ''வெண்ணைநல்லூர் அருட்டுறை''[57] எனச் சுந்தரர் திருவெண்ணை நல்லூரையும் கோயிலையும் கூறியிருப்பதும் காணலாம். மாணிக்கவாசகரே ''தேசமெல்லாம் புகழ் கச்சித் திருவேகம்பன்''[58] எனக் காஞ்சிபுரத்தையும் கோயிலையும் சேர்த்துப் பாடியுள்ளார். திருப்பெருந்துறையையும் கோயிலையும் சேர்த்து யாரும் பாடவில்லை.

கோகழி என்பது கோயிலாகாது; தனியிடம் என்பதற்குப் பின்வருவன சான்று பகரும்.

(1) ''கோகழி யாண்ட குருமணி'' என்றது போலக் ''கூடல் இலங்கும் குருமணி''[59] என்றார்.

(2) பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி''[60]

என்பது மணிவாசகர் வாக்காம். இதில் பாராய்த்துறை, சிராப் பள்ளி, குற்றாலம் ஆகிய ஊர்கள் கோகழிக்கு முன்னரும் ஈங்கோய் மலை, பழனம், கடம்பூர் ஆகிய ஊர்கள் பின்னரும் கூறி இடையில், 'கோகழி' கூறியதால் மற்றைய ஊர்களைப் போலக் கோகழி என்பதும் ஒருதனி ஊர் எனக் கொள்ளுதல் வேண்டும்,

---

55. 5ஆம் திருமுறை, திருத் தூங்கானைமாடம்-1
56. 2ஆம் திருமுறை, திரு ஆக்கூர்த்தான் தோன்றி மாடம்-1
57. 7ஆம் திருமுறை 1 : 1
58. திருப்பொற்-4
59. போற்றித்-91
60. போற்றித்-153-160

(3) நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணியெழு கோகழிக் கரசைப்—பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண்[61]

இப்பாடலில், திருப்பெருந்துறை, கோகழி, உத்தரகோச மங்கை எனும் தனித்தனியூர்கள் கூறியிருப்பதும் காணலாம்.

(4) "வாதவூர் இறைவன் ஓதிய மொழிகளுள்
மூவரும் ஓதிய முதுபதி யொழியத்
தீதிலாப் பதிமற் றியாதென வினவின்
திருப்பெருந்துறையும் திருக்கோ கழியும்
கூர்புகழ் உத்தர கோசமங் கையும்"

இவ்வரிகள் மணிவாசகர் திருப்பதிகக் கொத்து எனும் பாடலில் உள்ளன.[62] இதில் கோகழி தனியிடமாகக் கூறப்பட்டது காணலாம்.

மேலே கூறப்பட்டவற்றால் 'கோகழி' என்பது, ஒரு தனியிடம் என்பது பெறப்படும். அவ்விடம் யாது? அது திருப்பெருந்துறையைச் சார்ந்த பொழிலிடமேயாகும். அங்குதான் குருமணி மாணிக்க வாசகரை ஆட்கொண்டார். மதுரைப் பெருநகர், மாணிக்கவாசகர் காலத்தில் மதுரை என்றும், கூடல் என்றும் அண்மையூர்களாகத் தனித்தனி யிருந்துள்ளன. அதனால் அவர் "ஆடக மதுரைக்கரசே போற்றி"[63] என்றவர், அடுத்த வரியாகக் "கூடல் இலங்கும் குருமணி போற்றி"[64] எனக் கூறினார். மதுரையும் கூடலும் போலத் திருப்பெருந்துறையும் கோகழியும் ஆகலாம்.

**குருமணி**

மாணிக்க வாசகரை ஆட்கொண்ட குருமணி, அவருக்குத் திருநீறணிவித்தார். ஐந்தெழுத்தை அருளினார். கையில் இட்ட லிங்கத்தை எழுந்தருளுவித்தார்.

(1) "முன்னீறும் ஆதியும் இல்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி யிமையோர்கள் தாம் நிற்பத்
தன்னீறு எனக்கருளி"[65]

---

61. பண்டாய-5
62. மா. கா. ச. பக்-37, திருவாசகம் சில ஆராய்ச்சிக் குறிப்புகள் பக் 30-50
63. போற்றித்-70
64. மேற்படி-71
65. திருப்பொற்-2

(2) தன்சுண்ண வெண்ணீ றணிவித்துத்
தூய் நெறியே சேரும் வண்ணம்
அண்ணல் எனக் கருளியவாறு
ஆர் பெறுவார் அச்சோவே"[66]

எனும் மணிவாசகர் வாக்குகள், குருமணி திருநீறணிவித்ததைக் குறிக்கும்.

குருமணியானவர் ஐந்தெழுத்து ஓதுவித்ததை,

(1) "என்னை யோர் வார்த்தையுட் படுத்துப் பற்றினாய்"[67]
என்றும்,

(2) நீக்கி முன்எனைத் தன்னொடும் நிலாவகை
குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து[68]

என்றும்,

(3) "நானேயோ தவம் செய்தேன் சிவாயநம
எனப்பெற்றேன்"[69] என்றும் கூறியன புலப்படுத்தும்.

குருமணி இட்டலிங்கப் பெருமானை மாணிக்கவாசகர் கையில் எழுந்தருளுவித்ததைப் பின்வருவன காட்டும்.

(1) "மாலமுதப் பெருங்கடலே மலையே
உன்னைத் தந்தனை"[70]

என்றதும்,

(2) தந்தது உன்தன்னை"[71]
என்றதும்.

(3) தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்"[72]
என்றதும் காணலாம்.

குருமணியானவர், மாணிக்கவாசகர் முடிமீது தம் திருவடியை வைத்துத், 'தாடலை' செய்ததைப் பின்வருவன குறிக்கும்.

(1) "இருங்கழல், சென்னியில் வைத்த சேவக"[73]

(2) "பூவா ரடிச்சுவடு என்தலைமேற் பொறித்தலுமே
தேவான வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ'![74]

66. அச்சோ-4
67. செத்திலா-2
68. அதிசய-8
69. திருவே-10
70. திருச்ச-20
71. கோயில்திருப்-10
72. திருவண்ட-162
73. போற்றித்-129-130
74. திருத்தெள்-7

(3) "இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும்
துறந்தொழிந்தேன்"[75]

(4) "சீரார் திருவடி என் தலைமேல் வைத்த பிரான்"[76]

குருமணி மனைவியார்

கோகழியில் அடியவர் சூழ இருந்த குருமணி, தம் மனைவியார் உடன் இருக்க இருந்தவர் என்பதைத் திருவாசகப் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

(1) "மருவார் மலர்க்குழலி மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டு கொண்ட
திருவான தேவன்"[77]

(2) "நானும் என் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோம்
தானும் தன் தையலும் தாழ்சடையோன்
ஆண்டிலனேல்"[78]

(3) "அரையாடு நாகம் அசைத்த பிரான் அவனியின்மேல்
வரையாடும் மங்கைதன் பங்கொடும்வந் தாண்ட திறம்"[79]

(4) "குணங்களும் குறிகளும் இல்லாக் குணக்கடல்
கோமளத் தொடும் கூடி
அணைந்து வந்தெனை ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே"[80]

(5) "தெங்குலவு சோலைத் திருவுத்தர கோச மங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையும் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான்"[81]

(6) "வாரே றிளமென் முலையாளோடு
உடன்வந் தருள அருள்பெற்ற
சீரே றடியார்"[82]

என்பன காண்க.

---

75. திருப்பூ-1
76. மேற்படி-10
77. திருக்கோத்-14
78. மேற்படி-15
79. திருத்தெள்-6
80. அற்புத-6
81. திருப்பொன்-9
82. திருச்ச-53

தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ [83]

என்பது உமையொருபாக வடிவைக் குறிக்கும் பாடல், கோத்தும்பியை விளித்து, ''இன்று நாம் காணும் இக்குருமணி, மனைவியுடன் இரண்டு உருவமுடன் தனித்தனிக் காணப்படினும். குருமணி சிவபிரானேயாதலின் தொன்மைக் கோலமாகிய உடைகளாகிய தோலும் துகிலும், பூசுவனவாகிய வெண்ணீறும் சாந்தும், கைகளில் சூலமும் கிளியொடு வளையலும் உடைய கோலத்தையே நோக்கிக் குளிர்ந்தூதுவாயாக'' என்றார். இப்பாடலும் மாணிக்க வாசகர் கண்ட குருமணி மனைவியுடன் இருந்தவர் என்பதைப் புலப்படுத்தும்.

### பிரம்படிபட்டது

சிவபிரான் பிட்டு வாணிச்சிக்குக் கூலியாளாய் வந்து மண் சுமந்ததும், கூலியாகப் பிட்டு வாங்கி உண்டதும், வையைக் கரை யடைத்தலைச் செய்யாமல் விளையாடியபோது பாண்டியனால் பிரம்படிபட்டதும் ஆகிய செய்திகள் திருவாசகத்தில் காணப்படு கின்றன.

(1) ''ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்''[84]

(2) ''மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்''[85]

(3) மண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ''[86]

என்பன காணலாம்.

### குருமணியுடனிருந்த அடியவர்

குருமணியானவர், அடியவர் புடைசூழ வீற்றிருந்தவர். அவ்வடியவர், திருப்பெருந்துறைப் பொய்கையில் தோன்றிய பெரு நெருப்பில் மூழ்கிய செயலும், அவருள் சிலர் மூழ்காமல் குருமணி

83. திருக்கோத்-16
84. கீர்த்தி 46-47
85. திருவம்-8
86. திருப்பூ-16

யைக் காணாமல் அரற்றிய செயலும் மாணிக்கவாசகரால் கூறப்பட்டுள்ளன. தம்மைத் தில்லைக்கு வருக எனப் பணித்ததையும் கூறியுள்ளார் மாணிக்கவாசகர்.

''நாயி னேனை நலமலி தில்லையுள்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை ஈங்கொழித் தருளி''[87]

எனத் தம்மைத் தில்லைக்கு வருக எனப் பணித்ததைக் கூறினார். அடியவர்களுள் சிலர் குருமணி மறைந்த போது உடன் சென்றதையும், சிலர் எரியிற் பாய்ந்ததையும், பாயாதவர் அடைந்த நிலைகளையும்,

''அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்
ஒன்ற ஒன்ற வுடன்கலந் தருளியும்,
எய்தவந் திலாதார் எரியிற் பாயவும்,
மாலது வாகி மயக்கம் எய்தியும்
பூதல மதனிற் புரண்டு வீழ்ந் தலறியும்,
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி
நாத நாத என்றழு தரற்றிப்
பாதம் எய்தினர் பாதம் எய்தவும்,
பதஞ்சலிக் கருளிய பரம்நா டகஎன்று
இதம்சலிப் பெய்திநின் றேங்கினர் ஏங்கவும்.''[88]

எனக் குறித்துள்ளார்.

''அடியா ரானார் எல்லாரும்
வந்துன் தாள் சேர்ந்தார்''[89]
''பேரா வுலகம் புக்கார் அடியார்[90]
''......... அழல் சேர்ந்த
மெழுகே யன்னார் மின்னார்
பொன்னார் கழல்கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தார்''[91]

இப்படிப் பலவிடங்களில் அடியவர்கள் இறைவனடி சேர்ந்தமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

---

87. கீர்த்தி 127-129
88. மேற்படி 130-139
89. திருச்ச 83
90. மேற்படி 87
91. திருச்ச 88

### புத்தரொடு வாதிட்டது

புத்தரொடு வாதிட்டதற்குச் சான்று வெளிப்படையாகத் திருவாசகத்திற் காணப்படவில்லை. என்றாலும்,

புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்க"[92]

என்னும் வரிகள் குறிப்பாகப் புத்தரொடு வாதத் தொடர்பு இருந்ததைக் குறிக்கும் என்னலாம்.

திருச்சாழல் என்னும் பதிகம், வினா விடையாக அமைந் திருப்பதும், வினாவானது ஒரு பெண்ணை விளித்து வினாவிய தாக அமைந்திருப்பதும், வினாக்கள் சிவபிரானிடம் உள்ள குறைபாடுகளைக் கொண்டனவாக அமைய விடைகள் குறை பாடுகளுக்குக் காரணங்கள் கூறுவதாக அமைந்திருப்பதும் கொண்டு புத்தரொடு வாதிட்டதையே குறிக்கும் என்னலாம்.

### புராணங்கள் கூறியன

இனிப் புராணங்கள் கூறிய மாணிக்கவாசகர் வரலாறு பற்றிக் காண்போம்.

மாணிக்கவாசகருக்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர்த் தோன்றின, புராணங்கள். அவ்வக் காலங்களில் ஆங்காங்கு வாய்வழியாக வந்த கதைகளை வைத்து அவரவர்க்குத் தோன்றிய வாறு புனையப்பட்டன அவைகள். அதனால் அவற்றிடையே வேறுபாடுகள் பலவுளவாயின. ஒன்றற்கொன்று மாறுபட்டும் உரைப்பன வாயின. பொய்யுரைகளும் உளவாயின.

1. **தந்தை தாய் பெயர் :** மாணிக்கவாசகரின் தந்தையார் சம்புபாதாசிரியர் என்றும், தாயார் பெயர் சிவஞானவதியார் என்றும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் திருப்பெருந்துறைப் புராணம் கூறும். எந்தப் புராணத்திலும் காணப்படாதது இது. 19ஆம் நூற்றாண்டினரான பிள்ளையவர்கள் சுட்டிக் கூறிய பெயர்கள் இவை.

2. **குதிரைச் செய்தி :** மாணிக்கவாசகர் குதிரை வாங்கி வரற் பொருட்டு வந்தபோது, திருப்பெருந்துறைப் பக்கம் வருதலும், தம் மனம் இறையன்பில் ஒடுங்க, அங்கேயே தங்க

92. திருத்தோ 6

நினைத்துத் தம்முடன் வந்த வீரர்களிடம், "ஆவணி மாதத்தில் தான் குதிரைகள் வந்திறங்கும்; நீங்கள் திரும்பிச் சென்று பாண்டிய வேந்தனிடம் கூறுங்கள்; யான் குதிரைகள் வந்ததும் வாங்கி வருகிறேன்" என்றார் என நம்பி திருவிளையாடல் கூறுகிறது.

திருவாதவூரர் புராணம், குருமணியால் ஆட்கொள்ளப்பட்ட பின்னர் மாணிக்கவாசகர், தம்மை மறந்த நிலையில், தம்முடன் வந்தவர்களை விலகுமாறு சொல்ல, அவர்கள் பாண்டியனிடம் சென்று அவர் நிலை கூறினர் எனக் கூறுகிறது.

நம்பி திருவிளையாடல் புராணக் கூற்று மாணிக்கவாசகர்க்குக் குற்றம்[1] கற்பிக்க ஏதுவாகிறது. திருவாதவூரர் புராணக் கூற்றே பொருந்தும் என்பர் மறைமலையடிகளார்[2].

**3, குருமணியைக் கண்ட இடம் :** நம்பி திருவிளையாடல் புராணம் மாணிக்கவாசகர் திருப்பெருந்துறைக் கோயிலில் குருமணியைக் கண்டதாகக் கூறத் திருவாதவூரர் புராணம் திருப்பெருந்துறையின் ஒருபக்கத்திருந்த பொழிலில் கண்டதாகக் கூறுகிறது.

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறை சென்றபோது அங்குச் சிவன் கோயில் இருந்ததில்லை. இன்றும் அங்குள்ள கோயிலில் சிவலிங்கம் இல்லாமல் பாதமேயுள்ளது; அதற்கே பூசனை; நாள் வழிபாடு மாணிக்கவாசகருக்கும் குருமணியின் திருவடிச் சுவட்டுக்குமே யாதலின், திருவாதவூரர் புராணக் கூற்றே பொருந்தும் என்பர் மறைமலையடிகளார்[3].

**4. சிவஞானபோதம் :** மாணிக்கவாசகர் குருமணியைக் கண்டபோது அவர் கையில் சிவஞானபோதம் எனும் நூல் வைத்திருந்தார் எனப் பரஞ்சோதி திருவிளையாடற் புராணமும் அதன் விளக்கத்தை உபதேசித்தார் என்பதாகத் திருவாதவூரர் புராணமும் கூறும். நம்பி திருவிளையாடல் கூறவில்லை.

சிவஞானபோதம் மெய்கண்ட தேவரால் இயற்றப்பட்டது. அவர்க்கும் முற்பட்ட காலத்தவரான மாணிக்கவாசகருக்கு அந்நூற் பொருள் உபதேசிக்கப்பட்டது என்பதும், குருமணி அதனை வைத்திருந்தார் என்பதும் பொருந்தா என்பர் மறைமலையடிகளார்.

---

1. ஆராய்ந்து செய்யாமை எனும் குற்றம்,
2. மா. வ. கா. பக்-6
3. மா. வ. கா. பக்-7

"என்னையோர் வார்த்தையுட் படுத்துப் பற்றினாய்"[4] எனச் செத்திலாப்பத்துப் பாடல் ஒன்றில் மாணிக்கவாசகர் கூறியிருப்பது தம்மைத் திருவைந்தெழுத்து உபதேசித்து ஆட்கொண்டதையே குறிக்கும் என்றும் அடிகளார் கூறினர்[5].

**5. குருமணி தங்கிய நாள் :** நம்பி திருவிளையாடற் புராணம், குருமணி யானவர் மாணிக்கவாசகரை ஆட்கொண்ட பின்னர் அவரை அடியவருடன் கூட்டியதையும், சில நாள் தங்கிப் பின் அடியவரோடு உடன் வாராது சென்று தில்லைக்கு வருக என்று கூறித் தாம் மறைந்ததையும் கூறுகிறது.

திருவாதவூரர் புராணம், பலநாட்கள் குருமணி அங்கே தங்கியதாகக் கூறுகிறது.

இறைவன் மாறுவடிவில் பல நாட்கள் தங்கியிருந்தான் என்பதை ஏற்க இயலாது என மறைமலையடிகளார் நம்பி திருவிளையாடற் கூற்றை ஏற்பர்.[6] சில நாள் தங்கும் கடவுள் பல நாள் தங்கினார் எனக் கூறுவதில் அவ்வளவு பெருங்குறை வாராது.

**6. பாண்டியன் அவமதிப்பு :** குதிரைகளைப் பெற்ற பாண்டியன் மகிழ்ந்து குதிரைத் தலைவனுக்குப் பரிசாகப் பட்டாடை ஒன்று கொடுக்க அதனைக் குதிரைத் தலைவன் தான் வைத்திருந்த செண்டுக்கோல் முனையால் வாங்கினான் என்று நம்பி திருவிளையாடற் புராணமும், திருவாதவூரர் புராணமும் கூறும். பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் குதிரைத் தலைவன் குதிரையினின்றும் இழிந்து வந்து பணிவுடன் வாங்கினான் என்று கூறும்.

செண்டுக் கோலால் வாங்கியது, குதிரைத் தலைவனின் 'பொருட்படுத்தாமை' என்ற வகையில் நிகழ்த்திய திருவிளை யாடலைக் குறிக்கும்; அதுகண்டு வெகுண்ட பாண்டியனை மாணிக்கவாசகர், 'அவ்வாறு வாங்குவது அவர் நாட்டு வழக்கம்' எனச் சொல்லி அமைதிப்படுத்தினார் என்று முன்னைப் புராணம் இரண்டும் கூறும். பின்னர் அன்புக்கு அடிமைப்பட்டுப் பிட்டு வாணிச்சிக்குக் கூலியாளாய் வரும் இறைவன், பாண்டியனின் தருக்குக்கு இரங்காதவனாய்ப் பெருமிதத்துடன் அவனைப் பொருட்படுத்தாமையைக் காட்டச் செண்டுக் கோலால் பரிசுப்

---

4. செத்திலா-2
5. மா. வ. கா. பக்-8
6. மா, வ. கா. பக்-9

பட்டினை வாங்கினான் என்பது சிறக்குமாதலின் அதுவே கொள்ளற்பாலதாம்.[7]

**7. பாண்டியனைவிட்டு மீளல் :** பாண்டியனிடமிருந்து விலகி மதுரையை விட்டுத் திருப்பெருந்துறைக்கு வரும்போது, அங்கே குருமணியானவர் முதற்காட்சியிற் கண்ட கோலத்தோடு அடியார் புடைசூழ இருந்தார் எனத் திருவாதவூரர் புராணம் கூறும்.

**8. பதிகம் பாடிய இடங்கள் :** திருவாசகப் பதிகங்கள் பாடப்பட்ட இடம், காலம் முதலியவற்றைப் புராணங்கள் மாறுபட்டுக் கூறுகின்றன. மறைமலையடிகளார் அவற்றைச் செம்மைப்படுத்தித் தமது 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' எனும் நூலில் ஆராய்ச்சியுடன் எழுதியுள்ளார்.

**9. கெடிலநதி மாற்றம் :** திருவாவடுதுறை ஆதீனப் புலவர் மாதவச் சிவஞான முனிவரின் மாணவருள் ஒருவராகிய சிதம்பர நாதமுனிவர் பாடிய திருப்பாதிரிப்புலியூர் புராணம் மாணிக்க வாசகர் வரலாறு ஒன்று கூறுகிறது. அது எப்புராணத்தும் இல்லாதது.

மாணிக்கவாசகர் சிவபிரானைப் பல ஊர்களிலும் சென்று வழிபட்டு வருபவர், திருப்பாதிரிப்புலியூர் நோக்கி வந்தார். அந்நாளில் கெடில ஆறானது இன்று உள்ளதுபோல் இல்லாமல் திருப்பாதிரிப்புலியூரின் தெற்கே ஓடியது. வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்த மாணிக்கவாசகர் கெடில ஆற்றின் தென்கரைக்கு வந்தார். அதைக் கடக்க வழியறியாது வருந்தியவர், இறைவனிடம் முறையிட்டு மூன்று நாட்கள் அங்கேயே தங்கினார். இறைவன் ஒரு சித்தர் வடிவில் அவர் முன் வந்து மாணிக்கவாசகரின் குறை கேட்டு, மாணிக்கவாசகரைக் கண்மூடியிருக்கச் செய்து, தன் பிரம்புக் கோலால் ஆற்றைத் திருப்பாதிரிப்புலியூருக்கு வடக்கே திரும்பிப் போகும்படிச் செய்தார். கண்விழித்த மாணிக்கவாசகர், அதுகண்டு மகிழ்ந்து திருப்பாதிரிப்புலியூர் வந்து இறைவனை வழிபட்டுச் சென்றார்.

இக்கதை ஒரு கட்டுக்கதையே யாம். தொல்காப்பியத் தேவர் தாம் பாடிய திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகத்தில் கெடில ஆறு அவ்வூர்க்குத் தெற்கே ஓடியதாகக் கூறுவர். கெடில ஆற்றின் வடபால் திருப்பாதிரிப்புலியூர் இருந்ததை,

---

7. மா. வ. கா. பக்-43

"......... கெடிலமா நதியதன் வடபால்
செய்த்தலைக் குவளை மகளிர்கண் காட்டும்
திருக்கடை ஞாழல்"[8]

என்றும்,

"மெத்திவரு கின்ற கெடி லத்துவட பாலே
மெல்லியல் தவம்செய் கடைஞாழல்"[9]

என்றும் வரும் திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகப் பாடல் வரிகளால் அறியலாம். திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பக நூல் முன்னுரையில்,

"மாணிக்கவாசகர் காலத்திற்குப் பிற்பட்ட இக்கலம்பக நூலாசிரியரது காலம் வரையில், இது மாறவில்லை என்று தெரிதலின், அப்புராணத்திற்குக் கண்ட செய்தி பொருத்த முடையதாகத் தோன்றவில்லை."

என்றெழுதினார் உ. வே. சாமிநாதையர்.[10] தொல்காப்பியத் தேவர் இயற்றிய திருப்பாதிரிப்புலியூர் கலம்பகத்தைச் சிதம்பர நாதமுனிவர் பார்க்கவில்லை போலும். அக்கலம்பகம் இரட்டைய ரால்,

தொல்காப் பியத்தேவர் சொன்னதமிழ்ப் பாடலன்றி
நல்காத் திருச்செவிக்கு நாமுரைப்ப தேறுமோ
மல்காப் புனற்றதும்ப மாநிலத்திற் கண்பிசைந்து
பல்காற் பொருமினர்க்குப் பாற்கடலொன் றீத்தார்க்கே.[11]

என்று சிறப்பிக்கப்பட்டிருக்கிறதும் அவர் அறியார் போலும். ஒரு காலத்தில் கெடில ஆறு திருப்பாதிரிப்புலியூருக்குத் தெற்கில் ஓடியிருக்கலாம். திருப்பாதிரிப்புலியூருக்குத் தெற்கில் இன்றுள்ள கரையேற விட்ட குப்பம் எனப் பெயர் வழங்கிய வண்டிப்பாளையம் எனும் ஊரைச் சார்ந்த தென் பகுதியில் உள்ள வயற்பகுதிகள், ஒரு காலத்தில் மணற்பரப்பாய் இருந்தன என்பதற்குச் சான்றாக, இன்றும் அவ்வயற் பகுதியில் மூன்றடி ஆழத்திற்குத் தோண்டினால் மணல் காணப்படுகின்றது. எனினும், எக்காலத்தில் கெடிலம் திருப்பாதிரிப்புலியூருக்கு வடபால் மாறியது என்பது அறியக் கூடவில்லை.

---

8. திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், 45
9. மேற்படி 100
10. மேற்படி பதிப்பு முன்னுரை
11. திருப்பாதிரிப்புலியூர் பாடலேசுவரர் மகா கும்பாபிஷேக மலர் பக்-201 7-12-1973

மாணிக்கவாசகரால் கெடிலம் மாறியோடியது எனின், தம் வரலாற்றை வைத்தே இறைவனைப் பாடிய அவர், இச்செய்தியை விடாது பாடியிருப்பார். திருப்பராய்த்துறை, திருச்சிராப்பள்ளி, பழனம், காஞ்சி முதலிய ஊர்களில் தமக்கும் பிறர்க்கும் ஏற்பட்ட சிறப்புகளைப், போற்றித் திருவகவலில் கூறிய மாணிக்கவாசகர் திருப்பாதிரிப்புலியூர் நிகழ்ச்சியையாவது அவ்வூரையாவது யாண்டும் குறிப்பிடாமையால் கெடில ஆற்றின் மாற்றக் கதை, கட்டுக் கதையே எனக் கொள்ளலாம்.

## 10. உத்தரகோச மங்கைப் புராணம் மட்டும் கூறும் கதை :

திருவுத்தரகோச மங்கைத் திருக்கோயிலுக்குத் தென் மேற்குத் திசையில் முனிவர் ஆயிரவர் சிவனை நோக்கித் தவம் செய்தனர். சிவபிரான் அவர் முன் தோன்றி "யாம் இலங்கையிலுள்ள இராவணன் மனைவி மண்டோதரிக்கு அருள் செய்யச் செல்கின்றோம்; நீவிர் இங்கேயே இருமின்", என்று சொல்லித் தன் கையிலிருந்த திருமுறையை (நூலை) அவர்களிடம் கொடுத்தார். அப்போது அவர்கள் தீவினையாளராகிய அரக்கர் வாழும் இடம் செல்லலாமோ என வினவினர். அதற்குச் சிவபிரான்; "அங்கே இராவணன் நம் திருமேனியைத் தீண்டும்போது இவ்விடத்து ஒரு தீப்பிழம்பு தோன்றும்." என்று கூறி மறைந்தார்.

இலங்கையில் மண்டோதரிபால் சென்று அவள் வழிபாட்டை ஏற்றருளியபோது, இராவணன் அங்குவர, இறைவன் ஒரு குழந்தையாக மாறினார். இராவணன் இக்குழந்தை ஏது எனக் கேட்க, மண்டோதரி தவமாதொருத்தித் தன்பால் விட்டுச் சென்றதாகக் கூறினாள். இராவணன் அக்குழந்தையை எடுத்துத் தன் மடிமீது அமர்த்தினான். அப்போது உத்தரகோச மங்கையில் பொய்கையில் தீப்பிழம்பு தோன்றியது. முனிவர் யாவரும் அதில் மூழ்கினர். அம் முனிவர்களுள் ஆண்டில் இளையராய மாணிக்க வாசகர் மூழ்காமல் இறைவன் கொடுத்துச் சென்ற நூலைக் காக்க வேண்டித் தனித்து நின்றனர்.

மண்டோதரியிடம் இருந்த குழந்தையைப் பார்வதி தேவியார் முதிய தவச் செல்வியாகச் சென்று வாங்கிப் போனார். பின்னர்ச் சிவபிரான் உத்தரகோச மங்கைப் பொய்கைக் கரை வந்து, தீயில் மூழ்கிய முனிவர்களுக்கு அருள் செய்து, பொய்கைக் கரையிலேயே பலநாள் தங்கியிருந்த மாணிக்கவாசகரை நோக்கி, "அன்பனே

இந்நிலவுலகில் பலதலங்களும் சென்று எம்மை வழிபட்டு வருக; ஒரு தலத்தில் யாம் வந்து ஆட்கொள்வோம்'' என்றருளி மறைந்தார்.

திருவுத்தரகோச மங்கைப் பொய்கையில் தீப்பிழம்பு தோன்ற அதில் முனிவர்கள் மூழ்கினர் என உத்தரகோச மங்கைப் புராணம் கூறுவது, திருவாதவூரர் புராணம் திருப்பெருந்துறைப் பொய் கையில் நிகழ்ந்ததாகக் கூறுவதுடன் மாறுபட்டது. பிறதலங்கள் நிகழ்ச்சிகளைத் தம் தல நிகழ்ச்சிகளாகக் கூறுவது புராணம் செய்வார் இயல்பு என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகலாம்.

**11. முன்வரலாறு : திருப்பெருந்துறைப் புராணம் கூறுவது:**

சிவகணநாதர் ஆயிரவர் சிவபிரானை நோக்கித் தங்களுக்கு ஆகமப் பொருளை விளக்க வேண்டும் என வேண்டினர். சிவபிரான் நீவிர் யாவரும் உத்தரகோச மங்கை எனும் தலத்தையடைந்து எம்மை வழிபட்டிருமின்; அங்கு அருள் செய்வோம்'' என்றார். அவ்வாறே அவரனைவரும் உத்தரகோச மங்கையடைந்தனர். சிவபிரானும் அந்தணராய் வந்து அவர்கட்கு ஆகமப் பொருளை விளக்கிக் கொண்டிருந்தார். அப்போது இந்திரன் அலங்காரப் பொலிவுடன் உலா வந்தான். சிவகணத்தவருள் ஒருவர், ஆகம விளக்கம் கேட்டலை விட்டு இந்திரன் உலாவைக் கண்டிருந்தார். உடனே சிவபிரான், ''ஆகம விளக்கத்தில் நாட்டம் இன்றி இந்திர வுலாவில் இருந்ததால், நிலவுலகில் பிறந்து இன்பம் துய்க்க என்றார். அவர் தொழுது வேண்ட, ''நாமே வந்து குருவாய் ஆட்கொள்வோம்'' என்றருளினார்.

திருவாதவூரில் சம்புபாதாசிரியர் சிவஞானவதி என்னும் இல்லற நல்லோர் பிள்ளைப்பேறின்றிச் சிவபிரானை வேண்டி வழிபட்டு வந்தனர். அவர்க்கு மகவாகவே சிவபிரானால் ஏவப் பட்ட சிவகணத்தார் தோன்றினார்.

இவ்வாறு மாணிக்கவாசகரது முன் வரலாறு கூறும் திருப்பெருந்துறைப் புராணம். ''குடமுழ நந்தீசனை வாசகனாக் கொண்டார்'' என்னும் அப்பர் திருவாக்கை மனதிற் கொண்டு புனையப்பட்ட கதையாகலாம் இக்கதை.

**12. திருவாதவூர் புராணம் மட்டும் கூறும் கதை :**

மாணிக்கவாசகர் தில்லையில் தங்கியிருந்தபோது சிவபிரான் அந்தண வடிவுடன் வந்து அவரருளிய திருவாசகத்தைக் கேட்டு

எழுதிக் கொண்டதாகவும், 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' எனக் கேட்டுத் திருக்கோவையாரைச் சொல்ல எழுதிக் கொண்டதாகவும், பின்னர் அவற்றைத் தில்லைக் கூத்தன் படியில் வைத்ததாகவும், தில்லை வாழ் அந்தணர் ஒருவர் காலையில் திருக்கதவம் திறந்தபோது அந்நூல்கள் கிடக்கக் கண்டு மற்றையந் தணர்களிடம் கூறியதாகவும், யாவரும் பொருளறிய விரும்பிய தாகவும், இறைவன் கட்டளைப்படி மாணிக்கவாசகரிடம் பொருள் கூற வேண்டினதாகவும், அவர் தில்லைக் கூத்தபிரான் திருமுன் போந்து 'இவ்விறைவனே பொருள்' என்று கூறித் தில்லைக் கூத்தன் திருவடியிற் கலந்ததாகவும் திருவாதவூரர் புராணம் கூறுகிறது. மற்றை நம்பி திருவிளையாடலும் பரஞ்சோதி முனிவர் திருவிளை யாடலும் கூறவில்லை. திருவாதவூரர் புராணத்தை உட்கொண்ட வராய்ச் சிவப்பிரகாச சுவாமிகள்,

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே
வாசகம் அதற்கு வாச்சியம்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே[12]

என்றார். திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் சிவபிரான் எழுதியதைப் பற்றிப் பழிப்பதுபோல் புகழ்தலாக,

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ!
மனநின் றுருக்கும் மதுர வாசக!
கலங்குறு புலனெறி விலங்குறு வீர!
திங்கள் வார்சடைத் தெய்வ நாயகன்
ஒருகலை யேனும் உணரான்; அஃதான்று
கைகளோ முறிபடும் கைகள்; காணிற்
கண்களோ ஒன்று காலையிற் காணும்;
மாலையில் ஒன்று வயங்கித் தோன்றும்;
பழிப்பின் ஒன்று விழிப்பின் எரியும்;
ஆயினும் தன்னை நீ புகழ்ந் துரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன்; அதனால்
புகழ்ச்சி விருப்பன் போலும்
இகழ்ச்சி யறியா என்பணி வோனே[13]

என்றார்.

'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என அந்தணன் கேட்டதில் என்ன சிறப்புண்டு? பாவை கோவை என எதுகை

---

12. நா. நா. மாலை 8 13. நா. நா-மாலை 24

ஒன்றேயுண்டு. மற்றைப் பதிகங்களில் இல்லாத சிறப்பு திருவெம்பாவைக்கு யாதுளது என்று புரியவில்லை. திருவெம்பாவை அகப்பொருட் சிறப்பு நிறைந்ததாகவும் இல்லை.

மாணிக்கவாசகர் வரலாற்றை அவரது திருவாசகப் பாடல்களின் துணைகொண்டு பார்க்கும்போதும் புராணங்களின் மாறுபட்ட புனைவுகளைப் பார்க்கும்போதும் பின்வருமாறு கருதலாம். மாணிக்கவாசகர் தம் செய்திகளாகக் கூறியனபோக, மற்றைப் புராணச் செய்திகள் எல்லாம், புராணிகர், தம் காலங்களில் மக்களிடையே வழங்கி வந்த கதைகளை வைத்துத், தம் ஆற்றலுக்கேற்பக் கற்பனை செய்தனவற்றையும் சேர்த்துப் புராணங்கள் இயற்றினர் என்றே எண்ணலாம். அன்றியும் இறைவன் தொடர்பான கதைகளைக் கால ஆராய்ச்சிக்கேற்பவோ அறிவாராய்ச்சிக்கேற்பவோ எண்ணாமல், கதைகளைப் புனைந்தனர் என்னலாம். கால ஆராய்ச்சியின்மையால் திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம், மாணிக்கவாசகர்க்காகத் திருபாதிரிப்புலியூரின் தென்பால் இருந்த கெடிலநதி, வடபால் திருப்பப்பட்டது என்ற செய்தியைக் கூறுகிறது. திருவாசகப் பதிகங்கள் பாடப்பட்ட இடங்களும் பலவாக மாறுபட்டுக் கூறுவன எல்லாம் அறிவாராய்ச்சியின்மையால் மனதிற்பட்ட நம்பிக்கையால் விளைந்தனவேயாம்.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கேங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்

எனவரும் திருவெம்பாவைப் பாடல் இரண்டிலும்[14] மகளிர் இறைவனை நோக்கித் தம் திருமணத் தொடர்பான செய்திகள் கூறுவது ஒன்றே இல்லறத் தொடர்பானது. ஆனால் அது அகத் தொடர்பானது எனக் கூறலாமாயினும் அகப் பொருளின்பாற் படுவது எனக் கூற இயலாது. கோவை ஒரு தலைவியைப் பற்றியது. பாவையில் பல பாவையர் கூடிப் பேசிய செய்தியுளது. அதனால் அப்பகுதி அகப்புறச் செய்தியாகும். எனவே,

"பாவையின் நுட்பமே கோவையின் பெருக்கம்"[15]

என்பதற்கில்லை.

**மாணிக்கவாசகர் குடமுழநந்தீசரா?**

திருப்பெருந்துறைப் புராணம், மாணிக்கவாசகரின் முன்னைப் பிறப்பாகச் சிவகணத்தவருள் ஒருவராகக் கூறியமைபோல, இக்கால ஆராய்ச்சியாளர், மாணிக்கவாசகரைச் சிவபிரானின் நந்தி கணங்களுள் ஒருவர் என்றும், அவராவார் குடமுழநந்தீசர் என்றும் கூறுவர். மறைமலையடிகளார் குடமுழநந்தீசர் என்றே கூறினார்.[16] அப்பரடிகள்,

"குடமுழநந்தீசனை வாசகனாக் கொண்டார்"[17] எனச் சிவபிரானைப் பற்றித் தனித்திருத்தாண்டகம் ஒன்றில் கூறியுள்ளார். குடமுழா இயக்கும் நந்தீசன் என்பவனை மாணிக்க வாசகனாகச் சிவபிரான் கொண்டார் என்பது அதன் பொருளாகும் என்பர் ஆராய்ச்சியாளர்.

"நீக்கி முன்னெனைத் தன்னொடும் நிலாவகை
குரம்பையிற் புகப்பெய்து"[18]

எனவரும் மாணிக்கவாசகரின் பாடலில் வரியைச் சான்றாகக் காட்டுவர் மறைமலையடிகளார். நீக்கி என்பதற்குக் 'கயிலையில் நந்திகணத்தவரினின்றும் நீக்கி' எனப் பொருள் கொள்வர்.

திருப்பெருந்துறைப் புராணம் கூறிய சிவகணத்தவருள் ஒருவராயின் நீக்கி என்பதற்குச் சாபத்தால் நீக்கி எனப் பொருள் கொள்ளலாம். ஆனாலும் அச்சிவகணத்தவர் மாணிக்கவாசகர் ஆகார்.

---

14. திருவெம் 9,19.
15. பாவையும் கோவையும் மெய்கண்டார், மலர் 7 இதழ் 1 பக் 26 (டிசம்பர் 1988)
16. மா.வ.கா. பக். 165-172
17. தனித்திருத்தாண்டகம் 2 : 11
18. அதிசய. 8

நந்திகணத்தவருள் ஒருவரோ சிவகணத்தவருள் ஒருவரோ மாணிக்கவாசகர் அல்லர் என்பதைத் திருவாசகச் சான்று கொண்டே துணியலாம்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்[19]

எனவும்,

"ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை"[20]

எனவும் தாம் பல்பிறவி எடுத்து இளைத்ததையும் கோகழிக் குருமணியால் ஆட்கொள்ளப்பட்ட நாளில்,

"மெய்யேயுன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்"[21]

என்று தாம் இறைவனடியைக் கண்டமையும் கூறுதலால், கயிலையிலிருந்து வந்த கணத்தவருள் ஒருவரல்லர் என்பது துணிவுறும். அன்றியும், கயிலையில் இருந்தபோது இறைவன் திருவடியைக் காணாதவராயிருந்தனர் சிவகணத்தார் என்பதும் பிழைபடும்.

அப்படியாயின் 'நீக்கி முன் எனை' என்பதன் பொருள் யாதெனின், தன்னொடும் ஒடுங்கியிருந்தவுயிர்களுக்கு உலகத்தைத் தோற்றுவித்து அதில் உயிர்களை உலவவிட்ட காலத்தில் என்னையும் அவ்வாறு நீக்கி உலவவிட்டு" என்பதே பொருளாம்.

இனி அப்பரடிகளால் குறிக்கப்பட்ட நந்தீசன் என்பார் சிவபிரானுக்குக் குடமுழா இயக்கும் நந்தியெம் பெருமானே யாவர். அவர் சிவபிரானுக்கு வாசகனாவார். வாசகன் என்பது 'சொல்ல வல்லான்' என்னும் பொருள் தருவது. 'நந்தீசனை வாசகனாகக் கொண்டார்' என்பது, 'இறைவனை நோக்கி வருபவர்களை, இறைவனுக்கு அறிமுகப்படுத்திச் சொல்லவல்லவனாக நந்தீசனை இறைவன் கொண்டான்' என்னும் பொருள் தருவதாகும். சிவபிரானுக்கு நந்தீசன் சொல்ல வல்லானாக இருப்பது போல, முருகப் பெருமானுக்கும் சொல்ல வல்லார் இருத்தலைத் திருமுருகாற்றுப்படை கூறும்.

---

19. சிவ. 26-31
20. திருவம். 14
21. சிவ. 32

வேறுபல் உருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
இனியவும் நல்லவும் நனிபல வேத்தி

என்னும் வரிகளால்[22] அதை உணரலாம். எனவே அப்பரடிகள் கூறிய "குடமுழ நந்தீசனை வாசகனாக் கொண்டார்" என்பது மாணிக்கவாசகரைக் குறித்ததன்று.

**மாணிக்கவாசகர் வீரசைவர்**

மாணிக்கவாசகர் சைவர் என்ற கொள்கையிலேயே எல்லாப் புராணங்களும் வரலாறு கூறின. ஆனால் அவர் வீரசைவர் என்பதற்கான சான்றுகள் திருவாசகத்தில் பலவுள்ளன. அவை சமயம் என்னும் தலைப்பில் விரிவாக விளக்கப்படும். இங்கே வெளிப்படையாகவுள்ள இரண்டு சான்றுகள் மட்டும் காட்டப் படும்.

(1) "தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்"[23]

என்பது ஒரு சான்று. "குருமணியாக வந்த சிவபிரான், திருப்பெருந்துறைப் பொய்கையில் தோன்றிய பேரொளிப் பிழம்பில் ஏனையடியவர்களை யெல்லாம் ஒடுக்கினான்; ஆனால் என்னை மட்டும் அப்படி ஒடுக்காமல் யான் இவ்வுலகத்திருந்து அவனைப் பூசனை புரிந்து வழிபடவேண்டி என் பெரிய கையில் நெல்லிக்கனிபோல் எழுந்தருளினான்" என்றார், மாணிக்கவாசகர். கையில் எழுந்தருளப் பெற்ற இட்டலிங்கப் பெருமானையே "தடக்கையின் நெல்லிக்கனி" என்றார்.

(2) கோயில் திருப்பதிகத்தில், "இறைவனே நீ யென் உடலிடம் கொண்டாய்"[24] என்றும் "எந்தையே ஈசாவுடலிடம் கொண்டாய்"[25] என்றும் கூறியிருப்பது உடம்பில் இட்டலிங்கமாக எழுந்தருளியதையே குறிக்கும்.

---

22. திருமுருகாற்றுப்படை 282-286. இதில் உள்ள கூளியர் சொலல் வல்லாரரவர்.
23. திருவண்ட. 18
24. கோயில் திருப். 5
25. மேற்படி 10

# மாணிக்கவாசகர் காலம்

## கி.பி. 8 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்

**திருக்கோவையார்ச் சான்று**

(1) புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டுபுக் கறியாது
இரங்கிடெந் தாயென் றிரப்பத்தன் னீரடிக் கென்னிரண்டு
கரங்கள்தந் தான்ஒன்று காட்டமற் றாங்கதுங் காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை யம்பல முன்றிலம் மாயவனே[1]

இப்பாடலில் இதுவரை யாரும் கூறாத திருமால் கதை ஒன்றை மாணிக்கவாசகர் கூறியுள்ளார். 'திருமால் பன்றியாய் நிலம் அகழ்ந்து சென்று சிவபிரான் திருவடியைக் காணமாட்டாது திரும்பி, இறைவனை வேண்ட, இறைவன் தன் ஒரு திருவடியைக் காட்ட, மற்றொரு திருவடியையும் காட்டியருள்க என்று தில்லையம்பல முற்றத்தில் வரங்கிடந்தான்' என்பது அக்கதை.

இன்று தில்லையில் நடராசப் பெருமான் எதிரில் ஒரு பக்க மாகத் திருச்சித்திர கூடத்தில் திருமால் படுத்த திருக்கோலத்தில் இருப்பதைக் கண்டு மாணிக்கவாசகர் கற்பனையாக அக்கதையைக் கூறினார் என்றும், அத்திருச் சித்திரகூடப் பெருமாளைக் கி.பி. 710 முதல் 775 வரை ஆட்சி புரிந்த நந்திவர்ம பல்லவன் எழுந்தருளப் பண்ணினான் என்றும், அதனால் மாணிக்கவாசகர் கி. பி. எட்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

பைம்பொன்னும் முத்தும் மணியும் கொணர்ந்து
படைமன்ன வன்பல்ல வர்கோன் பணிந்த
செம்பொன் மணிமா டங்கள் சூழ்ந்ததில்லைத்
திருச்சித்ர கூடம் சென்று சேர்மின்களே[2]

என்னும் திருமங்கையாழ்வார் வாக்கைக் காட்டுவர். நந்திவர்ம பல்லவன் காலத்தவர் திருமங்கையாழ்வார்.

---

1. திருக்கோவையார் 86 2. பெரியதிருமொழி 3-2 : 3

மேலும் நந்திவர்ம பல்லவன் முதலில் சைவனாக இருந்து பின்னர்ப் பரம வைணவனாக மாறினான் என்றும், அதற்குச் சான்று காசாக்குடி, உதயேந்திரம், தண்டந்தோட்டம். பட்டத் தான மங்கலம் என்னும் ஊர்களிற் கிடைக்கப் பெற்ற செப்பேட்டுச் செய்திகள் என்றும், நடராசப் பெருமானுக்கு முன்னர் இருந்த திருமால் திருவுருவத்தைத் திருச்சித்திரகூடம் அமைத்து அமர்த்தினான் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.[3]

முன்னரே இருந்த திருமால் உருவத்தைத் திருச்சித்திரகூடம் அமைத்து அதில் எழுந்தருளச் செய்தான் என்றால் அவ்வாறு செய்ததற்குக் காரணம் யாது? அத்திருவுருவக் கிடக்கை யானது திருமாலுக்கு உயர்வு தாராமல் குறைவு தந்ததே காரணம் ஆகலாம். அவன் பரம வைணவனாக மாறிய பின்னர், அத்திரு வுருவத்துக்குக் குறை நேராதபடியும், உயர்வு தோன்றும்படியும் அமைக்க எண்ணியே இன்றுள்ளவாறு நடராசப் பெருமானை நோக்கிக் கால்களை நீட்டியபடிப் படுத்த திருக்கோலமாகத் திருவுருவமைத்து எழுந்தருளச் செய்தான். நடராசப் பெருமானுக்கு நேர் முற்றத்தில் இருந்தவாறு அமைக்காமல் பக்க வாட்டில் திருச்சித்திரகூடம் அமைக்கக் காரணம், அப்போதிருந்த சைவர்களின் எதிர்ப்பே என்னலாம். சைவர்களைப் பகைத்துக் கொள்ளாமல் இருக்கப் பக்கவாட்டில் அமைத்தான் பல்லவன். அரசனை முழுமையாக எதிர்க்க முடியாத சைவர்கள் அதற்கு ஒத்துக் கொண்டனராவர்.

இன்றுள்ள திருமால் கோலம், வரம் கிடக்கும் கோலம் இல்லை. வரம் கிடப்பவன், யாரை நோக்கி வரங்கிடப்பானோ அவன் முற்றத்தில் நேரே காலை நீட்டிப் படுத்துக் கிடக்க மாட்டான். அன்றியும் நேரே கிடப்பானேயன்றி ஒருபக்கமாக ஒதுங்கிப் படுத்துக் கிடக்க மாட்டான். எனவே நடராசப் பெருமான் முன்றிலில் திருமால் வரங்கிடக்கும் நிலையில் கிடந்திருத்தல் வேண்டும். நந்திவர்ம பல்லவன் அதை மாற்றி இன்றுள்ளவாறு அமைத்தனனாதல் வேண்டும். மாணிக்கவாசகர், தம் காலத்தில் திருமால் வரம் கிடந்த நிலையில் இருந்த உருவத்தைக் கண்டே அவ்வாறு பாடினார். எனவே, நந்திவர்மன் காலமாகிய கி. பி. 8ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் மாணிக்க வாசகர் என்பதில் ஐயமில்லை.

---

3. பன். திரு. வர. பக். 96

(2) ஆவா இருவர் அறிய அணிதில்லை யம்பலத்து
மூவா யிரவர் வணங்கநின் றோனையுன் னாரின் முன்னித்
தீவாய் உழுவை கிழித்தநந் தோசிறி தேபிழைப்பித்து
ஆவா மணிவேல் பணிகொண்ட வாறின்றோர் ஆண்டகையே[4]

இப்பாடலில், 'நடராசப் பெருமான் அந்தணர் மூவாயிரவர் வணங்கத் தில்லையம்பலத்து நின்றோன்' என மாணிக்கவாசகர் கூறியிருப்பது நம் சிந்தனைக்குரியதாம்.

தில்லை மூவாயிரவர் சைவர். சைவர் எண்ணத்துக்கு மாறாக நந்திவர்ம பல்லவன் திருச்சித்திரகூடம் அமைத்திருப்பான் என்பது மேலே கூறப்பட்டது. திருச்சித்திரகூடப் பெருமாளை வழிபட்ட வரும் மூவாயிரம் அந்தணர் என்பதைத் திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழியில்,

மூவாயிர நான்மறை யாளர் நாளும்
முறையாக வணங்க அணங்காய சோதி
தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே[5]

எனக் கூறியதால் அறியலாம். குலசேகர ஆழ்வாரும் தமது பெருமாள் திருமொழியில்,

"தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
அந்தணர்கள் ஒருமூவா யிரவர் ஏத்த
அணிமணியா சனத்திருந்த அம்மான் தானே[6]

எனக் கூறியதிலும் காணலாம். இம்மூவாயிர அந்தணர் யார்?

நடராசப் பெருமானை வழிபட்ட அந்தணரும் கோவிந்தராசப் பெருமானை வழிபட்ட அந்தணரும் தில்லை மூவாயிரவரே என்பாரும் உண்டு. பரம வைணவனாகிய நந்திவர்மன் நடராசப் பெருமானை வழிபட்ட மூவாயிரவரைக் கொண்டு வழிபாடு செய்ய உடன்படான். எனவே, அவன் மூவாயிரவர் அந்தணர்களை (அய்யங்கார்களை) வெளியிலிருந்து தருவித்திருக்க வேண்டும். எனவே, ஆறாயிரம் அந்தணர்கள் தில்லையில் சைவரும் வைணவரு மாக இருந்திருத்தல் வேண்டும்.

---

4. திருக்கோவையார் 72
5. பெரிய திருமொழி 3-28
6. பெருமாள் திருமொழி 10-12

இனி, நடராசப் பெருமானையும் கோவிந்தராசப் பெருமானையும் வழிபட்ட அந்தணர் மூவாயிரவரை, மாணிக்கவாசகர் தமது திருக்கோவையாரில் கூறமாட்டார். ஏன் எனின், திருமாலை அவர் தெய்வமாகவே மதிக்கவில்லை. சிவபிரான் திருவடியைக் காண மண்ணிடந்து சென்ற செய்தியைப் பல பாடல்களில் கூறி யுள்ளார். சிவபிரானை நோக்க மற்றைத் தேவர்களின் வீடுபேற்று நிலையானது, புழுவுக்குச் சமம் என்ற கருத்தினர்.[7] அன்றியும், சிவபிரானையன்றி மற்றைத் தேவர்களைத் தெய்வமாக எண்ணி வழிபடுவோரைக் கண்டு அஞ்சியவர்.

புற்றில்வாள் அரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடையெம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மான்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே[8]

என்பது அவரது வாக்கு. அதனால் திருமாலையும் வழிபடும் அந்தணர்களை நினைந்து "தில்லையம்பலத்து மூவாயிரவர் வணங்க நின்றோன்" எனக் கூறமாட்டார். எனவே, நந்திவர்ம பல்லவன் திருச்சித்ரகூடம் எடுப்பதற்கு முன்னர் - மூவாயிரவர் வைணவ அந்தணர்களை மாணிக்கவாசகர் கூறினார் என்பது பொருந்தாது. எனவே நந்திவர்ம பல்லவன் திருச்சித்திரகூடம் எடுப்பதற்கு முன்னரே தில்லை மூவாயிரவர் நடராசப்பெருமானை வணங்கினர் என்பதே பொருந்தும். அதனால் நந்திவர்மபல்லவன் காலமாகிய கி.பி. 8-ஆம் நூற்றாண்டுக்கு முற்றபட்டவர் மாணிக்க வாசகர் என்பது பெறப்படும்.

(3) மன்னவன் தெம்முனை மேல்செல்லுமாயினும் மாலரியேறு
அன்னவன் தேர்புறத் தல்கல்செல் லாது வரகுணனாம்
தென்னவன் ஏத்துசிற் றம்பலத் தான்மற்றைத்
தேவர்க்கெல்லாம்
முன்னவன் மூலவன் நாளுமற் றோர்தெய்வம் முன்னலனே[9]

---

7. திருவண்ட. 17 - 19.
8. அச்ச. 1.
9. திருக்கோவையார் 306.

புயலோங் கலர்சடை யேற்றவன் சிற்றம் பலம் புகழும்
மயலோங் கிருங்களி யானை வரகுணன் வெற்பின்வைத்த
கயலோங் கிருஞ்சிலை கொண்டுமன் கோபமும் காட்டிவரும்
செயலோங் கெயிலெரி செய்தபின் இன்றோர் திருமுகமே[10]

இத்திருக்கோவையார்ப் பாடல்கள் இரண்டிலும் வரகுணன் கூறப்பட்டுள்ளான். கி. பி. 4ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட வேந்தர் யாரும் வடமொழிப் பெயர் உடையவரல்லர். வரகுணன் என்னும் வடமொழிப் பெயருடைய அரசர் இருவர் இருந்தனர். அவருள் முதல் வரகுணன் கி.பி. 792 முதல் 836 வரை ஆண்டவன். அவனையே மாணிக்கவாசகர் கூறியுள்ளார். இப்படிக் கூறி மாணிக்கவாசகரை, கி.பி. 9ஆம் நூற்றாண்டினர் என்பர் ஆய்வாளர்.[11]

இயக்கன், மதிவாணன், உக்கிரப்பெருவழுதி என்னும் பாண்டிய மன்னர்கள் வடமொழிப் பெயருடையவர் என்பது யாவரும் அறிந்ததே. அவர்கள் கி. பி. 4ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்கள். கடைச் சங்க காலத்துக்கு முன்னரும் வடமொழிப் பெயருடையார் பலர் இருந்தனர் என்பதைச் சங்க இலக்கியப் புலவர் பலரிடையே காண்கின்றோம்.[12]

வரகுணபாண்டியன் சிறந்த சிவபக்தன். அவன் சிவபிரானுக்கு அரிசிச்சோறு படையலுக்குரியதாதலின் அவ்வரிசியை உண்பதை விட்டு வரகை உணவாகக் கொண்டவன் என்றும் கூறுவர். எனவே, வரகு+உணன்=வரகுணன் எனப் பெயர் அமைந்தவனா தலின் வடமொழிப் பெயரினன் அல்லன் வரகுணன்; தமிழ்ப் பெயரினனே என்னலாம். மறைமலையடிகளாரும் வரகுணன் என மாணிக்கவாசகரால் கூறப்பட்டவன் கி. பி. 4ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவன் என்றே உறுதிப்படுத்தியுள்ளமையும் காணத்தக்கது.

## கி,பி. 7 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்

### திருவாசகச் சான்று

"ஊறினார் ஓசையுள் ஒன்றினார்
ஒன்றிமால் கூறினார்"[1]

என்றும்,

---

10. ஷை 327
11. பன். திரு. வர. பக். 97
12. மா. கா. ச. பக். 27

1. திருத்தென்குடித்திட்டைப்பதிகம் 6.

"மாதொரு பாலும் மாலொரு பாலும்
மகிழ்கின்ற நாதன்"[2]

என்றும் திருஞான சம்பந்தரும்,

"மாலொரு பாக மாக
மகிழ்ந்தநெய்த் தானத் தாரே"[3]

என்றும்,

"மாலை மகிழ்ந்தொருபால் வைத்தார் போலும்"[4]

என்றும்,

"அரியலால் தேவி யில்லை
ஐயன் ஐயாற னார்க்கே"[5]

என்றும் அப்பரடிகளும் சிவபிரான் திருமாலைத் தன்உடம்பிற் பாதியாகக் கொண்டார் என்று பாடினர். அவரிருவரும் கி.பி. 7ஆம் நூற்றாண்டினர்.

பொய்கை ஆழ்வார் முதல் திருவந்தாதியில் "கடவுளின் பெயர் - அரன், நாரணன்; அவர் ஊரும் ஊர்தி - ஆனேறு, கருடன்; இருப்பிடம் - இமயமலை, கடல்; தொழில் - அழித்தல், காத்தல்; படை - சூலம், சக்கரம்; நிறம் - செந்நிறம், கருநிறம்; ஆனால் உருவமோ ஒன்றுதான்" என்று கூறினார். இதனால் திருமாலும் சிவபிரானும் ஒருருவாயிருப்பதைத் தெரிவித்தார்.[6] பேயாழ்வாரும் அவ்வாறே,

தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்நாணும் தோன்றுமால் - சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து[7]

என்றார்.

இப்படி நாயன்மார்களும் ஆழ்வார்களும் சிவபிரானையும் திருமாலையும் பாகர்களாக வைத்துச் சிறப்பித்துக் கூறியதன் காரணம் யாது?

---

2. திருப்பிரமபுரம். எய்யா வென்றிப்பதிகம் 2
3. திருநெய்த்தானம் திருநேரிசை 7.
4. திருவிடைமருதூர்த் திருத்தாண்டகம் 2:3.
5. திருவையாறு திருநேரிசை 3:5.
6. முதல் திருவந்தாதி 5
7. மூன்றாந்திருவந்தாதி 63

நாயன்மார் ஆழ்வார் காலங்களில் சைன சமயம் ஓங்கிப் பரவியிருந்தது தமிழ்நாட்டில். அதனை ஒடுக்க வேண்டிய இன்றியமையாமை இருபாலார்க்கும் இருந்தது. இக்காலத்தில் ஒரு கட்சியை வீழ்த்த மற்றை எதிர்க் கட்சிகள் ஒன்று சேர்வது போலச் சைனத்தை ஒடுக்க மேற்கொண்ட உத்திகளுள் ஒன்றாக ஒருவரை ஒருவர் தழுவிப் போக வேண்டும் என்று எண்ணினர். அதன் விளைவே அப்பாடல்கள். என்றாலும் சிவபிரானே உயர்ந்தவர் எறை கருத்தில் திருமாலைத் தாழ்த்தியும், திருமாலே தெய்வம் எனச் சிவபிரானைத் தாழ்த்தியும் பாடாமலும் இல்லை.

மாணிக்கவாசகர் காலத்தில் சைனம் எங்கோ அருகியே இருந்தது. ஆசீவகமும் பௌத்தமுமே ஓங்கியிருந்தன. அவர்கள் 'கடவுள் இல்லை' என்பவர்கள். நிரீசுரவாதிகள் எனப்படுவர். அவர்களை ஒடுக்க வேண்டிய இன்றியமையாமை மாணிக்கவாசகர்க்கு ஆயிற்று. அதனால் அவர் பல பாடல்களில் அவர்களை மறுத்துள்ளார். (இது பின்னர் விளக்கப்படும்) திருமாலை அவர் தேவர் கூட்டத்துள் ஒருவராகக் கொண்டாரேயன்றித் தெய்வமாகக் கொள்ளவில்லை. திருமாலைப் பற்றி,

பங்கய மாயிரம் பூவினில்ஓர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரமாற் கருளியவாறு
எங்கும் பரவிநாம் தோணோக்கம் ஆடாமோ[8]

எனத் திருமால் சிவபூசை செய்து சக்கரம் பெற்ற செய்தியையும்.

கடகரியும் பரிமாவும் தேருமுகந் தேறாதே
இடபமுகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவை மூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ[9]

எனத் திருமால் சிவபிரான் முப்புரமெரித்தபோது இடப ஊர்தியாகத் தாங்கிய செய்தியையும் கூறிச் சிறப்பித்தாரேயன்றித், திருவாசகத்திலோ திருக்கோவையாரிலோ எவ்விடத்தும் திருமாலுக்கு உயர்வு தந்து சிறப்பித்தாரில்லை. திருமால் பன்றியாய்ச் சிவபிரான் திருவடியைத் தேடிக் காணாமையையே பலவிடங்களிலும் கூறியுள்ளார்.

8. திருத்தோ-10 9. திருச்சா. 15

சைனரைப் பற்றி மாணிக்கவாசகர் யாண்டும் கூறாமையாலும், புத்தரைப் பற்றிக் கூறியுள்ளமையாலும், ஆசீவகக் கோட்பாடுகளுக்கு மறுப்பாகப் பல பாடல்கள் காணப்படுதலாலும் சைனர் பெரிதும் பரவிய கி. பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் மாணிக்கவாசகர் என்பதை அறியலாம்.

இனி மாணிக்கவாசகர் கி. பி. 7ஆம் நூற்றாண்டினரான திருஞான சம்பந்தர்க்கு முற்பட்டவர் என்பதற்குச் சிறந்த ஆதாரம் திருவாசகத்தில் உண்டு.

சிவபிரான் பெண் ஆண் அலிஎனும் பெற்றியன் என்றும்,

அப்பெற்றியைத் தம் கண்ணால் கண்டேன் என்றும் மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

"பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க
கண்ணால் யானும் கண்டேன் காண்க"[10]

என்பன அவர் வாக்குகள். இப்படித்தாம் கண்ணால் இறைவனைக் கண்டவாறு, கண்டவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டதும் இல்லை என்றார்.

"பூதங்கள் தோறுநின் றாயெனி னல்லால்
போக்கிலன் வரவிலன் என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம் உனைக் கண்டறி வாரை"[11]

எனத் திருப்பள்ளியெழுச்சிப் பாடல் ஒன்றில் கூறியுள்ளார்.

திருஞானசம்பந்தர் சிவபிரானைப் "பெம்மான் இவன்" எனக் கண்டு காட்டியவர். அவர்க்குப் பிற்பட்டவராயின் மாணிக்கவாசகர் அவர் வரலாறு அறியாதிரார். அறிந்தாராயின் "கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை" என்று பாடார். அதனால் திருஞானசம்பந்தர்க்கு முற்பட்டவர் மாணிக்கவாசர் என்பது பெறப்படும்.

"கழுவல மதனிற் காட்சி கொடுத்தும்"[12]

என் மாணிக்கவாசகர் கீர்த்தித் திருவகவலில் கூறியிருப்பது, திருஞான சம்பந்தர்க்குக் காழியில் காட்சி கொடுத்ததைக் குறிப்பதற்கே என்பர். மாணிக்கவாசகர் பல தலங்களுக்கும் சென்ற போது சிவபிரான் நேரில் காட்சி கொடுத்தும் பாதச் சிலம்பொலி

10. திருவண்ட. 57, 11. திருப்பள்ளி. 5
12. கீர்த்தி. 88

எழுப்பியும் அருள் செய்துள்ளார். அவ்வகையில் கழுமலத்தில் (சீகாழியில்) தமக்கு இறைவன் காட்சி கொடுத்ததையே குறிப்பிட்டார் என்க. திருஞானசம்பந்தர்க்குக் காட்சி கொடுத்ததையே குறிப்பிட்டார் என்றால், "கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை" என்றது பொருந்தாதாம். இதற்கு உரையெழுதுபவர் யாவரும், 'ஊனக் கண்ணால் கண்டறிவாரைக் கேட்டறியோம்' எனப் பொருள் கொள்வர். ஊனக் கண்கொண்டு யாராலும் இறைவனைக் காண முடியாது ஆதலின் அப்பொருள் கூறுதல் பொருந்தாதாம்.

தமக்கு முன்பிருந்த கண்ணப்பநாயனாரை அன்பிற் சிறந்தவர் என்ற மாணிக்கவாசகர், "கண்ணப்பர் சிவபிரானைக் காணாதவர் என்றா கருதினார்?" எனக் கேட்கலாம். சிவபிரானைத் தம் கண்ணாற் கண்டவர்கள் கண்டவாற்றைப் பாடல்களால் மற்றவர்கட்குச் சொன்னவர்கள் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், சுந்தரருமேயாவர். மற்றையடியார்கள் யாவரும் இறைவனைப் பற்றிப் பிறர் சொன்னது கொண்டும் தம் அறிவால் தெளிந்தது கொண்டும் பாடினரேயன்றி நேரிற்கண்ட பின்னரும் உயிருடன் இருந்து பாடினவரல்லர். கண்ணப்பரும் இறைவன் திருமேனியில் தம் கண்ணை யப்பியவரேயன்றி, இறைவனை முழுமையாகக் கண்டவர் அல்லர். கண்ட பின்னர் வீடு பேறடைந்தாரேயன்றி மீளவும் நிலவுலகில் நிலவியவரல்லர்.

திருஞானசம்பந்தர்க்கு முற்பட்டவர் மாணிக்கவாசகர் எனக் கொள்ளும்போது, அவர் காலத்தவரான திருநாவுக்கரசருக்கும் காலத்தால் முற்பட்டவர் மாணிக்கவாசகர் என்பது சொல்ல வேண்டாமலே பெறப்படும். அதனால், 'நரியைக் குதிரை செய்வானும்" எனத் திருவாரூர்த் திருப்பதிகத்திலும்,

> " மணியார் வையைத் திருக்கோட்டில்
> நின்றதோர் திறமும் தோன்றும்"

எனத் திருப்பூவணத் திருத்தாண்டகத்திலும் திருநாவுக்கரசர் குறிப்பிட்ட செய்திகள் முறையே மாணிக்கவாசகர் பொருட்டுச் சிவபிரான் செய்த நரிபரியாக்கியதையும், பிட்டுக்கு மண் சுமந்ததையுமே குறிக்கும் என்பதில் ஐயமில்லை. அவ்வரிகட்கு வலிந்து வேறு பொருள் காணலும் தேவையில்லை.

## கி. பி. 4ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்

### 1. புத்தர்

புத்தன் புரந்த ராதி அயன்மால் போற்றிசெயும்
பித்தன்; பெருந்துறை மேயபிரான்; பிறப்பறுத்த
அத்தன்; அணிதில்லை யம்பலவன்; அருட்கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணம் கொட்டாமோ[1]

புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்தம் மதங்களிற் றட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினால் தோணோக்கம் ஆடாமோ[2]

மேலேயுள்ள பாடல்களில் புத்தன் கூறப்பட்டுள்ளான். முதற் பாடலில் புத்தன் சிவபிரானைப் போற்றி செய்ததாகக் கூறப் பட்டது. இரண்டாவது பாடலில் புத்தன் தோற்றிய சமயம் 'புல்லறிவுச் சமயம்' எனக் கூறப்பட்டது.

மாணிக்கவாசகர் காலத்தில் ஆசீவக சமயமும் பௌத்த சமயமும் ஓங்கியிருந்தன. ஆசீவகம் மறையத் தொடங்கிப் பௌத்தமே பரவியிருந்தது என்றும் கூறலாம். ஆசீவகம் சிலப்பதி காரத்திலும் மணிமேகலையிலும் கூறப்பட்டுள்ளது. அவை கி. பி. 4ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. 5ஆம் நூற்றாண்டென்பதும் உண்டு. மாணிக்கவாசகர் சைனரைப் பற்றிக் கூறாமையால், அவர் காலத்தில் சைனச் செல்வாக்குத் தமிழகத்தில் அதிகம் பரவவில்லை என்பது முன்னரும் கூறப்பட்டது. அதனால் சிலப்பதிகார மணி மேகலை காலத்துக்கு முற்பட்டவர் மாணிக்கவாசகர் என்னலாம்.

மேலே காணும் முதற்பாடலில் 'புத்தன் போற்றி செயும் பித்தன்' என்பதற்கு, அருணை வடிவேலர் முதலியார் அவர்கள், "புத்தன் என்பது திருமாலைக் குறிக்கும்; திருமால் புத்தனாகத் திரிபுரத்தவரிடம் சென்று புத்தமதத்தைப் போதித்து அவரது சிவ பக்தியைப் போக்கியதனால் சூழ்ந்த பெரும்பாவத்தைச் சிவபூசை செய்து நீக்கிக் கொண்டான் என்பது புராணம்."[3] என விளக்கம் கூறுவர். புத்தன் என்பது திருமாலைக் குறித்தால் அவ்வரியிலேயே மீண்டும் 'மால்' என்று கூறியது ஏன்? என்பதற்கு அவர்கள், "திருமால் புத்தனாகப் பிறந்த வரலாறு கூறிப் பின்னர் மால் எனக் கூறுதலின் கூறியது கூறலன்று" என்றும் கூறுவர்.

---

1. திருத்தெள். 16
2. திருத்தோ. 6
3. திருவா. திருக்கோ. குறிப்புரை. பக். 368

புத்தனே சிவபிரானை வழிபட்டுப் போற்றியவன் எனக் கூறுவதே சிறக்கும். மறைமலையடிகள் கூறுவது சான்று பகரும்.

> ''கௌதம சாக்கியரும் மகாவீரரும் தோன்றி முறையே
> புத்த சமண சமயங்களைத் தோற்றுவித்தற்கு முன்,
> சாக்கிய வகுப்பினர் சிவபிரானையே வணங்கி
> வந்தனர். என்பது வடநாட்டிலுள்ள பழைய கல்
> வெட்டுகளின் ஆராய்ச்சியால் நன்கு புலனாகின்றது.''

என்றும்,

> ''கௌதம சாக்கியர் பிறந்த ஞான்று, அவர் சிவபிரான்
> திருவருளைப் பெறுதற் பொருட்டுச் சிவபிரான்
> திருக்கோயிற்குப் பெற்றோரால் எடுத்துச்
> செல்லப்பட்டமை பழைய புத்தசமயக் கல்வெட்டு
> ஒன்றில் செதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றது''

என்றும் 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' என்னும் ஆய்வு நூலில் எழுதியுள்ளமை காணலாம்.[4] பௌத்த சமயத்தைத் தோற்றுவித்த புத்தர் காலத்துக்கு முன்னரே புத்தர் இருந்தனர் என்பதும், அவர்கள் சாக்கியப் புத்தர் எனப்படுவர் என்பதும், அவர் சிவபிரானை வழிபட்டவர் என்பதும் மேற்போந்த செய்திகளால் தெரியவருவன. இன்றுள்ள புத்த சமயம் 'கடவுள் இல்லை. என்னும் கொள்கையுடையது, நிரீசுரவாத சமயம் எனப்படும்' மாணிக்கவாசகர் 'புத்தன் போற்றி செயும் பித்தன்' எனச் சிவபிரானைக் கூறியதால், அவர் காலத்தில் கௌதம புத்தர் மதமும் சிவபிரானை வணங்கிய சாக்கியப் புத்தமும் இருந்தன எனக் கொள்ளலாம். பெரிய புராணத்தில் சாக்கியநாயனார் எனும் புத்தர் சிவனை வழிபட்டமை அறிகிறோம். அச் சாக்கிய நாயனாரைச் சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் பாடியதும் அறிகிறோம். எனவே புத்தமதம் தமிழகத்தில் பரவியிருந்த காலம்—சமணமதம் அருகியிருந்த காலமாகிய கி. பி. 4ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் மாணிக்கவாசகர் என்பதில் தவறில்லை.

## 2. இலிங்க வழிபாடு

மாணிக்கவாசகர் சிவபிரானைப் தனிப்பெண்ணாகவும் தனி ஆணாகவும் தனி அலியாகவும் தம் கண்ணால்கண்டதாகக் கூறியுள்ளார்.

> ''பெண் ஆண் அலிஎனும் பெற்றியன் காண்க
> கண்ணால் யானும் கண்டேன் காண்க.''[5]

---

4. மா. வ. கா. பக். 714  5. திருவண்ட 57, 58

என்பது அவர் வாக்கு. அலி வடிவம் என்பது உமையொருபாக வடிவம் என்பர். அது பொருந்தாது. அலி ஆணும் பெண்ணும் அல்லா ஒரு பிறவி. அது அறம் செய்யும்; பொருள் தேடும்; ஆனால், இன்பம் துய்க்கப் பெறாது. சிவபிரான் இன்பமய மானவன். ஆதலின், தானும் இன்பம் துய்க்கப் பெறாது பிறனுக்கும் துய்க்க இயலாது உள்ள அலியாக இறைவனைக் கண்டேன் எனக் கூறுவது தவறாகும். அதனால், அலி ஒரு உருவம் உடையது; அவ்வுருவம் ஆணுமன்று; பெண்ணும் அன்று; அவ்விரண்டும் அல்லா உருவம்; அவ்வுருவமே அலி உருவம்; அவ்வுருவமே இலிங்க உருவம். மாணிக்கவாசகர் எவ்விடத்தும் சிவலிங்கம் அல்லது இலிங்கம் என்ற சொல்லை ஆளவில்லை திருவாசகத்தில். அதனால் அவர் காலத்தில் சிவலிங்கம் எனும் சொல்லாட்சியில்லையோ எனவும் எண்ண வேண்டியுளது. சிவலிங்க வடிவக் கற்கள் அரப்பா மொகஞ்சதரோ எனும் பழைய நகரங்களில் காணப்படுகின்றன. பெருவடிவேயன்றிக் கையில் வைத்துப் பூசை செய்யக் கூடிய சிறுசிறு இலிங்கம்களும் காணப்படு கின்றன. இதனால் 'இலிங்கம்' என்னும் சொல் தமிழகத்தில் வருவதற்கு முன்னர் சிவலிங்கத்தைக் குறிக்க 'அலி' என்ற சொல்லே எழங்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் கொள்ளலாம். அலிஅங்கம்→அலிங்கம்→இலிங்கம் என்றாகியிருக்கலாம். இதுவும் மாணிக்கவாசகர் மிக முற்பட்ட காலத்தவர் என்பதற்குச் சான்றாகலாம்.

### 3. செய்யுள்

மாணிக்கவாசகரின் திருவாசகம், வெண்பா, கலிவெண்பா கலிநிலைத்துறை, கட்டளைக் கலித்துறை, தரவுக்கொச்சகக் கலிப்பா, தாழிசை, ஆசிரிய விருத்தம், இணைக்குறளாசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா என்னும் பாவகைகளைக் கொண் டுள்ளது. தொல்காப்பியர், வெண்பா வகை,

> ''நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே
> கைக்கிளை பரிபாட்டு அங்கதஞ் செய்யுளொடு
> ஒத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின''[6]

என அறுவகையாகக் கூறி, அவற்றுள் செய்யுள் என்பது செவியுறைச் செய்யுள், அங்கதச் செய்யுள் என இரண்டு வகைப் படும் என்றும் கூறி, 'புகழொடும் பொருளொடும் புணர்ந்துவரின்

---

6. தொல். செய். 114.

செவியுறைச் செய்யுளாம்'' என்று கூறியதற்கேற்பத், ''திருவாசகச் சிவபுராணமாகிய கலிவெண்பா என்பது, கலிவெண்பா என்பதற் குரியதன்று; செவியுறைச் செய்யுள் வெண்பா என்றற்கே உரியது'' என்பர், அடிகளாசிரியர்.[8]

வெண்பாவின் வகைகளுள் செய்யுள் வெண்பாவும் ஒன்று எனத் தொல்காப்பியர் கூறியதற்கேற்பச் சிவபுராணம் அமைந்திருத் தலின், திருவாசகம், செய்யுள் வெண்பா என்பதொரு வெண்பா வகை மறைந்த காலத்துக்கு முற்பட்டது என்பது பெறப்படும்.

திருவுந்தியார் என்னும் தலைப்பில் உள்ள பாடல்கள் தாழிசை என்னும் பிரிவைச் சாரும். அது கலித்தாழிசையாகும். கி. பி. 5ஆம் நூற்றாண்டுக்குப் பின்னுள்ளோர் அதிகம் கையாளாத கொச்சகக் கலிப்பாப் பதிகங்கள் பலவற்றைத் திருவாசகம் கொண் டுள்ளது. அதனால் திருவாசகம், தொல்காப்பிய இலக்கணத்தை யடியொற்றிச் செய்யுள் செய்த சங்க காலத்துக்குப் பின்னர்ப் பாடப்பட்டது என்னலாம்.

அறுசீர்க் கழிநெடிலாசிரியவிருத்தம், எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம், எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்; பன்னிருசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம் என்பனவும் திருவாசகத்தில் உண்டு. இவை பெரும்பாலும் சங்க காலத்துக்குப் பிற்பட்டவர்களால் ஓசையின்பமும் பொருட்செறிவும் எளிமையும் கருதிக் கையாளப் பட்டன. மாணிக்கவாசகர் காலத்திலிருந்தே ஆசிரிய விருத்தத் துக்குச் செல்வாக்கு உண்டாயிற்று என்னலாம். தொல்காப்பியர் கூறாத விருத்த இலக்கணம் பிற்காலத்தார் கூறுதற்கு இலக்கியமாக அமைந்தன, மாணிக்கவாசகர் போல்வார் பாடல்களே என்னலாம்,

அடியேன் அல்லேன் கொல்லோ
 தான்எனை யாட்கொண் டிலைகொல்லோ
அடியா ரானார் எல்லாரும்
 வந்துன் தாள்சேர்ந்தார்
செடிசேர் உடலம் இதுநீக்க
 மாட்டேன் எங்கள் சிவலோகா
கடியேன் உன்னைக் கண்ணாரக்
 காணு மாறு காணேனே.[9]

---

7. தொல். செய். 125
8. சிவபுராணச் சிற்றுரை—முன்னுரை பக். 13
9. திருச்ச. 83

இப்பாடலில் இரண்டாமடி ஐந்து சீராகவும் மற்றையவடிகள் ஆறுசீராகவும் வந்தது காணத்தக்கது. இது பற்றி அருணை வடிவேலர் கூறுவது வருமாறு :

> "பாவினங்களின் அடிகட்கும் பிற்காலத்தார் சீர்வரை யறுத்தா ராயினும், அவற்றுள் சிலவடிகள் சீர் மிக்கு வருதலும் முன்னைய வழக்கென்பது, சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலியவற்றாலும் அறியப்படும். அவ்வாற்றானே இத்திருப் பாட்டுள் இரண்டாமடியொழிந்தன அறுசீராயின"[10].

மேலே காட்டிய பாடல் திருச்சதகத்தின் 83ஆம் பாடல். 81ஆம் பாடல் முதல் 90ஆம் பாடல்வரையுள்ள பாடல்கள் ஐந்துசீர்கள் கொண்ட கலிநிலைத்துறைப் பாடல்களாம். அவற்றுள் 83ஆம் பாடலாகிய மேற்பாடல் மட்டும் இரண்டாமடி ஐந்துசீராக அமைய மற்றையடிகள் ஆறுசீராக அமைந்தன. இது பாட்டின் ஒழுங்கு அன்று. ஆதலின் அதற்கு அமைதியாகவே அருணை வடிவேலர் மேற்கண்டபடிக் கூறினார். சிலப்பதிகாரம் சிந்தாமணி போல்வனவற்றில் அவ்வாறு சீர்மிக்கு வரும் என்று கூறியதிலிருந்து, சீர்மிக்கு வருவதைத் தவிர்த்து இலக்கணம் செய்த பிற்கால யாப்பியல் நூல்களுக்கு முற்பட்டது திருவாசகம் என்பது போதரும்.

நானாரென் உள்ளமார் ஞானங்க ளாரென்னை யாரறிவார்
வானோர் பிரானெனை யாண்டிலனேல் மதிமயங்கி
ஊனா ருடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ[11]

இப்பாடல் தரவுக் கொச்சகக் கலிப்பா வகையைச் சாரும்.

வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்
ஐஞ்சீ ரடியும் உளவென மொழிப[12]

என்னும் இலக்கணத்தின்படி மேற்பாடலின் முதலடி ஐந்து சீராக வந்தது. ஆசிரியப்பாவில் ஐந்துசீர் வருதற்குத் திருவாசகத் திருவண்டப்பகுதியில் உள்ள

"நீற்றொடு தோற்ற வல்லேன் போற்றி நாற்றிசை"

என்னும் அடியைக்[13] காட்டலாம். தொல்காப்பியர் கூற்றுக் கேற்ப மேலன அமைந்தமை காணலாம். பிற்காலத்தில் யாப்பருங்கலக் காரிகையுடையாரும்,

---

10. திருவா. திருக்கோ. குறிப்புரை
11. திருக்கோ. 2
12. தொல். செய். 60
13. திருவண்ட. 109

"அருகிக் கலியோ டகவல் மருங்கின் ஐஞ்சீரடியும்
வருதற் குரித்தென்பர் வான்தமிழ் நாவலர்"[14]

என்றார். கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் வந்த நூல்களில் இத்தகைய சீர்க் குறைவான பாடல்களைக் காணமுடியாது.

இதுகாறும் கூறியவற்றால் மாணிக்கவாசகர் காலம் கி. பி. 4ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகும் என்பது பெறப்படும்.

4. சிவபுராணம்

திருவாசகத்தில், முதற்பாடலாக "நமச்சிவாய வாஅழ்க" எனத் தொடங்கும் செய்யுள் வெண்பா (கலிவெண்பா) பாடல் காணப்படுகின்றது. அதில் மாணிக்கவாசகர்,

"சிவனவன்என் சிந்தையுள் நின்ற வதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பன்யான்"[15]

என்று சிவபுராணம் உரைப்பதாகக் கூறினார். புராணம் என்பது பழமையைக் குறிக்கும். அது இங்குக் காலப் பழமையைக் குறியாது. அதற்கும் அப்பாற்பட்ட பழமையைக் குறிக்கும். அதனால் இப்பாடலின் பொருள் தலைப்பாக, "சிவனது அனாதி முறைமையான பழமை" என முன்னோர் குறித்தனர் என்பர்.

"பாமர மக்களின் அறிவுக் குறைகளை நீக்கி அவர்கள் உணர்ந்து கொள்வதற்கு ஏற்றவாறு புனை கதைகளோடும், வரம்பிகந்த கட்டுக் கதைகளோடும் மெய்ம்மைக் கூறுகளைத் தம்மகத்தே கொண்டவை புராணங்கள்"[16]

என்பது சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்கள் கூற்று. அவர்கள் கூறிய புராணங்கள் புனைகதைகளைக் கொண்ட புராண இலக்கியங்கள் பற்றியாகும்.

"வேத காலத்துக்கு முன்பே வாழ்ந்த மக்களிடையே நிலவியிருந்த மரபுவழிக் கதைகளே பிற்காலத்தில் புராணங் களாக மலர்ந்தன"[17]

---

14. யாப்பருங்கலக் காரிகை 42
15. சிவ. 17—20
16. புராண இலக்கிய வரலாறு, பக். 12
17. " " பக். 14

என்பதும் ஒரு கோட்பாடு எனவே புராணம் என்பது, பழங்கதை யாகி அதனைக் கூறும் இலக்கியத்துக்குப் பெயராகியது என்னலாம்.

மாணிக்கவாசகர் கூறிய சிவபுராணம், ''உய்ய என் உள்ளத்து ஓங்காரமாய் நின்ற மெய்யா என்னும் விளியிலிருந்து,''அல்லற் பிறவி அறுப்பானே'' என்பது வரையிலுள்ள விளிகளே என்றும், அவை எண்ணி வந்த வகையில் அறுபத்துமூன்று என்றும், அவையாவும் சிவனது பழமைச் செய்திகளே என்றும் அடிகளாசிரியர் கூறுவர்.[18] மேலும் அவர்,

> ''சிவபெருமான் அநாதி காலத்திருந்து உயிர்களுக்காகச் செய்துவரும் செயல்களை அடிகளார் தம் மேல் வைத்தும், பிறர்மேல் வைத்தும் கூறுவதுடன் அப்பெருமானுடைய ஏனைய இலக்கணங்களையும் இடையிடையே கலந்து கூறுவ தால் இப்பகுதி (33 முதல் 91 வரையுள்ள வரிகள்) சிவசூத்திரம் என்று கூறத்தகும் என்க,''

என்றும் கூறுவார்.[19] மாணிக்கவாசகர் கூறிய அறுபத்துமூன்று புராணங்களுள் கட்டுக் கதைகள் சிலவேயுள்ளன. விடைப்பாகா என்பதை வேண்டுமானால் கொள்ளலாம். ''வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே'' என்று கூறியதால் வேதங்கள் ஒரு காலத்தில் தோற்றுவிக்கப்பட்டன என்பதும் அவைகள் இறைவனைப் பெரியவன் என்று கூறுவதாகவும் கூறியதும் கதை யாகலாம். பிற்காலத்துப் புராணங்கள் கூறும் கட்டுக்கதைகள் போல்வன அல்ல அவைகள். யாவும் சிவபிரானின் பழமையான தன்மைகளாக அருட்குணங்களாகவே உள்ளன. எனவே புராணம் என்பது புனைவுக் கதைகளைக் கூறும் இலக்கியம் என்ற பொருளில் ஆளப்படாமல், சிவபிரானின் தன்மை என்ற பொருளில் மாணிக்க வாசகர் ஆண்டுள்ளமையின் ஒன்றை நாம் நினையலாம். 'மாணிக்கவாசகர் புனைவுக் கதைகளைக் கூறும் இலக்கியங்களாகிய புராணங்கள் தோன்றிய காலத்துக் கடவுளது அநாதியான பழமைக்குணங்களே புராணம் என்னும் கருத்தும் நிலவியிருந்திருக் கலாம்' என்பது அது. பௌத்தர்களின் புத்தசாதகக் கதை முதலிய புனைவு இலக்கியங்கள் அவர்க்குப் புராணங்களாகக் கொள்ள மனமில்லை என்பதும் கருத வாய்ப்புண்டு. எனவே புத்த, சைன புராணங்கள் நிலவிய கி. பி. 3ஆம் நூற்றாண்டில் மாணிக்க வாசகர் வாழ்ந்தவர் எனவும் நாம் கருதலாம்.

---

18. சிவ. சிற்றுரை பக். 22 19. சிவ. சிற்றுரை பக். 22

**5. ஆசீவகம்**

மாணிக்கவாசகர் காலத்தில் பல சமயங்கள் இருந்தன. மாயாவாதம், உலோகாயதம், மாவிரதம் என்னும் சமயங்களின் பெயர்களைக் கூறி, அறுவகைச் சமயம் எனத் தொகைநிலையில் ஆறு கூறி,

> "ஆத்த மானார் அயலவர் கூடி
> நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்"[20]

என நாத்திக மதம் பற்றியும் கூறியுள்ளார். எனவே, அவர் காலத்தில் பல சமயவாதிகள் இருந்தனர் என்பது புலப்படும். அவரால் கூறப்பட்ட சமயங்களின் விளக்கம் இங்குத் தேவையில்லை. பொதுவாகக் கடவுள் இல்லை என்போரை 'நாத்திகர்' என்பது வழக்கு. நாத்திகருள் சிறப்பாகப் பௌத்தர், சமணர், ஆசீவகர் என்பவர் குறிக்கப்படுவர். அம்முத்திறத்தாரின் தலைவர்கள் புத்தர், மாவீரர், மற்கலி என்போராவர். புத்தரும், மாவீரரும் 'கடவுள் இல்லை, உயிர்கள் தாம் செய்யும் வினைவழி யியங்கக் கூடியன' என்பர். ஆசீவகர், "கடவுள் இல்லை; வினைகளும் இல்லை. உயிர்களின் பிறப்பு இறப்புகளுக்கும் துய்க்கும் இன்ப துன்பங்களுக்கும் நியதி என்னும் ஒன்றே அமையும். அந்நியதியையும் காரணம் என்ற பெயரால் கூறக் கூடாது' என்பர். அதனால் அவர்களைக் காரணம் வேண்டாக் கடவுட் குழாம் என்பர்[21].

திருவாசகத்தில் வினையுண்டு என்பதைப் பல விடங்களில் தாம் துய்ப்பதாகக் கூறிச் செல்வதன் மூலம் வலியுறுத்தினார். இது ஆசீவகரை மனதிற் கொண்டே கூறியதாகும்.

> "மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே"[22]

> "வினைகெடக் கைதர வல்ல கடவுள்"[23]

> "வினையிலே கிடந்தேனை"[24]

> "மடங்கஎன் வல்வினைக் காட்டைநின்
> மன்னருள் தீக்கொளும் விடங்க"[25]

> "பழவினைகள் பாறும் வண்ணம்
> சித்தமல மறுவித்து"[26]

இப்படிப் பல விடங்களில் கூறியுள்ளார்.

---

20. போற்றித் 46, 47
21. நீலகேசி. 668
22. சிவ. 25
23. போற்றி. 94
24. திருச்ச. 22.
25. நீத். 19
26. அச்சோ. 1

பௌத்தரும் சைனரும் கடவுள் இல்லையென்றாலும் உயிர் இன்ப துன்பங்களின் நீங்கி அடையும் நிலையை வீடுபேறு என்பர். அவர்கள் வீடுபேறடைந்த உயிர் மீளப் பிறத்தல் இல்லை என்பர். ஆசீவகரும் வீடுபேறுண்டு என்பர். வீடுபேறு செம்போதக நெறி என்றும் மண்டல நெறி என்றும் இருவகைப்படும் என்பர்.

மீண்டும் பிறவா நிலையில் உள்ள வீடுபேறு செம்போதக நெறி வீடுபேறு என்றும், மீண்டும் பிறக்கும் நிலையில் உள்ள வீடுபேறு மண்டல நெறி வீடுபேறு என்றும் ஆசீவகர் கூறுவர். மீண்டும் பிறக்கும்படியான மண்டல நெறியால் அடையும் வீடுபேறு வீடுபேறே ஆகாது; அது தவறு. அக் கொள்கையைப் பலவிடங் களில் மறுத்தார் மாணிக்கவாசகர்.

''வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே''[27]

என்பதில், ''பொய்கெட்டு மெய்யான அடியவர் மீளவும் வினைக்கு ஏதுவாகப் பிறவியை யெய்தாதபடி அவர்தம் ஐம்புலக் குரம்பை களைக் கட்டோடு அழிக்க வல்லான் இறைவன்'' என்று கூறியவதனால், வீடுபேறடைவோர் மீளப்பிறத்தல் இல்லை என்பதை யுணர்த்தினார்.

''மீண்டு வாரா வழியருள் புரிபவன்''[28]

என்றும்,

''........ என்னையுந்தன் இன்னருளால்
இப்பிறவி யாட்கொண் டினிப்பிறவா மேகாத்து''[29]

என்றும்,

''பிறிவறியா அன்பர் நின்னருட்
பெய்கழல் தாளிணைக்கீழ்
மறிவறியாச் செல்வம் வந்து
பெற்றார்''[30]

என்றும்,

27. சிவ. 84, 88
28. கீர்த்தி—117, 118
29. திருவம். 12
30. அடைக். 9

"வாரா உலகம் தந்து வந்தாட் கொள்வானே"[31]
என்றும்,

"வாரா வழியருளி வந்தென் உளம் புகுந்த
ஆரா வமுதாய்"[32]

என்றும் பலவிடங்களில் வீடுபெற்றோர் மீள்வதில்லை என்பதைத் தெளிவாக்கியுள்ளார்.

ஆசீவகரும் சைனரும் உயிர்களுக்கு அவற்றின் பண்புகளுக் கேற்ப நிறம் கூறுவர்.

"கரும்ம் பிறப்பும் கருநீலப் பிறப்பும்
பசும்ம் பிறப்பும் செம்ம் பிறப்பும்
பொன்ன் பிறப்பும் வெண்ண் பிறப்பும்
என்றிவ் வாறு பிறப்பினும் மேவிப்
பண்புறு வரிசையிற் பாற்பட்டுப் பிறந்தோர்
கழிவெண் பிறப்பிற் கலந்துவீ டணைகுவர்"[33]

என்று மணிமேகலையில் ஆசீவகர் உயிர்நிறம் கூறப்பட்டுள்ளது. அங்குத் தர நிகாயம் என்னும் பாளி நூலில் பூரணகச்சபன் என்பவன் கொள்கையாக நிறம் பற்றிக் கூறுவது வருமாறு;—

(1) கரும்பிறப்பு : கொலைத் தொழிலாற்றுவோர், வேடர், மீனவர், திருடர், சிறைச்சாலைக் காவலர்.

(2) நீலப்பிறப்பு: திருட்டு வாழ்வு மேற்கொண்ட புத்தபிக்குகள்.

(3) செம்பிறப்பு : சைனத் துறவிகள்

(4) பசும்பிறப்பு : ஆசீவக இல்வாழ்வோர். இவர்களை ஏனைய சமயத் துறவிகளைவிட உயர்வாகக் கொள்வர்.

(5) வெண்பிறப்பு : ஆண் பெண் இருபாலாரும் அடங்கிய ஆசீவகத் துறவிகள்.

(6) கழிவெண்பிறப்பு : நந்தவாச்சன், கிச்சங்கிச்சன், மக்கலி கோசலர்.[34]

உயிர்களுக்கு நிறம் கூறியதற்கு மாறாக மாணிக்கவாசகர், இறைவனுக்கே நிறம் கூறுவர். "நிறங்கள் ஓர் ஐந்துடையாய்"[35]

31. ஆசை. 7
32. திருவம். 2
33. மணிமேகலை, சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை. 150,155
34. தமிழகத்தில் ஆசீவகர்கள், பக். 32
35. சிவ. 49

என்பது அவர் வாக்கு. நிலம், நீர், தீ, காற்று, வான் ஆகிய ஐந்தற்கும் முறையே உரிய பொன்மை, வெண்மை, செம்மை, கருமை, புகைமை எனும் ஐந்து நிறங்களும் உடையவன் இறைவன்; ஏன்எனின், அவ்வைந்துமாக இருப்பவன் ஆதலின்.

யாவும் அணுக் கூட்டம் என்பது யாவரும் கூறுவது. ஆசீவகர் ஓர் அணு ஓர் அணுவுள் புகாது என்பர். ஓர் அணு சிறுத்தலும் பெருத்தலும் இல்லையென்பர்.

"ஆதி யில்லாப் பரமா ணுக்கள்
தீதுற் றறியா சிதைவதும் செய்யா
புதிதாய்ப் பிறந்து ஒன்று ஒன்றிற் புகுதா"[36]

என்பது மணிமேகலை. மாணிக்கவாசகர் இறைவனை "அணுவே போற்றி"[37] என அணுவடிவினனாகக் கூறியதோடு "அணுத்தரு தன்மையில் ஐயோன்"[38] என அவன் அணுவுக்குள் நுண்மையனாக உள்ளவன் என்பதையும் கூறினார். ஓரணு ஓரணுவுள் புகாது என்பதற்கு மாறாக

"நள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே"[39]

என்றும்,

"உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பது"[40]

"நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய் மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து
நின்றான்"[41]

என்றும் இறைவன் அணுவுள் அணுவாய்ப் புகுதல் கூறினார்.

காலம் என்பது ஒன்றில்லை என்பது ஆசீவகர் கோட்பாடு. பௌத்தரும் காலம் இல்லை என்பர். காலம் என்பது கணத்திற் கழிவது ஆதலின் கணபங்கம் என்று கூறிக் காலத்தை ஏற்பதில்லை.

"காலம் உண்டாகவே காதல் செய்துய்மின்"[42]

என்றும்,

36. மணிமேகலை, சமயக் கணக்கர் தம் திறம் கேட்டகாதை 126-128.
37. போற்றி. 112.
38. திருவண்ட. 45.
39. திருச்ச. 46
40. கோயில் மூத்த. 1
41. திருத்தோ. 5
42. திருப்பாண்டி. 5

உழிதரு காலும் கனலும்
புனலொடு மண்ணும் விண்ணும்
இழிதரு காலம் எக்காலம்
வருவது வந்த தற்பின்
உழிதரு காலத்த உன்னடி
யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை
காத்தெம் மைக்காப் பவனே[43]

என்றும் கூறியது, ஆசீவகர் கோட்பாடாகக் கூறப்பட்ட ''கணமே எனினும் ஒரு காலம் இலை'' என்பதற்கு மறுப்பாகவுளது.

மேலே குறிப்பிட்டவையாவும் ஆசீவகக் கோட்பாடு பற்றியன வாகும். பௌத்த சமணக் கோட்பாடுகள் சிலவும் ஆசீவகக் கோட் பாடுகளுடன் ஒத்தனவாக இருந்தாலும் பெரும்பாலும் மாணிக்க வாசகரால் கூறப்பட்டன ஆசீவகக் கோட்பாட்டு மறுப்புகளாகவே அமைகின்றன. ஆதலின் மாணிக்கவாசகர் கி.பி. 4ஆம் நூற்றாண்ட ளவில் பெருகியிருந்த ஆசீவக காலத்தைச் சார்ந்தவர் என்னலாம்.

புத்தரால், தோற்றுவிக்கப்பட்ட பௌத்த சமயமும் மகாவீரரால் தோற்றுவிக்கப்பட்ட சைன சமயமும் இன்றுவரை நிலைத்துள்ளன. ஆனால் மற்கலி கோசலரால் தோற்றுவிக்கப் பட்ட ஆசீவகம் குறிப்பிடப்பட்டு மறுக்கப்பட்டதாயினும், சிவஞான சித்தியார் ஆசிரியர், ஆசீவகர் பற்றிய தெளிவில்லாமலே பல சமயங்களைக் கூறி மறுத்ததுபோல ஆசீவக சமயத்தையும் மறுத்தார். அவர் காலத்தில் ஆசீவகம் மறைந்து பட்டது என்றே கொள்ளலாம். ஆசீவகம் மறைந்ததற்குக் காரணம் பொருத்தமற்ற அதன் கோட்பாடுகளால் மக்கள் கொண்ட வெறுப்பே என்னலாம். காலப்போக்கில் ஆசீவகர் பௌத்தராகவும் சைனராகவும் பிரிந்து பௌத்த சைனத்துடன் இணைந்து விட்டனர். ஒரு சமயம் தோன்றி அழிந்ததென்பதாலேயே அதன் பழமையும் உணரப்படும்.

''புத்த நந்தி முதலான தேரர்''[44]

''புத்தநந்தி செயிர்த்தெழுந்து தேரர்குழாம் சூழச்சென்று''[45]

43. திருச்ச. 8.
44. பெரிய புராணம். திருஞானசம்பந்தர் புராணம் 905, தேரர் என்பது ஆசீவகர் பெயர்
45. பெரிய புராணம். திருஞானசம்பந்தர் புராணம் 906.

எனச் சேக்கிழார் கூறுவதால் தேரர் புத்த சமயத்தவராயினர் என்பதும், சிவஞான சித்தியார் ''என்னுபிரதற்கு'' எனத் தொடங்கும் பாடலில்[46]

''அன்னதோர் வாய்மை ஆசீவகம் அமணர்களிற் கூறும்'' என வருமிடத்துத் தத்துவப்பிரகாசர் ''அமணர் இருவகையாரில் ஆசீவகன் சொல்லும்'' என எழுதிய உரையால் ஆசீவகர் சமணம் சார்ந்தனர் என்பதும் அறியப்படும்.

மாணிக்கவாசகர் வீரசைவர் என்பது முன்னர்க் கூறப்பட்டது. பின்னரும் மாணிக்கவாசகர் வீரசைவர் என்பது நிறுவப்படும். அதைக் கொண்டும் அவர் கி.பி. 3ஆம் நூற்றாண்டினராவர் என்பதை நிறுவலாம்.

வீரசைவர் தமக்கெனத் தத்துவ அமைப்புக் கொண்டுள்ளனர். அவ்வமைப்பு தமிழகத்துப் பரவுவதற்கு முற்பட்ட காலத்தவர் மாணிக்கவாசகர். கன்னட ஆந்திர நாடுகளிற் பரவிய பின்னரே தமிழகத்தில் வீரசைவ தத்துவ நூல்கள் வந்தன. தமிழில் கி. பி. 17ஆம் நூற்றாண்டினரான சிவப்பிரகாச சுவாமிகளுக்கு முன்னர் அதிக நூல்கள் இல்லாமை காணலாம். அங்கத்தலம், இலிங்கத்தலம் முதலிய சடுத்தலங்கள் பற்றியும், குருலிங்கம், சங்கமம் முதலிய அட்டாவரணம் பற்றியும் மாணிக்கவாசகர் திருவாசகத்தில் எங்கும் காணப்படவில்லை. அவர் காலத்தில் சைவம் என்பது இருபிரிவாக இருந்ததேனும் சைவம் வீரசைவம் என்ற பெயர்களோடில்லாமல் பொதுவில் சைவம் என்றே இருந்தது. அதனால்தான் ''ஐயாற தனிற் சைவனாகியும்''[47] எனச் சிவபிரானைச் சைவன் என்றே குறிப்பிட்டார்.

புதையுண்ட கி.மு. ஆண்டுகளைச் சார்ந்த அரப்பா மொகஞ் சதரோ நகரங்களில் அகழ்வாராய்ச்சி செய்தபோது, கையில் வைத்துப் பூசை செய்தற்குரிய சிறுசிறு சிவலிங்கங்கள் கிடைத்தன என்பதிலிருந்து, சிவலிங்கங்களைக் கையில் வைத்துப் பூசை செய்யும் வீர சைவ வழிபாடு பழங்காலத்திலேயே இருந்தது என்பதை யறியலாம்.

தமிழர் பலதெய்வ வழிபாட்டினர். தெய்வங்களின் பெயரடிப் படையில் சமயங்களை வகுக்கவில்லை. ஆசீவகர். பௌத்தர், ஜைனர் தமிழகத்துக்கு வந்தபோது தங்கள் மதத் தலைவர்களின்

---

46. சிவஞான சித்தியார் பரபக்கம், 165

47. கீர்த்தி. 85.

பெயர்களால் ஆசீவகம், பௌத்தம், சைனம் எனச் சமயப் பெயர் களை வைத்திருந்தமையின் சிவனை வழிபடுவோர் சைவர் என்று பெயர் வைத்தனர். வைணவர் மிகப்பிற்காலத்தில் விஷ்ணுவை வழிபடுவோர் வைஷ்ணவர் எனச் சமயம் வகுத்தனர். எனவே மாணிக்கவாசகர், சமயப் பாகுபாடு தமிழகத்தில் தோன்றுதற்கு முன்னர் அதாவது சைவமானது சைவம் என்றும் வீரசைவம் என்றும் பிரித்துணர்ந்து தத்துவக் கோட்பாடுகள் வகுக்கப்படுதற்கு முன்னர் வாழ்ந்தவர் என்பது பெறப்படும்.

## மூவர்க்குப்பிற்பட்ட கி.பி. 9ஆம் நூற்றாண்டினர் அல்லர்

இனி மாணிக்கவாசகர் கி. பி. 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் எனப் பன்னிரு திருமுறை வரலாறுடையார் கூறுதற் கான சான்றுகளும், மறைமலையடிகளாரின் கருத்துகளை அடிப் படையாகக் கொண்டு அவற்றை மறுப்பதற்கான காரணங்களும் வருமாறு:-

### 1. திருமுறை வகுப்பு

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் மூவர் தேவாரங்களும் முதல் ஏழுதிருமுறைகளாகவும், திருவாசகம், திருக்கோவையார் இரண்டும் எட்டாந் திருமுறை யாகவும் முன்னோர் வகுத்தமை மூவர்க்கும் பிற்பட்டவர் மாணிக்கவாசகர்.

மறுப்பு : திருமுறைகள் கால அடிப்படையில் வகுக்கப்பட வில்லை. சுந்தரர்க்கு முற்பட்டவர்களான காரைக் காலம்மையார், நக்கீரர். சுந்தரர் காலத்தவரான சேரமான் பெருமாள் நாயனார் போல்வார் பாடல்கள் பதினோராந்திருமுறையிற் சேர்க்கப்பட் டிருத்தலின் காலவரிசையில் திருமுறைகள் தொகுக்கப்படவில்லை என்பதை யறியலாம்.

ஒருவரின் பாடல் மிகுதி காரணமாகவும் திருமுறை தொகுக்கப் படவில்லை. மூவாயிரம் பாடலுள்ள திருமந்திரம் பத்தாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

"நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்" எனச் சுந்தரரால் போற்றப்பட்ட திருமூலரின் திருமந்திரம் சுந்தரரின் ஏழாந்திருமுறைக்கு முன்னர் அன்றோ தொகுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கி.பி. 985 முதல் 1014 வரை சோழநாட்டையாண்ட முதலாம் இராசராசன், நம்பியாண்டார் நம்பி என்பவரின் துணை கொண்டு முதலில் தேவார முதலிகள் மூவர் தேவாரங்களையும் தில்லை ஆரியப் பிராமணர்கள் வசமிருந்து மீட்ட மகிழ்ச்சியில் முதல் ஏழு திருமுறைகளாகத் தொகுத்தான். பின்னர் தமிழகத்துப் பலராலும் பாடப்பட்டு வந்த திருவாசகத்தை எட்டாந்திருமுறையாக வகுத்தான். திருக்கோவையாரையும் அதில் சேர்த்தான். பின்னர் ஒன்பது, பத்து, பதினோரு திருமுறை களை வகுத்தான் என்பதே உண்மையாம்.

சங்கப் பாடலாகிய நக்கீரரின் திருமுருகாற்றுப் படை முதல் இராசராசன் காலப் பாடல்கள் வரையுள்ளனவற்றைப் பதினோராந்திருமுறையாக வகுத்ததிலிருந்தே கால அடிப்படையில் திருமுறைகள் வகுக்கப்படவில்லை என்பதை யறியலாம்.

**2. சிராப்பள்ளி**

"சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி" என்பது மாணிக்க வாசகர் கூற்று. சிராப்பள்ளி ஒரு காலத்தில் சைனர் வசமிருந்தது. கி. பி. 7ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த மகேந்திரவர்ம பல்லவனே அதை மீட்டுச் சைவத் தலமாக்கினான். பள்ளி என்பது சைன மடத்தைக் குறிப்பது. ஆதலின் அக்காலத்துக்குப் பிற்பட்டவர் மாணிக்கவாசகர்.

மறுப்பு : பள்ளி என்பது ஆசீவக, பௌத்த, சைனத்துறவிகள் தங்கும் இடத்தைக் குறிக்கும். மாணிக்கவாசகர் காலத்தில் பௌத்தர் வசம் இருந்த சிராப்பள்ளி பின்னர் மாணிக்கவாசகர் காலத்தில் சைவர்க்குரியதாகியிருக்கலாம். அவர் காலத்துக்குப் பின்னர் மீளவும் சைனரிடம் மாறியிருக்கலாம். மகேந்திரவர்ம பல்லவன் சைவத்தலமாக்கியிருக்கலாம்.

**3. அரிகேசரி**

"கலையார் அரிகே சரியாய் போற்றி" என்பது மாணிக்க வாசகர் கூறியது. அரிகேசரி என்பது திருஞானசம்பந்தரால் கூன்நிமிர்க்கப் பெற்ற, பாண்டியன் நின்றசீர் நெடுமாறனு டைய சிறப்புப் பெயர். அவன் பெயரால் அமைந்த அரிகேசரி நல்லூரையே மாணிக்கவாசகர் குறிப்பிட்டார்.

மறுப்பு : சேக்கிழார் தம் கால அரசனான குலோத்துங்கனின் சிறப்புப் பெயராகிய அநபாயன் என்பதைப் பலவிடங்களில் குறிப் பிட்டதுபோல நின்றசீர் நெடுமாறனை அரிகேசரி என்னும் சிறப்புப் பெயரால் குறிப்பிடவில்லை.

இராசகேசரி, பரகேசரி என்னும் சிறப்புப் பெயரைச் சோழர் புனைந்து கொண்டமை போலப் பாண்டியரும் அரிகேசரி போலும் சிறப்புப் பெயரைப் புனைந்து கொண்டவராகலாம்.

களவியல் உரையில் நக்கீரரால் எடுத்தாளப்பட்ட பாண்டிக் கோவைப் பாடல்களில் அரிகேசரி எனும் பெயர் காணப்படுகின்றது. அவற்றில் நெடுமாறன், பராங்குசன் என்னும் பெயர்களும் காணப் படுகின்றன. அரிகேசரி நெடுமாறன் எனச் சேரக் காணப்பட வில்லை. அதனால் அப்பாண்டிக் கோவைக்குரிய பாண்டியன் யாவன் என முடிவு கூற இயலவில்லை. அப்பெயர்கள் யாவும் அப்பாண்டியன் சிறப்புப் பெயர்களேயாம். ஞானசம்பந்தரால் பாடப் பட்ட நின்றசீர் நெடுமாறன் தான் பாண்டிக்கோவை நெடுமாறன் என்பதற்கு வேறு சான்று யாதும் இல்லை. பாண்டிக்கோவையில் ஞானசம்பந்தரின் வரலாற்றுச் செய்திகளுள் ஒன்றேனும் கூறப் படவும் இல்லை.

அரிகேசரி நல்லூர் என்பது ஊர்ப் பெயராயின் அதை அரிகேசரி என்ற அளவில் மாணிக்கவாசகர் சுருக்கினார் என்பது பொருந்தாது.

## 4. தத்துவம்

திருவாசகத்திற் கூறப்பட்ட பஞ்சமலம், வினை யொப்பு, முதலிய தத்துவ விளக்கங்கள் சில தேவார ஆசிரியர் காலத் துக்குப் பின் தோன்றியவை எனத் தெரிகிறது.

மறுப்பு : மாணிக்கவாசகர் திருவாசகத்தில் உள்ள தத்துவக் கருத்துகள் தத்துவ நூல்களைப் பார்த்து எழுந்தவையல்ல. தேவார முதலிகள் பாடல்களிலும் தத்துவக் கருத்துகள் உண்டு. சைவ சித்தாந்த சாத்திர நூல்கள், தேவார திருவாசகம் முதலிய பாடல்களில் வந்துள்ள கருத்துகளை வைத்தே பிற்காலத்தில் எழுதப்பட்டன. வை. இரத்தினசபாபதி எழுதிய ‘திருமுறைத் தெளிவே சிவஞான போதம்’ எனும் அரிய ஆய்வு நூல் மூலம் அக்கருத்தை உணரலாம். மாணிக்கவாசகர் காலத்தில் வீரசைவ தத்துவக் கோட்பாடுகளும் உண்டு. அவை அவர் காலத்தில் தத்துவ நூல் வடிவில் வரவில்லை என்பது முன்னரும் கூறப்பட்டது.

## 5. மாயாவாதம்

திருஞான சம்பந்தர் காலத்துக்குப் பிற்பட்டவரான ஆதிசங்கரர் மாயா வாதத்தைப் பரப்பியவர்.

> ‘‘மிண்டிய மாயா வாதம் என்னும்
> சண்ட மாருதம் சுழித்தடித் தார்த்து’’[48]

---

48. போற்றி. 54, 55

என மாணிக்கவாசகர் மாயாவாதம் பற்றிக் குறிப்பிடுவதால் மூவர்க்குப் பிற்பட்டவர் மாணிக்கவாசகர்.

மறுப்பு: ஆதிசங்கரர் ஏகான்ம வாதத்தினர். சைன, பௌத்தர்கள் கடவுள் இல்லை என்பவர்; அதனால் அவர்கள் 'நிரீசுரவாதிகள்' எனச் சைவ வைணவரால் குறிப்பிடப்படுவர். அவ்வாறே உயிர் இல்லை என்னும் கொள்கையுடைய ஆதிசங்கரர் 'நிர்ஜீவ வாதி'யாவார். உயிர் என்பது ஒன்றில்லை; பரம்பொருளே உயிர்களாக மாறுகிறது என்று கூறி அதற்கு மாயாவாதத்தைத் துணையாகக் கொண்டார் அவர். மாயாவாதம் அவர்க்கு முன்பேயிருந்ததுதான். வினைக் கொள்கையைப் பௌத்தரும் சைனரும் வற்புறுத்தி வந்தனர். தமிழர்கள் பௌத்த சைனர்கள் தமிழகத்துக்கு வருவதற்கு முன் பன்னூறாண்டுகட்கு முன்னரே வினைக்கொள்கையுடையராய் இருந்தனர். பௌத்த சைனர் வந்த பின்னர் அக்கொள்கையைத் தத்துவ நூல்களில் எடுத்து வற்புறுத்து வாராயினர். அவ்வாறே ஆதிசங்கரர்க்கு முன்னரே மாயாவாதம் இருந்ததை, அவர்தம் ஏகான்மவாதக் கொள்கைக்கு உறுதுணையாகக் கொண்டு அதை வற்புறுத்துவாரானார். உயிர் என்பது ஒன்றில்லை; எல்லாம் பரமான்மாவின் கூறுபாடுகளே; யாவும் மாயையே எனக் கொண்டதால்தான் அரசமாதேவியைக் கற்பழித்துக் காமக் கலையுணர்ந்தார் ஆதிசங்கரர்.

6. சுந்தரர் தம் திருத்தொண்டத் தொகையில் மாணிக்கவாசகரைக் கூறவில்லை.

மறுப்பு: சுந்தரரின் திருத்தொண்டத் தொகை பதினொரு பாடல்கள் கொண்டது. தமக்கு முன்னிருந்த சிவனடியார் பெயர்களைக் கூறி அவர்களின் அடியார்க்கும் அடியேன் என்றார். பத்தாம் பாடலில் அடியவர் எழுவர் பெயர் குறிப்பிடாமல் முப்போதும் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர் என்பன போலக் கூறினார். அதனால் அப்பாடலில் குறிப்பிட்டவரைத் தொகையடியார் என்றனர் பிற்காலத்தவர். முதற்பாடலில் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்றும், ஏழாம் பாடலில் "பொய்யடிமையில்லாத புலவர்க்கும் அடியேன்" என்றும் சுந்தரரால் கூறப்பட்டவர் இருவரும் தனித் தனியடியார்கள் எனக் கொள்ளாமல் தொகையடியார்களாகவே கொண்டு பெரிய புராண ஆசிரியர் புராணம் பாடினார். அவரிருவரையும் சுந்தரர், தொகையடியார் வரிசையில் வைத்துப் பாடாமல்

தனியடியார் வரிசையில் வைத்துப் பாடியதால் அவரிருவரும் தனி யடியார்களே எனக் கொள்ளல் வேண்டும். தில்லைவாழ் அந்தணர் என்றது நடராசப் பெருமானையேயாம். அவரே அடியார்கட்கு அருள் செய்ய வேண்டி அந்தண வடிவில் வந்தவர். தில்லைவாழ் அந்தணனாகிய நடராசப் பெருமானுக்கும் அவனடியார்க்கும் யான் அடியேன் என்று கூறவே ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்றார் சுந்தரர்.

சேக்கிழார் காலத்தில் வாழ்ந்த அந்தணர்கள் தமிழ் அந்த ணர்கள் அல்லர்; ஆரியப் பிராமணர்கள். தில்லைக்கோயிலில் பெரிய புராணம் பாடநேர்ந்தமையின் ஆரியப் பிராமணர்களைத் தமிழ் அந்தணர் போலப் பாடினார் சேக்கிழார்.

''பொய்யடிமையில்லாத புலவர்' என்னும் தனியடியார் மாணிக்கவாசகரேயாவார் என்பர் மறைமலையடிகள் போல்வார். மாணிக்கவாசகர் வீரசைவராதலின் சேக்கிழார் அவரைப் பாடாமல் தொகையடியாராகப் புராணம் பாடினார் என்பர் மறை மலையடிகள். அதுவே உண்மையாகலாம். தில்லையம்பலத்துக்கு 'நாளைப் போவேன் நாளைப் போவேன்' என அடிக்கடிச் சொல்லி வந்தமையால், நந்தனார் திருநாளைப் போவார் ஆனார் எனக் கண்டுபிடித்து அவர் புராணமும், அடியார் குறிப்பறிந்து நடந்தார் எனக் காரணம் கண்டு திருக்குறிப்புத் தொண்டரானார் என அவர் புராணமும் பாடிய சேக்கிழார், அடிக்கடித் தம் பாடல்களில் பொய்யன் எனத் தம்மைச் சொல்லிக் கொண்டமையால் - பொய் யடிமையின்றி மெய்யடியாராகவே விளங்கியவர் மாணிக்கவாசகர் எனக் கொண்டு, அவர் புராணம் பாடியிருக்கலாம். சமயக்காழ்ப்புக் காரணமாகவே சேக்கிழார் பாடவில்லை.[49]

## 7. சிலவூர்கள்

கோகழி, கல்லாடம், வேலம்புத்தூர், சாந்தம் புத்தூர், உத்தரகோசமங்கை, பூவலம், பட்டமங்கை, அரிகேசரி, ஓரியூர், பாண்டூர், கவைத்தலை, குவைப்பதி போலும் ஊர்கள் மாணிக்க வாசகரால் கூறப்பட்டுள்ளன. அவை தேவாரங்களிற் காணப்பட வில்லை. அதனால் அவை பிற்காலத்தனவாகும்.

மறுப்பு : அவ்வூர்கள் தேவாரங்களில் காணப்படவில்லை என்ப தால், அவை மறைந்துபட்ட பிற்காலத்தவர் மூவர் என ஏன் கொள்ளலாகாது?

---

49. மா. வ. கா. பக். 913. இன் கருத்து.

மூவரும் சென்று பாடிய ஊர்களும் உண்டு. ஒருவரே பாடிய ஊர்களும் உண்டு. அவற்றை வைத்து எவர்க்குப் பின் எவர் எனத் தேவார ஆசிரியர்களை வரிசைப்படுத்த முடியுமோ?

கோகழி, கல்லாடம் முதலிய ஊர்கள் தமிழகத்தில் இல்லை. ஆனால் கன்னட நாட்டிலும், ஆந்திர நாட்டிலும், வடநாட்டிலும் உள்ளவை என அறிஞர் கண்டறிந்து கூறியுள்ளனர். தேவார ஆசிரியர் கால ஊர்கள் இன்றும் உள்ளன. மாணிக்கவாசகர் கூறிய ஊர்கள் சில இன்றில்லையென்பதனால் அவை மறைந்து பட்டிருக்க வேண்டும் அல்லது பெயர் மாற்றம் அடைந்திருக்க வேண்டும் என்று ஏன் கொள்ளலாகாது? இன்றுள்ள சின்னமனூர் என்பது அக்கால அரிகேசரி என்னும் ஊராகும் என்பதும் சான்று பகரும்.

தேவார ஆசிரியர் பாடிய ஊர்கள் மிகப்பல, மாணிக்கவாசகர் பாடிய ஊர்கள் சிலவே. மாணிக்கவாசகர் தாமே நேரிற் சென்று பாடிய ஊர்கள் குறிப்பிட்ட சிலவூர்களேயாகும். அதனால் மாணிக்கவாசகர் காலத்தில் சிவாலயங்கள் சிலவே இருந்தன என அறியலாம். பல்லவர்களாலும் பிற்காலச் சோழர்களாலும், ஆயிரக் கணக்கான சிவாலயங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அதனால் மாணிக்கவாசகருக்குப் பிற்பட்ட மூவரும் பலப்பல ஊர்களுக்கும் சென்று பாடினர் எனக் கொள்வதில் தவறில்லை. போற்றித் திருவகவலில் கூறப்பட்ட ஊர்கள் யாவற்றையும் மாணிக்கவாசகர் சென்று கண்டவர் என்றும் கூற முடியாது. சில கண்டும் சில கேட்ட அளவிலும் கூறியிருப்பார். மாணிக்கவாசகரால் குறிப்பிடப்பட்ட சிலவூர்களின் வரலாறுகள் இன்றுவரை எந்தப் புராணத்தும் பாடப் படவில்லை. அவை மக்களால் வழிவழி வழங்கி வந்து மறைந்தன போலும். இதுவும் மாணிக்கவாசகரின் காலப் பழமைக்குச் சான்றாகும். கோகழி என்னும் ஊரின் பழமை முன்னரும் கூறப் பட்டது.

8. பிற்காலப் பாண்டிக் கோவைப் பாடற் சொற்றொடர்கள் மாணிக்கவாசகரின் திருக்கோவையாரில் காணப்படுகின்றன.

மறுப்பு : திருக்கோவையாரிற் காணப்படும் சொற்றொடர் களே பாண்டிக்கோவையில் காணப்படுகின்றன எனத் திருப்பிக் கூறலாமே?

"சுந்தரரின் திருத்தொண்டத் தொகையிற் குறிக்கப்பட்ட திருமூலர் திருமந்திரம், தொகையிற்குறிக்கப்படாத திருவாசகத்துக்குப் பின் வைக்கப்பட்டதெனின், அத்திருமுறைகளை வகுக்கும் பேராற்றலும் சிவநெறிப் பண்பும் உடைய நம்பியார் பெருந்தகைமைக்கு ஏற்றதாகாது. எனவே, எட்டு முதலிய திருமுறைகள் நம்பியால் தொகுக்கப்பட்டனவா என்பது ஐயப்பட வேண்டும் செய்தியேயாகும்."[50]

இவ்வாறு கூறியவர் மா. இராசமாணிக்கனார். நம்பியாண்டார் நம்பி, முதல் ஏழு திருமுறைகளாகத் தேவாரப் பதிகங்களைத்தான் வகுத்திருக்க வேண்டும். மற்றைய திருமுறைகள் அவர்க்குப் பின்னோர் சேர்த்திருக்க வேண்டும் என்பது அவர் கருத்து. இதனையும் மனதிற் கொண்டால் மாணிக்கவாசகர் கி.பி. 9ஆம் நூற்றாண்டினரல்லர் என்பது புலப்படும்.

50. பெரியபுராண ஆராய்ச்சி, பக். 70.

# மாணிக்கவாசகர் சமயம்

மாணிக்கவாசகர் வீரசைவ சமயத்தவர் என்பது முன்னர்க் கூறப்பட்டது. மேலும் சில சான்றுகள் திருவாசகத்திலிருந்து தரப்படும்.

**1. வீரபத்திரர்**

> புண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
> எண்பட்ட தத்தன் அருக்கன் எச்சன் இந்துவனல்
> விண்பட்ட பூதப் படைவீர பத்திரரால்
> புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ[1]

இப்பாடலில் விரபத்திரர் தக்க யாகத்தை அழித்தது கூறப்பட்டது. அழித்தவர் வீரபத்திரர்; சிவபிரானின் அம்சம். வீரபத்திரரைப் போற்றி வழிபடுபவர் வீரசைவ சமயத்தவர்; தனி உருவமைத்து விழா எடுப்பவர். வீரபத்திரர் திருவுருவச் சிலையில் சிவலிங்கம் தலையிடத்தோ மார்பிடத்தோ அமைத்திருப்பர். கும்பகோணம் சாரங்கதேவர் திருமடத்தில் வீரபத்திரர் வழிபாடு செய்தலை இன்றும் காணலாம்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் புலவர் பால சுந்தரம் வீட்டிலும் துரவி என்னும் ஊரில் பாலசுப்பிரமணியம் என்பவர் வீட்டிலும் பண்டரக்கோட்டைக் குருசாந்தய்யர் வீட்டிலும் மாளிகைமேடு மடத்திலும் வீரபத்திரர் கோயில் அமைத்து வழிபாடு செய்து வருதலை மேற்கொண்டுள்ளனர்.

திருவுந்தியார் என்னும் தலைப்புப் பாடல்கள் இருபதில் பன்னிரண்டு பாடல்கள் தக்கயாக அழிவு பற்றியே பேசுகின்றன.

**2. உடலிடம்**

சிவபிரான் என் உள்ளத்தில் இரண்டு திருவடித் தாமரைகளையும் படம்போலப் பதியுமாறு செய்தருளி, என் உடம்பையும் தான்

---

1. திருப்பூ. 4

எழுந்தருளும் கோயிலிடமாகக் கொண்டிருந்து, காஞ்சியேகம் பத்தும் தங்கியிருந்த பெருமானாவான் என்று ஓரிடத்துக் கூறியுள் ளார் மாணிக்கவாசகர்.

"படமாக என்னுள்ளே தன்னிணைப்போ தவையளித்திங்கு
இடமாகக் கொண்டிருந்து ஏகம்பம் மேயபிரான்"[2]

என்பது அவர் வாக்கு, "சிவபிரான் தன்னை உள்ளத்தில் நினைப் பிக்கச் செய்ததோடு என் உடலையும் இடமாக (கோயிலாக)க் கொண்டிருந்தான்" என்பது கருத்து.

**3. உடல்புகுந்தான்**

உடலிலும் உயிரிலும் உள்ளத்திலும் இறைவன் கலந்துள்ளான் என்பாராய்,

"ஊனார் உடல்புகுந்தான் உயிர்கலந்தான் உளம்பிரியான்"[3]

என்று கூறியுள்ளார். ஊன் (தசை) ஆர் உடல் என்றது உடம்பை மட்டும் குறித்தது. உயிரிற் கலந்ததும் உளம் பிரியாததும் வெளிப் படையிற் காண இயலா. வெளிப்படையாகக் காண இயல்வது உடல் புகுந்ததாம். உயிர் கலந்தான் உளம் பிரியான் என்றவர்' உடம்பில் தெரியும்படியாக அணியப்பட்டான் என்பதை உணர்த்தவே உடல்கலந்தான் என்னாமல் புகுந்தான் என்றார். கலந்து தங்குதல் வெளிப்படையாகத் தெரியாது. புகுந்து தங்குதல் தெரியும்.

உயிர் கலந்தான் உளம் பிரியான் என்றாலே உடம்பிலும் கலந் தான் என்பது புலப்படும். தனியாக உடல் புகுந்தான் என்ன வேண்டுவதில்லை. அதனால் உடல் புகுந்தான் என்பது இட்டலிங்கம் அணிந்ததையே குறிக்கும்.

ஊனே புகுந்த உனையுணர்ந்தே
உருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே அருளும் காலந்தான்
கொடியேற் கென்றோ கூடுவதே[4]

இங்கும் ஊன் என்றது தனி உடம்பையே குறிக்கும்.

மாணிக்கவாசகர் தம் செயலால் இன்றிச் சிவபிரான் தானே வலிய வந்து தம் உடலில் தங்கினான் என மேலே கூறியதை நன்கு உணர்ந்த சிவப்பிரகாச சுவாமிகள்,

---

2. திருப்பூ 14
3. உயிருண்-2
4. பிரார்த்-10.

பூவாய் நெடுங்கோட் டுறுபசுந்தேன்
கைகால் முடங்கு பொறியிலிதன்
நாவாய் ஒழுகிற் றெனவுலகம்
அளந்த மாலும் நான்முகனும்
காவாய் எனநின் றேத்தெடுப்பத்
தானே வந்தெங் கரதலத்தில்
மேவா வமர்ந்த மாமணியைத்
தொழுது வினைக்கு விடைகொடுப்பாம்[5]

என்று பாடுவாரானார்.

**4. சச்சையன்**

சச்சைய னேமிக்க தண்புனல் விண்கால் நிலநெருப்பாம்
விச்சைய னேவிட் டிடுதிகண் டாய்வெளி யாய்கரியாய்
பச்சைய னேசெய்ய மேனிய னேயொண் படவரவக்
கச்சைய னேகடந் தாய் தடந் தாளடற் கரியே[6]

இப்பாடலில் சச்சை என்பது வீரசைவர் உடம்பில் (மார்பில்) அணியும் சிவலிங்கம் உள்ளிருக்கும் பெட்டியைக் குறிக்கும். அச்சச்சையில் உள்ள இறைவனைச் 'சச்சையன்' என்றார் மாணிக்க வாசகர். சச்சை என்பது செச்சை எனவும் வழங்கப்படும். இப்பாடலுக்கு முன் உள்ள பாடலின் இறுதி வரி,

"தத்துறு நீறுடன் ஆரச் செஞ்சாந்தணி சச்சையனே"

என்பது. அதில் உள்ள 'சச்சையன்' என்பது பற்றி அருணை வடிவேலர்,

"செச்சை என்பது மோனை நயம் நோக்கிச் சச்சை எனத் திரிக்கப்பட்டது. செச்சை—வெட்சி. வெட்சிப் பூப்போலும் திருமேனியை உடையவனே என்க"[7]

என்றெழுதினார். தத்துறு என்பதில் முதலில் உள்ள தகரத்துக்கு மோனை வேண்டி 'செ' என்னும் எழுத்தைச் 'ச' எனும் எழுத்தாகத் திரித்தார் எனின், 'சச்சையனே' எனத் தொடங்கும் மேற்பாடலில் உள்ள சச்சையன் என்பதின் முதல் எழுத்தாகிய 'ச' எனும் எழுத்துக்கேற்ப ஐந்தாம் சீராகிய நிலநெருப்பாம் என்னும் சீரில் முதல் எழுத்தைத் திருத்தியிருத்தல் வேண்டும். மோனை வேண்டாமல் பாடியுள்ளார் மாணிக்கவாசகர். அதனால் மோனை நயம்

5. பிரபுலிங்கலீலை-1
6. நீத். 31.
7. நீத். 30 குறிப்புரை.

வேண்டிச் செச்சையன் என்பதைச் சச்சையன் எனத் திருத்தினார் என்பது பொருந்தாது.

மேற்பாடலில், 'வெட்சிப்பூப் போலும் சிவந்த மேனியையுடையவனே' என்று விளித்தாராயின் மீண்டும் செய்ய மேனியனே என்று கூறியது குற்றமாகும்.

எனவே, சச்சையன் என்பதற்கு, 'உடம்பில் அணிந்திருக்கும் 'சச்சை' எனப்படும் பெட்டியில் எழுந்தருளியிருப்பவனே' என்பதே பொருளாகும்.

## 5. இட்டலிங்க பூசை

"பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை யுகந்து என சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே"[8]

இப்பாடலில் பூசனையுகந்து எனக் குறிப்பிடப்பட்டிருப்பது மாணிக்கவாசகர் இட்டலிங்க பூசை புரிந்ததைக் குறிக்கும்.

சிவபூசை செய்வாரிடத்து மாணிக்கவாசகருக்கு மிக்க அன்புண்டு. கண்ணப்பன் அன்பு போல்வதோர் அன்பு இல்லை என்று வியந்து,

பொருட் பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்கு
அருட்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ[9]

என்று பாடினார். சண்டேசுர நாயனாரின் சிவபூசையை வியந்து,

தீதில்லை மாணி சிவகருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப வீசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவர் தோணோக்கம்[10]

என்று பாடினார். திருமாலைச் சாதாரண தேவர் வரிசையில் வைத்து எண்ணினாரே தவிரத் தனியொரு தெய்வமாக எண்ணவில்லை மாணிக்கவாசகர். என்றாலும் திருமால் சிவபிரானைப் பூசனை பண்ணியதை வியந்து,

---

8. பிடித்த.1. 10. " 10
9. திருத்தோ. 3.

பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரமாற் கன்றருளியவாறு
எங்கும் பரவி நாம் தோணோக்கம் ஆடாமோ[11]

என்று பாடினார். எனவே சிவபூசையிற் பற்று வைத்தவர் மாணிக்க வாசகர் என நாம் அறியலாம். அதனால் 'பூசனை உகந்து' என்றது தாம் செய்யும் இட்டலிங்க பூசையை விரும்பி என்ற பொருளையே குறிக்கும்.

**6. பழஞ்சொல்**

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்குஅப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழில் என் ஞாயிறு எமக்கேல் ஓர் எம்பாவாய்'[12]

இப்பாடலில் ஒரு பழமொழிப் புரட்சி செய்துள்ளார் மாணிக்க வாசகர். மகளை மணந்து கொடுக்கும் பெற்றோர் மணமகனிடம், "உன் கையில் ஒப்படைக்கப்பட்ட இப்பிள்ளை (மணமகள்) நினக்கு அடைக்கலப் பொருளாவாள் நன்கு போற்றிக் காக்க" என்று கூறுவர். இது வழி வழி வழங்கி வரும் ஒரு பழமொழி. அந்தப் பழமொழியை வைத்துத் தம் வீரசைவ சமயத்துக்கேற்பப் புரட்சி செய்துள்ளார் மாணிக்கவாசகர்.

திருவண்ணாமலையிலிருந்து பாடிய திருவெம்பாவைப் பாடல் களுள் மேற்பாடலில் அப்புரட்சியைக் கையாண்டுள்ளார். தாம் ஒரு பெண்ணாகவும் தம்முடன் பல பெண்களும் இருக்க இறைவனிடம் வரம் வேண்டுவதாகவும் அப்பாடலில் அமைத்தார்.

'மாணிக்கவாசகர்க்குக் கோகழிக் குருமணியானவர் அவர் கையில் இட்டலிங்கப் பெருமானை எழுந்தருளச் செய்தார்' என முன்னர்க் கூறப்பட்டது. அப்படி எழுந்தருளச் செய்தபோது, "நின் கையில் உள்ள இவ்விட்டலிங்கப் பெருமான் உன் அடைக்கலப் பொருள்போல் ஆவர். போற்றிப் பூசனை புரிந்து காக்க" என்றார். அதனால் மாணிக்கவாசகர் இட்டலிங்கப் பெருமானைத் தம்

11. திருத்தோ 7

12. திருவெம். 19.

அடைக்கலப் பொருளாகக் கருதினார். அடைக்கலப் பொருளை அடைக்கலம் பெற்றவர் காப்பது கடன். இப்போது மாணிக்க வாசகர் இறைவனிடம் தம்மைப் பெண்ணாகக் கருதிக் கொண்டமையால்,

"எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எம்கை யுனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கு இப்பரிசே எமக்கு எங்கோன் நல்குதி"

என வேண்டினார். கொங்கை, கை, கண் ஆகியவை இறைவனடி யார்க்கும் உனக்குமே யுரியனவாகச் செய்து எம்மைக் காக்க என வேண்டியதில், ஒரு மாற்றம் காணப்படுகிறது. அடைக்கலப் பொருள் இட்டலிங்கப் பெருமான். அடைக்கலம் பெற்றவர் மாணிக்கவாசகர். அடைக்கலப் பொருளைக் காக்க வேண்டுவது மாணிக்கவாசகர் கடமை. அப்படியிருக்க அடைக்கலப்பொருளாகிய இறைவனிடமே மேற்கூறியவாறு காக்க வேண்டியது பழமொழிக்கு மாறுபட்டதாகும். அதனால் பழமொழியைத் தாம் புதுக்கிய தாகவும் அதற்கு அஞ்சுவதாகவும் கூறித் தம்மைக் காக்க வேண்டினார்.

உன் கையிற் பிள்ளை உனக்கு அடைக்கலம் என்பது பழமொழி; அதைப் புதுக்கியதாவது, "என் கையிற் பிள்ளை யாகிய உனக்கு யான் அடைக்கலம்; இன்னவாறு காக்க" என்பதாகும்.

பழமொழியின் பொருளைப் பிறர் யாவரும் பொருத்தமின்றிக் கூறுவர். பழமொழியைப் புதுக்குவது என்பதற்குப் பழங்காலப் பழமொழியை இன்று புதியதுபோல் ஆக்கிக் கூறுவது எனப் பொருள் கூறுவர். அவ்வாறு கூறின் பழமொழியைப் புதுக்குவ தாகாது. பழமொழியைப் பழமொழியாகவே கொண்டு கூறுவது தான்மரபு. அம்மரபுப்படிக் கூறுவதற்கு அஞ்ச வேண்டுவதில்லை. அதனால் மேலே கூறப்பட்டதே கருத்தாம்.

## 7. மூன்று இலிங்கம்

சிவபூசை நீராட்டுக்கு வேண்டிய சுண்ணம் இடிக்கும் போது இன்னின்னவையாடச் சுண்ணம் இடிப்போம் எனக் கூறிவரு மிடத்து,

முத்தணி கொங்கை முகங்கள் ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆட
சித்தம் சிவனொடும் ஆட ஆட
செங்கயற் கண்பனி ஆட ஆட
பித்துஎம் பிரானொடும் ஆட ஆட
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொடு ஆட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே[13]

என்றொரு பாடல் கூறினார். இப்பாடலில் சிவன், எம்பிரான், அத்தன் எனச் சிவபிரானையே மூன்று முறை கூறியுள்ளார். ஒரு முறை கூறினாலே போதும். மூன்று முறை கூறியது ஏன்? வீர சைவர் உடம்பில் அணியும் இறைவனை இட்டலிங்கம் என்பர். உயிரில் அணிவதைப் பிராணலிங்கம் என்பர். உயிர்க்கும் அப்பாற் பட்டுப் பாவிக்கும் இறைவனைப் பாவலிங்கம் என்பர். அம்முறை யில்தான் மும்முறை இறைவனைக் கூறினார்.

''சிவலிங்கத்தைச் சச்சையில் வைத்து மார்பில் அணிந்திருப்ப தால் பொற்சுண்ணம் இடிக்கும் போது அது ஆடுவது இயற்கை. அதனால் அச்சச்சை ஆடும் போது இட்டலிங்கப் பெருமான் நினைவு வரச் சித்தம் உடன் ஆடுவதாகும். அதனால் சித்தம் சிவனொடு ஆட என்றார். சிவன்—இட்டலிங்கம்.

''சித்தத்தின் நினைவு முதிர்வால் தோன்றுவது பித்தம். பித்தம் உயிரைப் பற்றியது. பித்தவுயிர் உயிரிலுள்ள பிராண லிங்கத்தை எண்ணிக் கொண்டிருக்கும். அதனால் பித்து எம்பிரானொடும் ஆட என்றார். எம்பிரான்—பிராணலிங்கம்.

''இவ்விரண்டுக்கும் மேற்பட்டது பாவனாலிங்கம். உயிரின் பித்த முதிர்வு கண்டு இறைவன் அருள் புரிய முற்படுவான். அதனால் அத்தன் கருணையொடு ஆட என்றார்.''[14] அத்தன்—பாவலிங்கம்.

## 8. பாதோதகம்

வீர சைவர் குருவின் திருவடி அபிடேக நீரைத்தூயதாகக் கொண்டு அதனைப் பருகுவர். இன்றும் கன்னட நாட்டில் வீர சைவர்கள் குருவுக்கு அடியவர்க்கு (அவர்தம் பாதங்களை)

13. திருப்பொற் 10
14. மா.கா.ச, பக். 102, 103

நீராட்டி அந்நீரைக் காத்து வைத்துப் பொருள்களில் தெளித்தும் பருகியும் வருதலைக் காணலாம். அந்நீரைப் பாதோதகம் (திருவடிநீர்) என்பர். மாணிக்கவாசகர் இறைவனிடம், இறைவனின் அருளாகிய அமுதை வாரி விழுங்கியதாகவும்; அதனால் விக்கல் வந்ததாகவும் அவ்விக்கல் தீரத் தண்ணீர் தந்து உய்யக் கொள்ள வேண்டும் என வேண்டுவதாகவும் ஒரு பாடலில் கூறியுள்ளார்.

வழங்குகின் றாய்க்குன் அருளார்
  அமுதத்தை வாரிக் கொண்டு
விழுங்கு கின்றேன்; விக்கினேன்;
  வினையேன் என்விதி யின்மையால்;
தழங்கருந் தேனன்ன தண்ணீர்
  பருகத்தந் துய்யக் கொள்ளாய்;
அழுங்கு கின்றேன்; உடையாய்!
  அடியேன் உன் அடைக்கலமே[15]

இப்பாடலில் 'தேனன்ன தண்ணீர்' என்றது பாதோதகத்தைக் குறிக்கும். இப்படித் தண்ணீர் கேட்டுப் பாடியவர் யாருமில்லை. வீர சைவர்களே திருவடிநீர் பற்றிக் கூறியுள்ளனர்.

மேலே கூறப்பட்டனவற்றால் மாணிக்கவாசகர் சமயம் வீர சைவ சமயம் என்பது விளங்கும்.

**ஐயம்**

இங்கோர் ஐயம் இயல்பாக எழ வேண்டுவதே. மாணிக்கவாசகர் இறைவனை ஐயாறதனிற் சைவனாகியும் என்றும் சைவாபோற்றி என்றும் கூறினாரேயன்றி 'வீர சைவனாகியும்' என்றோ 'வீர சைவா போற்றி' என்றோ கூறாதது ஏன்? என்பதே அவ்வையம்.

சைவம் என்பது சைவம், வீரசைவம் என இருவகையில் பாகுபாடுபடுத்தித் தத்துவ விளக்க நூல்கள் எழுவதற்கு முன்னர் விளங்கியது என்பதும் அக்காலத்தவர் மாணிக்கவாசகர் என்பதும் காலம் என்ற பிரிவில் கி. பி, 4ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளன.

பொதுவாகத் தமிழ்நாட்டில் சைவம், வீரசைவம் என்னும் இரண்டு பிரிவுகள் மொகஞ்சதரோ, அரப்பா காலத்துக்கு முன் தொடங்கி இன்றுவரையிருந்தாலும் வேற்றுமைகாட்டி ஒன்றை

15. அடைக். 10

யொன்று வெறுக்கும்படியாக இல்லை. அவ்விரு சமயத்தாரும் தம்மைச் சைவர் என்றே கூறிக் கொள்கின்றனர். சிறப்பாகச் சொல்லும்போதுதான் வீரசைவர் தம்மை அப்பெயரால் அழைத்துக் கொள்கின்றனர்.

கி. பி. 17ஆம் நூற்றாண்டினர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், அவர் தம் வீரசைவ குருவான மயிலம் பொம்மபுர ஆதீனம் சிவஞான பாலய சுவாமிகள் மீது பாடிய கலம்பகம் என்னும் நூலில் தம் குருவைப் பற்றி,

''சைவப் பயிர்க்குத் தண்முகி லானோன்
நாந்தொழ வருள்சிவ ஞான தேவன்''[16]

எனப் போற்றியுள்ளார். 'வீரசைவப் பயிர்' என்னாமல் சைவப் பயிர் என்றது கருதுதற்குரியதாம்.

இக் காலத்தும் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத்து ஐந்தாம் அடிகளாராக இருந்த சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் என்னும் ஞானியாரடிகள் தாம் வீர சைவராக இருந்தும், சைவம் ஓங்க வேண்டும் என்று சைவ சித்தாந்த மகா சமாசம் என்னும் அமைப்பினை ஏற்படுத்தியதும் மயிலம்—பொம்மபுர ஆதீனம் 18ஆம் பட்டத்துச் சிவஞான பாலய சுவாமிகள், தாம் நிறுவிய தமிழ்க் கல்லூரியின் குறிக்கோள் ''தமிழும் சைவமும் தழைத்தினிது ஓங்குக'' என்பதாகக் கொண்டு இலச்சினை அமைத்ததும் காணத்தக்கன.

சைவம் பல பிரிவுகளிற் பேசப்படுகின்றது. சுத்த சைவம் சிவாத்துவிச் சைவம் ஐக்கிய வாதக சைவம் எனப் பிற்காலத்திற் பிரிக்கப்பட்டது. காஷ்மீர சைவம் என்பதும் ஒன்றுண்டு. பூர்வ சைவம், சுத்தசைவம், மார்க்கசைவம், வீரசைவம் என்று கூறுவதும் உண்டு. கோட்பாடுகள் தனித்தனியுள்ளன. ஆனால் யாவற்றுக்கும் தலைவன் சிவனே—அதனால் வீரசைவத்துக்கும் தலைவன் சிவனே—அதனால் மாணிக்கவாசகர் சிவனைச் சைவன் என்றார், ஐயாறதனிற் சைவனாகியும் என்பதற்கு வீரசைவ சமயச் சார்பான கதை இருந்திருத்தல் வேண்டும். அது மறைந்தது போலும்.

## சமயக் கோட்பாடு

வீரசைவ சமயக் கோட்பாடுகள் வகுக்கப்படுதற்கு முன்னர் அல்லது அக்கோட்பாடுகள் தமிழகத்துப் பரவுவதற்கு முன்னர்,

16. சிவஞான பாலய சுவாமிகள் கலம்பகம். 67 : 23, 24

வாழ்ந்தவர் மாணிக்கவாசகர் என்பது முன்னர்க் கூறப்பட்டது. சைவ சமயக் கோட்பாடுகளும் மிகப் பிற்காலத்தில் அதாவது மெய்கண்டார் காலத்தில் (கி. பி. 13ஆம் நூற்றாண்டில்) தான் வகுக்கப்பட்டன என்றாலும் கோட்பாடுகள் உருப்பெறுதற்குரிய கருத்துகள் முன்னரே சமய இலக்கியங்களில் புதைந்து கிடப்பன வாயின. திருமந்திரம் வீரசைவ சமயத்துக்கும் சைவ சமயத்துக்கும் பொதுவான கோட்பாடுகளையே கூறுகின்றது. சிறப்பாக வீரசைவ சமயக் கோட்பாடுகளும் உண்டு. திருமூலர்க்கு முன்னர் இருந்த சமய இலக்கியங்கள் / தோத்திர நூல்களைக் கொண்டும் இறையருள் துணைக்கொண்டும் அவர் திருமந்திரம் படைத்தார் என்னலாம். அதனால் திருமூலர்க்கு முற்பட்டவராகிய மாணிக்க வாசகர் பொதுவாகத் தம் அநுபவங்களைக் கொண்டே பாடல் களை இயற்றினார். அதனால் அவர் திருவாசகத்தில் சைவ, வீரசைவ சமயங்களுக்குரிய பொதுவான கோட்பாடுகளே காணப் படுகின்றன.

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மைக் கோட் பாடும் பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் முப்பிரிவினையுடையது என்பதும், அது மும்மலம் எனப்படும் என்பதும் ஆணவம், கன்மம், மாயை என்பவற்றோடு மாயேயம், திரோதம் என்னும் இரண்டும் சேர மலம் ஐந்து வகைப்படும் என்பதும் இருசமயங்களுக்கும் உள்ள பொதுவான கோட் பாடுகளாம்.

> "மூலமாகிய மும்மலம்"[17]

என்றும்,

> "மலங்கள் ஐந்தாற் சுழல்வன்"[18]

என்றும் மாணிக்கவாசகர் கூறியதும் காணலாம்.

உயிருடன் இருக்கும் சகசமலம் எனப்படும் ஆணவமலம், உயிரானது முத்தியடையின் அந்நிலையில் எவ்வாறாம் என்பதற்கு இருசமயங்களும் இருவேறு கருத்துடையனவாகவே உள்ளன. முத்திநிலையில் ஆணவமலம் தன் செயலற்றுக் கிடக்கும் என்றும், உயிர்க்கு இறையின்பத்தை மிகுவிக்கும் செயல் புரியும் என்றும் இருவகையாகக் கூறும் சைவ சாத்திரம்.

> "சைவ சித்தாந்தத்திற் கூறப்படும் ஆணவ மலத்தின் வாசனாமலம், அல்லது அதன் இருப்பு, முத்தியில் உண்டு

17. கீர்த்தி. 111    18. நீத். 29

என்றும் அவன் (இறைவன்) அளிக்க இன்பம் துய்த்தல் உண்டு என்றும் கொள்ளும் நிலையை வீரசைவம் கொள்ளவில்லை''[19]

இஃது ஒருசார் கருத்து. இதற்கு மாறாகச் சிவஞான தீபம் என்னும் வீரசைவ சித்தாந்த நூல்,

''முத்தி நிலையில் ஆணவமலம் எந்நிலைமை யடையும் எனின், அஃது ஒளி முன் இருள் உற்ற நிலையையடைந்து, சிவபோகத்தை நுகரும் உயிர்க்கு இன்பத்தை விளைவிக்கும்; பொன்னானது தன் தன்மை தோன்றப் பெறாமல் இரசகுளி கையில் அடங்கினாற்போல அவ்வாணவமும் இறைவன் திருவடியில் தன் தன்மை விளங்காமல் அடங்கி நிற்கும்''[20]

என்று கூறும்.

எனவே மாணிக்கவாசகருக்கெனத் தனிச் சமயக் கோட்பாடு கள் உண்டு எனத் திருவாசகத்தின் மூலம் அறிய இயலாது. மாணிக்கவாசகர் ஆணவம் என்னும் சொல்லை எங்கும் ஆள வில்லை. எனினும் மும்மலம் என்றலின் ஆணவமலம் உண்டு என்பது அவர் கோட்பாடு என்பது புலப்படும்.

இனி மாணிக்கவாசகரின் திருவாசகம் திருக்கோவையார்கள் பற்றிக் காண்போம்.

19. வீரசைவம், பக். 370 20. சிவஞானதீபம், பாடல். 30

# திருவாசகம்

## முன்னுரை

திருவாசகம் சிவபுராணம்முதல் அச்சோப்பதிகம் ஈறாக 51 தலைப்புகளில் அமைந்துள்ளது; 656 பாடல்களைக் கொண்டுள்ளது. சில பதிப்புகளில் பாடல் எண்ணிக்கை மிகுந்தும் காணப்படுகின்றது.

பாவகைகளில் கலிவெண்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை, கொச்சகக் கலிப்பா, ஆசிரியப்பா, கழிநெடிலடியாசிரிய விருத்தம், தாழிசை என்பன அமைந்துள்ளன; பின்னர் விவரிக்கப் படும்.

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னுந் தேன்

என்று சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்றும் உண்டு. இப்பாடலைப் பாடினார் யார் என்பது தெரியவில்லை.

பதிகம் என்பது பத்துபாக்களைக் கொண்டது. திருவாசகத்தில் பதிகம் என வருவன பத்துப் பத்துப் பாக்களைக் கொண்டனவாக வுள்ளன. ஆனால் பத்துப் பத்துப் பாக்களைக் கொண்ட சில தலைப்புகள் பதிகம் எனப்படாமல், அருட்பத்து, பிரார்த்தனைப் பத்து எனக் காணப்படுகின்றன. பத்துப்பாடல் உள்ள திருப்பள்ளி யெழுச்சி, 'திருப்பள்ளியெழுச்சிப் பத்து' என்றில்லை. அதனால் நாம் எளிதில் ஆளுதற் பொருட்டு எல்லாத் தலைப்புகளும் பதிகம் என்ற பெயரிலேயே ஆளப்படும்.

## எண்ணிக்கை

திருவாவடுதுறை யாதீனப் பதிப்பின்படி (1971)த் திருவாசகப் பாடல் எண்ணிக்கை 656 ஆகும். தருமபுர ஆதீன வெளியீடாகிய எட்டாந்திருமுறைக் குறிப்புரை (1966) நூலின்படி 658 ஆகும். பலபதிப்புகள் 658 பாடல்களைக் கொண்டனவே.

கீ.வை. சிவசுப்பிரமணியம் என்பார் திருவாசகம் 700 பாடல் களையுடையதாய் இருந்திருத்தல் வேண்டும் என்றும் அதற்கேற்ப ஒவ்வொரு தலைப்பிலும் குறைவு, மிகுதிப் பட்டியலிட்டுக் காட்டியும் கூறுவர். அவர்தரும் பட்டியல் இது.[1]

| எண் | பதிகம் | உள்ள பாடல் | குறைவு | மிகுதி | கூடுதல் |
|---|---|---|---|---|---|
| 1 | அச்சோப்பதிகம் | 9 | 1 | — | 10 |
| 2 | ஆனந்தமாலை | 7 | 3 | — | 10 |
| 3 | எண்ணப்பதிகம் | 6 | 4 | — | 10 |
| 4 | கழுக்குன்றப்பதிகம் | 7 | 3 | — | 10 |
| 5 | தோணோக்கம் | 14 | 6 | — | 20 |
| 6 | திருப்படையாட்சி | 8 | 2 | — | 10 |
| 7 | திருப்படையெழுச்சி | 2 | 8 | — | 10 |
| 8 | திருப்புலம்பல் | 3 | 7 | — | 10 |
| 9 | திரும்பூவல்லி | 19 | 1 | — | 20 |
| 10 | திருவுந்தியார் | 19 | 1 | — | 20 |
| 11 | திருவெண்பா | 11 | 9 | — | 20 |
| 12 | பண்டாய நான்மறை | 7 | 3 | — | 10 |
| 13 | பிரார்த்தனைப்பத்து | 11 | — | 1 | 10 |
| 14 | திருப்பொன்னூசல் | 9 | 1 | — | 10 |
| | | 132 | +49 | —1 | =180 |

| | |
|---|---|
| 10 பாடல்கள் வீதம் 25 பதிகங்களில் | 250 |
| 20 பாடல்கள் வீதம் 6 பதிகங்களில் | 120 |
| நீத்தல் விண்ணப்பம் | 50 |
| திருச்சதகம் | 100 |
| ஆக மொத்தம் | 700 |

இவற்றுடன் முதல் நான்கு பாடல்கள் சேர்க்கப்படவில்லை.

திருவாதவூரர் புராணம்,

திருச்சதகம் முதலாகச் சிறந்ததமிழ் அறுநூறும்
விரித்தவகப் பொருட்கோவை விளங்கவொரு நானூறும்
உரைத்தனர்பின் முடிந்தவிடத் துயர்வாத வூரன்மொழி
தரித்தெழுதும் அம்பலவன் எழுத்தென்று சாற்றினார்[2]

1. மாணிக்கவாசகர் யார்? பக். 54
2. திருவாத. புரா. திருவடி பெற்ற சருக்கம், 21

என்னும் பாடலில் திருவாசகப் பாடல்கள் 600 (அறுநூறு) என்பது கூறப்பட்டது. திருவாதவூரர் புராண ஆசிரியர் கடவுள் மாமுனிவர் காலத்தில் 100 பாடல்கள் குறைந்து 600 பாடல்களே இருந்திருத்தல் வேண்டும் என்றும் குறைந்த பாடல்கள்யாவும் வீரசைவக் கருத்துள்ள மரபுச் சொற்களைக் கொண்டனவாதல் வேண்டும்; சமயக்காழ்ப்புக் காரணமாகவே குறைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்றும் கீ.வை. சுப்பிரமணியம் கூறுவர். நம்பியாண்டார் நம்பி தேவாரங்களைத் திருமுறைகளாகத் தொகுக்கும்போது 'சப்த கோடி மகாமந்திரம்' என்பதற்கேற்ப ஏழு எனும் எண்ணிக்கையை மனதில் வைத்தே தேவாரங்களை ஏழுதிருமுறைகளாகத் தொகுத்தார் என உமாபதிசிவம்,

> "தூயமனு எழுகோடி என்ப துன்னி
> துன்ன வகை ஏழாகத் தொகுத்தான்"

என்று கூறியதை மேற்கொண்டு, மாணிக்க வாசகரும் 'சப்த கோடி மகாமந்திரத்'துக் கேற்ப 700 பாடல்கள் பாடியிருக்கவேண்டும் என்றும் அவர் கூறுவர்.[3]

சப்தகோடி மகாமந்திரத்தை மனதில் வைத்துப் பாடியவரல்லர் மாணிக்கவாசகர். திருவருளால் அவ்வப்போது தமக்குத் தோன்றியவாறு பாடினாரேயன்றி வேறில்லை. புத்தரொடு வாதில் வெல்லப் பாடும்போது மகாமந்திரத்தை நினைத்து அளவு கொண்டு பாடினார் என்பது பொருந்துமோ? திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம். திருப்பூவல்லி முதலியவற்றை அவ்வக்காலத்தில் தாம் கண்டவற்றை வைத்துப் பாடினார் என்றே கொள்ள வேண்டும்.

திருவுந்தியார் என்பதில் 19 பாடல்கள் காணப்படுகின்றன. பின்வரும் பாடல், சில பிரதிகளில் இல்லை என்பது திருவாவடுதுறைப் பதிப்பில் காணப்படுகிறது. அப்பாடல்,

> ஏகாச மிட்ட இருடிகள் போகாமல்
> ஆகாசம் காவலென் றுந்தீபற
> அதற்கப்பாலும் காவலென் றுந்தீபற

என்பது மறைக்கப்பட்ட பாடல்களுள் ஒன்றாக,

> புரங்களோர் மூன்றும் பொடிபட மூவர்
> அரந்தை யடைந்திலர் உந்தீபற
> அவர்கள் சிவாத்துவிதரென் றுந்தீபற

---

3. மாணிக்கவாசகர் யார்? பக். 53

என்னும் பாடலைக் காட்டுவர்.[4] அப்படியாயின் திருவுந்தியார்ப் பாடல்கள் 21 ஆகும். அப்படியாயின் 700 எனும் எண்ணிக்கை மிகுதிப்படும்.

இனித் திருச்சதகம் முதலாகப் பாடத் தொடங்கிய மாணிக்க வாசகர், சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல் எனும் நான்கு பாடல்களைச் சப்தகோடி மகா மந்திரத்தை நினைத்துப் பாடவில்லை போலும்;

திருவாவடுதுறைப் பதிப்பில் "ஏகாசமிட்ட" எனும் பாடலைத் திருவுந்தியாரில் சேர்த்துப் பாடல் தொகை 20 என்று கூட்டியும், திருப்பூவல்லியில்,

மாவார வேறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ

எனும் பாடலைச் சேர்த்து 20 என்று கூட்டியும் எண்ணிக்கை யிட்டாலும் திருவாசகத்தின் மொத்தப்பாடல் எண்ணிக்கையில் அவ்விரண்டையும் விட்டே எண்ணிக்கை 656 எனத்தரப்பட்டுள்ளது. தருமையாதீன எட்டாந்திருமுறைக் குறிப்புரை நூலில் அவ்விரண் டையும் சேர்த்தே 658 என எண்ணிக்கை தரப்பட்டுள்ளது.

சைவசித்தாந்தப் பெருமன்ற உரிமைப்பதிப்பில் (1992) காணப் படும் பாடல்கள் வருமாறு :

1. பிணக்கற்ற அவாமற்றுப் பேதைமையும் பிணியுமற்று
உணக்கிப் பசையறுத் தானுயிர் ஒன்றிநின்ற
குணக்குன்று வந்தென்னை ஆண்டலுமே என்னுடைய
கணக்கற்ற வாபாடித் தோணோக்கம் ஆடாமோ.

2. விடையவனே விடமுண்டு வேதம் விளைந்த
விண்ணவர் வேந்தனே
இடையிலே உனக்கன்பு செய்து பெருந்துறைக்
கன்றி ருந்திலேன்
சடையனே சைவநாதனே உனைச் சாரும்
தொண்டரைச் சார்கிலாக்
கடைய னேனையும் ஆட்கொள்வான் வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே.

4. ஷெ பக். 57

3. நரியெலாம் தெரியா வணமிந்த நாடெலாம் அறியும்படிப்
பரிகளாகப் படைத்துநீ பரிவாக வந்துமெய்க் காட்டிடும்
புரிகொள் நூலணி மார்பனே புலியூர் இலங்கிய புண்ணியா
கரிய மாலயன் தேடநீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே

4. செத்திடமும் பிறந்திடமும் இனிச்சாவா திருந்திடமும்
அத்தனையும் அறியாதார் அறியுமறி வெவ்வறிவோ
ஒத்தநிலம் ஒத்தபொருள் ஒருபொருளாம் பெரும்பயனை
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

5. படியதனிற் கிடத்திந்தப் பசுபாசம் தவிர்ந்துவிடும்
குடிமையிலே திரிந்தடியேன் கும்பியிலே விழாவண்ணம்
நெடியவனும் நான்முகனும் நீர்கான்றும் காணவொண்ணா
அடிகளெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே

6. பாதியெனும் இரவுதங்கிப் பகலெமக்கே இரைதேட
வேதனையி லகப்பட்டு வெந்துவிழக் கடவேனைச்
சாதிகுலம் பிறப்பறுத்துச் சகமறிய ஏனையாண்ட
ஆதியெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

மேலேவுள்ளவற்றுள் பின்மூன்று பாடல்களும் அச்சோப் பதிகத்தில் சேருமானால் அச்சோப்பதிகப்பாடல் 12 ஆகும். இரண்டு பாடல்கள் அதிகம் ஆனது எப்படி? ஒருகால் 20 பாடல்களில் 8 பாடல்கள் காணவில்லை என்று கொள்ளலாமோ? சிவப்பிரகாசப் பெருந்திரட்டு என்னும் நூலில்,

1. அன்னையும் ஆயமும் கேண்மின்களோ என்று
ஆருயி ராய சிவபெருமான்
என்னது யான் என்னும் இவ்விரண்டும்
என்னுள னாயிருந் தேகவர்ந்தான்
முன்னை யுறவும் பிறவும் காணேன்
மூவுல கும்பறந் தெங்குந் தானாய்
இன்ன தெனவென் றியம்ப லொண்ணா
இன்ப வெள்ளத்தெனை யிட்டனனே

2. வானும் நிலனும் அடையக் கேண்மோ
வள்ளல் பெருந்துறை மேயபெம்மான்
தானுந்தன் தையலு மாகி யென்றன்
சதுரை யழித்துமால் தந்த போதே

ஊனும் உயிரும் உணர்வும் ஒன்றாய்
உரோமமெல் லாஞ்சிலிப்பித் தென்னே
யானும் என்னை யறியாத வண்ணம்
இன்ப வெள்ளத்தெனை யிட்டனனே

என்னும் இரண்டு பாடல்கள் காணப்படுகின்றன என்பர்.[5]

எனவே திருவாசகப் பாடல் எண்ணிக்கை இந்நாளில் வரையறுத்துக் கூறவியலாத நிலையிலேயே உள்ளது என்னலாம். எனவே எழுநூறு எனும் எண்ணிக்கையும் தவறேயாகும்.

**யாப்பு**

முதற்பாடலாகிய சிவபுராணப் பாடல் கலிவெண்பாவாலாயது. வெண்பாவுக்குரிய சீராலும் தளையாலும் ஆனது. ஆனால் நெடும்பாடலாக இருத்தலின் அதைப் பாடும் போது வெண்பாவுக்குரிய செப்பலோசை வெளிப்படாமல் கலிப்பாவுக்குரிய துள்ளலோசையே வெளிப்படும். அதனால் அப்பாடலைக் கலிவெண்பா என்பர்; வெண்கலிப்பா என்றும் வழங்குவர்; நெடு வெண்பாட்டு என்றும் சொல்வர். பாவகைகள் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்காகும். இந்நான்கும் இரண்டாகவும் அடங்கும். வெண்பாவில் கலிப்பாவும், ஆசிரியப் பாவில் வஞ்சிப்பாவும் அடங்கும்.[6]

ஆசிரிய நடைத்தே வஞ்சி: யேனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப[7]

என்பது தொல்காப்பியம். அதனால் சிவபுராணம் வெண்சீரும் தளையும் கொண்டு துள்ளல் ஓசை தழுவி வருதலின் கலிவெண்பா யாப்பாயிற்று. அடிகளாசிரியர் இது பற்றிக் கூறுவன வருமாறு :

"இப்பாட்டினைச் சிலர் கலிவெண்பா என்று கூறுகின்றனர். தொல்காப்பியர் கூறும் இலக்கணப்படி வண்ணக வொத்தாழிசையும் ஒருபோகும் அம்போதரங்கமும் அல்லாத கலிப்பாக்கள் எல்லாம் காமப் பொருள் பற்றியே வரல் வேண்டும்.

"தூய அகப்பொருள் மேலன்றி அருங்கலிகள் வாரா"

என்று வச்சனந்திமாலையும் கூறுகின்றது(44).

---

5. மாணிக்கவாசகர் யார்? பக். 60
6. தொல். செய். 103
7. ஷை 104

"இப்பாட்டு முற்றிலும் வெண்பா யாப்பாகவே வந்து இறுதியில் வெண்பா யாப்பால் முடிந்தாலும் அகப்பொருள் மேலதாய் வாராமல், புறப்பொருட்கண் தெய்வத்தை முன்னி லைக்கண் வைத்துப் பரவும் துறையில் வந்துள்ளதால் கலி வெண்பா அன்று; இஃது ஒருவகை வெண்பா யாப்பினை உடையதாகும்."

"தொல்காப்பியர் செய்யுளியலில் வெண்பா வகைகளை,

நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே
கைக்கிளை பரிபாட் டங்கதம் செய்யுளொடு
ஒத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின

என்ற நூற்பாவினால் அறுவகையாகக் கூறியுள்ளார். அவ்வறு வகையுள் ஒன்று செய்யுள் வெண்பாவாகும். அது செவியுறைச் செய்யுளாகவும் அங்கதச் செய்யுளாகவும் (124, 125) வரும் என்பர்.

அவ்விரண்டுள் செவியுறைப் பொருளாக வந்த செய்யுள் வெண்பாவே இச்சிவபுராணப் பாட்டென்க."[8]

இவர்தம் கருத்து ஏற்றுக் கோடற்குரியதாம்.

திருவாசக முதல் நான்கு பாடல்களையும் அகவல் என்றே கூறுவர், சிலர். கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல் ஆகிய மூன்றும் அகவல் பாவாக அமைந்திருத்தலின் சிவபுராணத்தையும் அடிமிகுதி கருதிய அளவில் அகவல் என்றனர் போலும். திருவாதவூரர் புராணமும் அகவல் என்றே கூறுகின்றது. இதற்கு அடிகளாசிரியர் கூறுவது,

"இப்பாட்டில் அடிகளார் இறைவனை உளங்கனிய அழைத்து அழைத்து ஓவென்று கூறிமுறையிடுவதால், 'அகவல் என்பது அழைத்தலும் ஆகும்', என்று பிங்கல நிகண்டு கூறுவதால், பொருளால் அகவல் ஆகும்; யாப்பால் அகவலன்று"[9].

என்பதாகும். அழைத்தற் பொருளில் வரும் அகவல் என்பதையும் செய்யுள் வகையில் வரும் அகவல் என்பதையும் சேர்த்துத் திருவாச கத்தில் உள்ள முதல் நான்கு பாக்களையும் அகவல் என்பரோ? என்பது சிந்தித்தற்குரியது.

கீர்த்தித் திருவகவலும் போற்றித் திருவகவலும் நிலைமண்டில ஆசிரியப்பா யாப்பிலும் திருவண்டப் பகுதி இணைகுறள் ஆசிரியப்பா யாப்பிலும் அமைந்தன.

---

8. சிவபுராணம்-சிற்றுரை, முன்னுரை, பக் XIII.
9. மேற்படி பக். XII.

சிவபுராணம் முதலிய இந்நான்கும் பரந்த மொழியால் அடி நிமிர்ந்து ஒழுகியவையாதலின் **தோல்** என்னும் வனப்புச் செய்யுள் களாம்.

இனிவரும் திருச்சதகம் முதலிய பதிகங்கள் யாவும் **விருந்து** என்னும் வனப்பில் சாரும். புகழ்தலும் பரவலும் கொண்டு, பல்வேறு யாப்புகளில், தங்கால நிகழ்ச்சிகளைக் கொண்டு, தமக்கு முன்னர் யாரும் கூறாத நிலையில், திருவெம்பாவை, பூவல்லி, உந்தியார், சாழல், தெள்ளேணம், கோத்தும்பி, படையாட்சி, படையெழுச்சி, தோணோக்கம் முதலிய புதிய அமைப்புகளில் உள்ளனவாதலின் விருந்து என்னும் வனப்பினில் அமையும்.

திருச்சதகம் என்பது நூறு பாடல்களுள்ளது (சதம் - நூறு) அந்தாதித் தொடையில் அமைந்தது. கட்டளைக் கலித்துறை தரவுக் கொச்சகக் கலிப்பா, எண்சீர் விருத்தம், அறுசீர் விருத்தம், கலிவிருத்தம், எழுசீர் விருத்தம், கலித்துறை, எண்சீர் விருத்தம் என்னும் யாப்புகளில் முறையே அமைந்த பத்துப்பத்துப் பாடல் களையுடையது.

நீத்தல் விண்ணப்பம் என்பது கட்டளைக் கலித்துறையா லானது. திருவெம்பாவை கொச்சகக் கலிப்பாவாலாகியது. மற்றைப் பதிகங்கள் நாற்பத்து நான்கில்,

| | |
|---|---|
| தரவுக் கொச்சகக் கலிப்பா | 11 |
| கலிவிருத்தம் | 4 |
| கட்டளைக் கலித்துறை | 1 |
| தாழிசை | 1 |
| அறுசீராசிரிய விருத்தம் | 14 |
| எழுசீராசிரிய விருத்தம் | 5 |
| எண்சீராசிரிய விருத்தம் | 3 |
| பன்னிருசீர் ஆசிரிய விருத்தம் | 1 |
| பல்வகைப் பாடல் தொகுதி | 1 |
| நேரிசை வெண்பா | 3 |

என்று அமைந்துள்ளன.

## முறைவைப்பு

சிவபுராணத்துள், 'சிவபெருமானது திருவருட் பெருமையைப் பண்பாக எடுத்துப் போற்றிய மாணிக்கவாசகர், கீர்த்தித் திருவக வலில் செயலாக எடுத்துப் போற்றுகின்றார்' என்னும் திருவண்டப்

பகுதியில் இறைவனதுபெருமைகள் பல்வற்றையும் விரித்துக் கூறி, அன்ன பெருமைகளையுடையவன் தமக்கு மிக எளிவந்து அருள்புரிந்தமையை வியந்து, வாழ்த்துதலும் போற்றுதலும் செய்கின்றார் என்றும் போற்றித் திருவகவலில், 'இறைவனை மாணிக்கவாசகர் பல்பெயர்க் கோவையாற் போற்றுகின்றார்' என்றும் அருணை வடிவேலர் கூறியது கொண்டு சிவபுராணம்' கீர்த்தித் திருவகவல். திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல் ஆகிய நான்கும் முறையே வைக்கப்பட்டமைக்கு அமைதி காணலாம்.

திருச்சதகம் நூறுபாடல் கொண்டது. நீத்தல் விண்ணப்பம் ஐம்பது பாடல் கொண்டது. இவற்றின்பின் இருபது பாடல்கள் கொண்டவற்றையும் பின்னர்ப் பத்துப் பாடல்கள் கொண்ட வற்றையும் முறையே வைத்தனர்.

குயிற்பத்து என்பதன் பின்னர்த் திருத்தசாங்கம் வைக்கப் பட்டுள்ளது. பத்துப்பாடல் எண்ணிக்கையால் மட்டுமன்றிக் குயிலை விளித்துப் பாடியதுபோல இதில் கிளியை விளித்துப் பாடியதாலும் ஆம்.

தாம்பெற்ற இறையருளை—இறைவன் தம்மையாட்கொண்ட வற்றைத் 'தாம் பெற்றமைபோலப் பிறர் யார் பெறுவார்?' எனப் பிறர்க்காக வருந்திய நிலையில் உயிர் இரக்கம் காட்டுதலின் அச்சோப்பதிகம் இறுதியில் வைக்கப்பட்டுள்ளது.

இவையெல்லாம் இன்றுள்ள திருவாசகப் பதிகங்களின் முறை வைப்புக்குக் கூறும் காரணங்களே யன்றி, மாணிக்கவாசகர் முறையே வைத்தார் என்பதற்குக் காரணங்களாகா. அவர் அவ்வப்போது முன்னும் பின்னுமாகப் பாடிய பதிகங்களே அவைகள். நம்பி திருவிளையாடற்புராணம் மாணிக்கவாசகர் முதலிற் பாடிய பாட்டு, சென்னிப்பத்து என்று கூறப், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணம் சிவபுராணம் என்று கூறும் முரண்பாடும் இங்கு நினைவு கூர்தற்குரியதாம்.

**பாடிய தலங்கள்**

திருவாசகம் முதல் நான்கு பாடல்களோடு பல பாடல் தொகைகளாகவுள்ள பதிகங்கள் 47 உள்ளன. அவையாவும் மாணிக்கவாசகர் தங்கிப்பாடிய தலங்கள் எனப் பின்வருமாறு திருவாசகப் பதிப்புகளில் குறிக்கப்பட்டுள்ளன. திருப்பெருந்துறை

யில் சிவபுராணப் பாடலும் திருச்சதகம் முதலிய பாடல் தொகைப் பதிகங்கள் 19உம் பாடப்பட்டன. தில்லையில் கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல் என்னும் மூன்று அகவல் பாடல்களும் திருப்பொற் சுண்ணம் முதலிய பாடல் தொகைப் பதிகங்கள் 22உம் பாடப்பட்டன.

திருவண்ணாமலையில் திருவெம்பாவை, திருவம்மானை என்னும் 2 பதிகங்கள் பாடப்பட்டன.

திருவுத்தரகோச மங்கையில் நீத்தல் விண்ணப்பம் எனும் பதிகம் 1 பாடப்பட்டது.

திருக்கழுக்குன்றத்தில் பாடப்பட்ட பதிகம் 1. திருவாரூரில் பாடப்பட்ட பதிகம் 1.

எந்தத் தலத்திலிருந்து பதிகம் பாடப்படுகிறதோ அந்தத் தலத்தின் பெயர் அப்பதிகத்தில் காணப்படும். அதில் பிறதலப் பெயர்களும் வரலாம். திருவண்ணாமலையிற் பாடப்பட்டதாகக் கூறப்படும் திருவம்மானைப் பதிகத்தில் ''அண்ணாமலை யானைப் பாடுதுங்காண் அம்மானாய்''[10] எனத் திருவண்ணாமலை கூறப் பட்டிருப்பினும்,

''தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்'' எனத் திருப்பெருந் துறையும்[11].

''ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய்''[12] எனத் திருவையாறும் கூறப்பட்டிருத்தலைக் காணலாம். திருப்பெருந் துறையில் அருளிச் செய்தனவாகக் கூறப்பட்ட பதிகங்களுள், அடைக்கலப் பத்து, அதிசயப் பத்து, பிரார்த்தனைப் பத்து, குழைத்த பத்து ஆகியவற்றில் திருப்பெருந்துறை கூறப்படவே யில்லை.

ஆசைப் பத்துப் பதிகத்தில் ''ஐயாற் றரசே ஆசைப்பட்டேன்'' எனத் திருவையாறு கூறப்பட்டதேயன்றித் திருப்பெருந்துறை கூறப்படவில்லை. திருவேசறவுப் பதிகத்தில் ''இடைமருதே யிடங் கொண்ட அம்மானே'' என்று திருவிடை மருதூர் கூறப்பட்டதே யன்றித் திருப்பெருந்துறை கூறப்படவில்லை.

தில்லையில் அருளிச் செய்யப்பட்டனவாகக் கூறப்படும் பதிகங் கள் பலவற்றுள் தில்லை கூறப்படாமலே பிறதலங்கள் மட்டும்

10. திருவம். 10.
11. மேற்படி. 1.
12. மேற்படி. 13.

கூறப்பட்டனவும் உண்டு. குயிற்பத்தில் தில்லை கூறப்படாமல் திருப்பெருந்துறை உத்தரகோச மங்கை, கோகழி என்னும் தலங்கள் கூறப்பட்டுள்ளன. இப்படிப் பல பதிகங்கள் உண்டு.

சீகாழியிற் பாடப்பட்டதாகக் கூறப்படும் பிடித்த பத்தில் சீகாழி கூறாப்படாமையோடு வேறெந்த தலமும் கூறப்படவில்லை.

மாணிக்கவாசகர் தாம் இயற்றிய பதிகங்களையெல்லாம் இன்ன இன்ன தலங்களிலிருந்து பாடப்பட்டன எனக் குறித்தார் என்று உறுதியாகக் கூற இயலாது. பிற்காலத்தார் யாரோ ஒருவர் தமக்குப் பட்டவாறு எழுதிவிட்டிருத்தல் வேண்டும். இதுபற்றி அருணை வடிவேலர் கூறுவது வருமாறு :

> "இது (சிவபுராணம்) திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப் பட்டது என்பது பதிப்புகளிற் காணப்படுவது. இது முதலாகத் திருவாசகப் பகுதிகள் அருளிச் செய்யப்பட்ட தலங்களைப் புராணங்கள் பல தலைப்படக் கூறுகின்றன. நீத்தல் விண்ணப்பம், திருக்கழுக்குன்றப் பதிகம் தவிர ஏனைய திருவாசகம் திருக்கோவையார் ஆகிய எல்லாவற்றையும் அடிகள் தில்லையை யடைந்து ஆங்கு எழுந்தருளியிருந்த நாட் களில் அருளினார் எனக் கொள்ளுதலே பொருந்தும் போலும்"[13].

அவர் கூறியதை ஒருவாறு ஏற்கலாமாயினும், குருமணி யானவர் தமக்குத் தில்லைக்கு வருக என அருளியபோது, 'பல தலங் களையும் கண்டு வணங்கி வருக' என்றார் என்பதாலும் மாணிக்க வாசகர் தாம் சென்று வணங்கிய தலங்களில் யாதோர் பதிகமும் பாடாமல் வாளாவணங்கி வந்தார் எனக் கொள்ளுதல் ஏற்புடைத் தாகாது என்பதாலும் முடிபாக ஏற்க இயலாது, 'கொள்ளுதலே பொருந்தும் என்று கூறாமல் கொள்ளுதலே பொருந்தும் போலும்'' என ஐய வாய்பாட்டிலேயே கூறியதால் அவர்க்கும் அதுவே முடிபு என்பதில் உறுதியில்லை என்பது புலப்படும்.

## பதிகத் தலைப்பு

ஒவ்வொரு பதிகத்துக்கும் தலைப்பு அமைந்தது பாவகையில் உள்ளது. முதலில் உள்ள கலிவெண்பாவானது சிவபுராணம் என்னும் தலைப்புடையது.

---

13. சிவபுராணம்குறிப்புரை.

சிவனவன்என் சிந்தையுள் நின்ற வதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பன்யான்"[14]

என மாணிக்கவாசகர், சிவபுராணம் உரைப்பேன் என்று பாடியமையால், 'நமச்சிவாய வாஅழ்க' எனத் தொடங்கும் பாட்டின் தலைப்பு சிவபுராணம் எனப்பட்டது, இத்தலைப்பு அவரே தந்ததாகலாம்.

கீர்த்தித் திருவகவலில் இறைவனின் கீர்த்திகள் வியந்து பேசப் படுதலின் கீர்த்தித் திருவகவல் என இரண்டாம் பாடல் பெயர் பெற்றது.

'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்' எனத் தொடங்கும் மூன்றாம் பாடல் கொன்றை வேந்தன், ஆத்திசூடி என்பனபோல முதல் தொடக்கச் சொற்றொடராலேயே திருவண்டப்பகுதி எனப்பட்டது.

போற்றி என்பது அருச்சனை வாய்ப்பாடாக அமைந்துள்ள நான்காம் பாடல். அதனாலேயே போற்றித் திருவகவல் எனப் பட்டது.

நூறு பாடல் கொண்ட பகுதி திருச்சதகம்.

ஐம்பது பாடல் கொண்ட நீத்தல் விண்ணப்பத்தில், இறைவனிடம் தம்மை நீத்து (விட்டு) விடாதிருக்க வேண்டி விண்ணப்பிப்பதாக அமைந்து, அதன் காரணமாக நீத்தல் விண்ணப்பம் அமைந்தது.

பாடல்களிற் பயிலும் சொல் அல்லது சொற்றொடர் காரணமாகப் பெயர்பெற்ற பதிகங்கள் இருப்பத்திரண்டு. அச்சம், அச்சோ, அடைக்கலம், அதிசயம், அருள், அற்புதம், அன்னை, ஆசை, கண்ட, குலா, குழைத்த, செத்திலா, சென்னி, சாழல், தெள்ளேணம், தோணோக்கம், அம்மானை, எம்பாவை, உந்தி, பிடித்தேன், புணர்ச்சி, வாழா என்பன அவை.

பத்துப்பாடல் தொகுதியைப் பதிகம் என்பர். பதிகம் என்ற பெயரால் அமைந்தன அச்சோப் பதிகம், எண்ணப்பதிகம், கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் திருப்பதிகம், திருக்கழுக் குன்றப்பதிகம், திருப்பாண்டிப்பதிகம் என்பனவாம்.

14. சிவ.—17-20

பத்துப்பாடல் கொண்ட தொகுதிகள் சில பதிகம் எனக் காணப்படாமல், 'பத்து' எனும் எண்கொண்டே முடிந்த பதிகங்களும் பல உண்டு. அச்சோப்பத்து, அடைக்கலப்பத்து, குலாப் பத்து, குயிற்பத்து முதலியன காண்க.

கோத்தும்பி, குயில் ஆகியவற்றை விளித்துப் பாடப்பட்டன திருக்கோத்தும்பி என்றும் குயிற்பத்து என்றும் பெயர் பெற்றன.

பண்டாய நான்மறை என்ற பதிகம், திருவண்டப் பகுதி போல முதற்பாடலின் முதல் தொடக்கத்தாலேயே பெயர் பெற்றது.

உயிருண்ணிப்பத்து, ஆனந்தமாலை போலச் சில பதிகங்கள் உட்கருத்து மூலம் காணப்பட்ட பொருள்களால் பெயர் பெற்றன.

பள்ளியெழுப்புதல், சுண்ணம் இடித்தல், ஊஞ்சலாடல் ஆகியவற்றால் திருப்பள்ளியெழுச்சி. திருப்பொற்சுண்ணம், திருப்பொன்னூசல் என்பன வந்தன. திருப்படையெழுச்சியும் அப்படியே வந்தது.

இப்படிப் பல வகையில் பாடல் தொகுதித் தலைப்புகள் அமைந்திருப்பதால் ஒரு வரையறையைக் கொண்டு மாணிக்கவாசகர் பாடினார் அல்லர் என்பதும் பலபதிகங்களுக்குப் பிற்காலத்தாரே தலைப்புகள் அமைத்தாராதல் வேண்டும் என்பதும் பெறப்படும்.

**பதிக உட்பொருள்**

ஒவ்வொரு பதிகங்களுக்கும் உள்ளீட்டுப் பொருள் இன்னது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

சிவபுராணத்தின் உள்ளீட்டுப் பொருள். "சிவனது அநாதி முறைமையான பழமை" என்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வுள்ளீட்டுப் பொருள் 'சிவபுராணம்' என்னும் தொடர்க்கு விளக்கமாக அமைந்துள்ளது.

> "பழமை என்பது இங்குக் காலம் பற்றிய தாகாது" காலத்திற்கு அப்பாற்பட்ட நிலையையே குறிப்பது; இந்நிலை அநாதி என்பராதலின், சிவபுராணம் என்றதற்கு, அநாதி முறைமையான பழமை எனக் கருத்துரைத்தனர் முன்னோர்.

என்பது, அருணை வடிவேலர் உரைத்ததாகும். "மெய்யா விமலா" எனத் தொடங்கி, 'அல்லற் பிறவி யறுப்பானே' என்பது வரையுள்ள விளித் தொடர்கள் யாவும் சிவனது அநாதியான பழமையே யுணர்த்தும்.

பதிக உள்ளீட்டுப் பொருட்கள் யாவும் பொருத்தமாகவே யுள்ளன எனக் கூற இயலாது. போற்றித் திருவகவலுக்குக் கொடுக்கப்பட்ட உள்ளீட்டுப் பொருள் 'சகத்தின் உற்பத்தி' என்பது; உலகத் தோற்றம் பற்றிக் கூறியது போற்றித் திருவகவல் என்பது கருத்தாம். உலகத் தோற்றம் பற்றிக் கூறாமல் மக்கள் தோற்றமும் மக்கள் பல்வகை இடர்களினின்று பிழைத்தலும் பற்றியே கூறப்பட்டுள்ளது.

"யானை முதலா எறும்பீ றாக
ஊனமில் யோனியின் உள்வினை பிழைத்தும்"

என உயிர் வகைப் பிறப்பில் பிழைத்து வந்தமை கூறி,

"மானுடப் பிறப்பினுள் மாதா வுதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்"

என்பது முதலாக,

"நல்குர வென்னும் தொல்விடம் பிழைத்தும்"

என்பது வரை பல வரம்பாய பல துறைகளிற் பிழைத்தலைக் கூறினார்[15] மாணிக்கவாசகர். பின்னர்த் தம்மைச் சார்ந்த சமய வாதிகள் உரைகள் முதலியவற்றினின்றும் இறைவன் காத்ததைக் கூறி, அதன் காரணமாக அவ்விறைவனை விளித்து அருச்சனை புரிந்தார். அருச்சனைப் பகுதியே அதிகம். பாடல் முழுதும் சகத்தின் உற்பத்தி மட்டுமே கூறினாரில்லை.

திருச்சதகம் என்னும் நூறுபாடலின் உள்ளீட்டுப் பொருள், 'பக்தி வைராக்கிய விசித்திரம்' என்றனர் முன்னோர்.

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாயென்னைக் கண்டுகொள்ளே

என்னும் முதற்பாடல் பக்தியையும்

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாதெங்கள் உத்தமனே

15. போற்றித் 11-40

என்னும் இரண்டாம் பாடல் பிற தெய்வ வழிபாட்டு வைராக் கியத்தை (வெறுப்பை)யும் உணர்த்துகின்றன.

திருச்சதகம் பத்து பிரிவுகளைக் கொண்ட நூறு பாடல்களை யுடையது. அப்பத்துப் பிரிவுகளும் தனித் தனியான மெய்யுணர்தல் முதல் ஆனந்தாதீதம் வரையுள்ள பத்து உள்ளீட்டுப் பொருள் களையுடையன. அப்பத்து உள்ளீட்டுப் பொருள்களின் முடிந்த உள்ளீட்டுப் பொருளே 'பக்தி வைராக்கிய விசித்திரம்' என்பது ஆகும்.

நீத்தல் விண்ணப்பம் என்பது பிரபஞ்சவைராக்கியம் என்னும் உள்ளீட்டுப் பொருளுடையது என்றனர். உலக வெறுப்பை யுள்ளீ டாகவே கொண்டு பாடப்பட்டது அது.

திருவெம்பாவை என்பதற்குச் 'சத்தியை வியந்தது' என உள் ளீட்டுப் பொருள் கூறினர் முன்னோர். திருவாசகத்தில் தனித்துச் சக்தியை மட்டும் பாடிய பாடல்,

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கும்
முன்னி யவள் நமக்கும் முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை ஏலோர் எம்பாவாய்[16]

என்பதாகும். இச்சிறப்பு ஒன்றையே கருதி சக்தியை வியந்தது என உள்ளீட்டுப் பொருள் உரைக்கப்பட்டது.

மனோன் மணி, சருவபூத தமனி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, இரௌத்திரி, சேட்டை, வாமை என்னும் ஒன்பது சக்திகளும் முறையே ஒவ்வொருவராகக் கூடி வியந்து எழுப்பியதைக் கூறுதலின், திருவெம்பாவை, சக்தியை வியந்தது என்ற உள்ளீட்டுப் பொருளுடையதாகவும் கூறினர். இது பொருந் தாது. ஏன் எனில், முதல் எட்டுப் பாடல்களுக்கு மட்டுமே பொருந்தும். மற்றைப் பன்னிரண்டு பாடல்களுக்குப் பொருந்தாது.

அம்மானை, தெள்ளேணம், தோணோக்கம் முதலிய மகளிர் விளையாட்டை யடிப்படையாகக் கொண்டு பாடப்பட்ட

16. திருவெம் 16.

பதிகங்கள் போலவே எம்பாவாய் எனக் கூறியாடும் விளையாட்டுப் பாடலாய் அமைந்ததே திருவெம்பாவைப் பதிகம் என்னலாம்.

திருவம்மானைப் பகுதி 'ஆனந்தக் களிப்பு' என்னும் உள்ளீட்டுப் பொருளுடையதாம். இறைவன் தம்மையாட் கொண்டதால் எழுந்த மகிழ்ச்சியைப் புலப்படுத்திப் பாடப்பட்டிருத்தலின் அப்பொருள் அதற்குப் பொருந்தும்.

பதிகங்களுக்கு உள்ளீட்டுப் பொருளுரைத்தவர், பதிகத்தில் உள்ள ஒரு சிறப்புப் பாடல் கருதியும் பதிக முழுதும் உள்ள கருத்தினை வைத்தும் பதிகத்தின் சில பாடல்களைக் கொண்டும் உரைத்துள்ளார் என்று கொள்ளலாம். படிப்போரின் உள்ளுணர்வுக்கும் கொள்ளும் உரைகளுக்கும் ஏற்ப உள்ளீட்டுப் பொருள்கள் மாறவும் கூடும்.

அதிசயப்பத்து என்னும் பதிகத்தின் உள்ளீட்டுப் பொருள் 'முத்தியிலக்கணம்' என்பதாம். இப்பதிகத்தில் உள்ள பாடல் எதிலும் முத்தியிலக்கணக் குறிப்பு இல்லை. இறைவன் மாணிக்க வாசகரையாண்ட கருணைத் திறத்தை வியந்து பாடிய பாடல்களேயுள்ளன. கருணை வியப்பு என்று உள்ளீட்டுப் பொருள் கூறலாம். பதிக உட்பொருளுக்கு உரை விளக்கம் முதல் முதலில் எழுதியவர், மா. வே. நெல்லையப்பர்.

> "நான்கு அகவல்களின் தலைப்புகளுக்கும் அவற்றின் கீழே குறிக்கப்பட்டிருக்கின்ற ஞானப் பொருள்களுக்கும் விளக்கவுரைகள் எழுதப்பட்டுள்ளன. அவ்வாறே நான்கு அகவல்களுக்குப் பின் வருகிற தலைப்புகளுக்கும் ஞானப் பொருள்களுக்கும் விளக்கவுரைகள் எழுதப்பட்டுள்ளன. இவ்வகை உரைகள் முன்னுள்ளவுரையாசிரியர்கள் எவராலும் எழுதப்படவில்லை"[17]

என்று அவர் கூறினார். பின்னர் அருணை வடிவேலர் தமது திருவாசகக் குறிப்புரையில் விளக்கியுள்ளார்.

### இறை அநுபவ நூல்

திருவாசகம், தெய்வத்தை—தெய்வத்திருவருளை அநுபவித்ததைத் தெளிவாகப் பலவகையில் வெளிப்படுத்திய நூலாகும். தொல்காப்பியர்,

---

17. திருவாசக அருள் முறைத்திரட்டு, பதவுரை, விளக்கவுரைகளுடன் (1943)

"தெய்வம் (1) ஒரு பொருளாக இருந்து (2) பலவடிவு கொண்டு (3) வழிபடுவோரைக் காத்தும் (4) தீங்கு செய்வோரை அச்சுறுத்தியும் (5) வேண்டுவோர்க்குத் துணை நின்றும் (6) நோய் தீர்த்தும் (7) உயிர்கட்கு விதிகளை வகுத்தும் (8) மக்களுள் கலந்திருந்தும் (9) மக்களுக்கு உவமப் பொருளாகச் சிறந்திருந்தும் (10) விருப்பத்தை நிறைவேற்றியும் அருள் புரியும் இயல்புடையது"[18]

எனத் தெய்வம் பற்றி—தெய்வத்தின் இலக்கணமாக அறிவித்துள்ளார். தெய்வம் பற்றி மேற்கூறப்பட்டன யாவும் அநுபவக் கருத்துகளேயன்றிக் கற்பனையல்ல. திருவாசகத்தில் அவையனைத்தும் காணலாம்.

"ஏகன் அநேகன் இறைவன்"[19]

என்றதால் முதல் இரண்டு இயல்புகளைக் கூறினார் மாணிக்க வாசகர்.

"பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி"[20]

நின்றான் எனப் பலவடிவு கொள்ளல் கூறினார். வழிபடுவோரைக் காக்கும் செய்திக்குத் திருமால், கண்ணப்ப நாயனார், கண்டேசுர நாயனார் ஆகியோர் சிவபூசை செய்து அருள் பெற்ற செய்திகளைக் கூறினார்.[21] தீங்கு செய்வோரை அச்சுறுத்தியமைக்குத் தக்கயாக அழிவு கூறியது சான்றாம்.[22] வேண்டுவார்க்குத் துணை நின்றதற்குச் சான்று வந்தியென்னும் பிட்டு வாணிச்சிக்கு இறைவன் கூலியாளாய் வந்து "மண் சுமந்து கூலி கொண்டு அக்கோவால் (பாண்டியனால்) மொத்துண்டு புண்சுமந்த பொன்மேனியனாய் இருந்ததாகும்.[23] நோய் என்பது உயிரைப் பற்றிய மலநோய் என்று கொள்வது சாலச்சிறக்கும். "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட அத்தன்"[24] என்பதால் நோய் தீர்ப்பது கூறப்பட்டது. உயிர்களுக்கு விதிகளை வகுத்தல் என்பதை

" திணியார் மூங்கில் அனையேன்
வினையைப் பொடியாக்கி
அணியார் பாதம் வந்தொல்லை
தாராய்"[25]

---

18. மயிலம் திருப்படித் திரு விழா. வெள்ளிவிழா மலர். 1980 பக் 97
19. சிவ. 5
20. திருவெம். 18
21. திருத்தோ. 10, 3, 7
22. ஷை. 11
23. திருவம். 8
24. அச்சோ. 1
25. திருச்ச. 89

என்பதில், 'வினை (விதி)யைப் பொடியாக்குக' என வேண்டுவதன் மூலம் வினையைச் சேர்ப்பதும் தவிர்ப்பதும் கூறப்பட்டன. இறைவன் குருமணியாய் எழுந்தருளியிருந்து ஆட்கொண்டது மக்களுள் கலந்திருத்தலைக் குறிக்கும். இறைவனின் அருள், இன்பம் தருவதாதலின் அவ்வருளைச் செய்யும் இறைவன் இன்ப வடிவினன். அதனால் அவன், நெல்லிக்கனி, தேன், பால், அமுது, அமுதின் சுவை என உவமிக்கப்பட்டான்,[26] விருப்பத்தை நிறை வேற்றும் இயல்பை,

வேண்டத்தக்கத் தறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே[27]

என்னும் அருட்பாடலால் விளக்கினார் மாணிக்கவாசகர். திருவாசகப் பாடல்கள் யாவும் மேற்குறித்த பத்து இயல்புகளுள் அடங்கும். இறைவன் மக்களுள் கலந்து உறவாடிக் காத்து இன்பம் செய்தலின் அவன் மக்களுக்கு அனுபவப் பொருளாக விளங்கு கின்றான், மக்கள் அனுபவிக்கும் பொருள்களைத் தொல்காப்பியர் கூற வந்தபோது, தெய்வத்தையும் அனுபவப் பொருளாக முதலில் கூறினார்.[28] எனவே திருவாசகம் ஓர் சிறந்த அனுபவ நூல் என்பதில் ஐயமில்லை.

### தத்துவச் சாத்திரநூல்

தத்துவம் என்பது, 'பொருள்' என்னும் பொருள்தரும். அது உலகின் உண்மைப் பொருளைக் குறிக்கும். நிலம், நீர் முதலிய பொருள்களைக் குறிக்கும். தத்துவப் பொருள்கள் தொண்ணூற் றாறு என்றும், அதனினும் குறைந்தால் முப்பத்தாறு என்றும், பிறவாறும் கூறுவர். தத்துவப் பொருள்களைக் கடந்த ஒன்றே கடவுள் எனப்படும்.

தத்—அது; த்வம்—நீ எனக் கொண்டு, அதுவேநீ, அதுவும் நீயும் என இருவகையில் கூறுதலும் ஆம். அதுவேநீ என்பது

26. புணர்ச்சிப். 4
27. குழைத்த 6
28. தொல் பொருள். அகத் திணையியல் 20

சங்கரர் கூறும் அத்துவிதம்; அதுவும் நீயும் என்பது சைவ சித்தாந்திகள் கூறும் அத்துவிதம். வீரசைவ சித்தாந்திகள்—தமிழ் நாட்டிலுள்ளவர்கள் அது எனும் பதியும் நீ எனும் பசுவும் இரண்டாக இருந்தாலும் உலகத் தோற்றக் காலத்துக்குமுன் பதியிடத்தே பசு ஒடுங்கிக் கிடந்து ஒன்றாம் தன்மைப் பொருளாகவே இருப்பன என்பர். அவ்வொன்றாந் தன்மையிலிருந்து பதி, பசுவை நீக்கி உலகைத் தோற்றுவிக்கும். இது முன்னரும் கூறப்பட்டது. இறைவன், தன்னிடத் தொன்றியிருந்த—ஒடுங்கியிருந்த தம்மை நீக்கி உடம்பிற் புகச் செய்ததாக மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

"நீக்கி முன்எனைத் தன்னொடும் நிலாவகை
குரம்பையிற் புகப்பெய்து"[29]

என்பது அவர் வாக்கு. இறைவனை ஒடுங்கி என்னும் பெயரால் குறிப்பிடும் சிவஞானபோதம்.[30] ஒடுங்கித் தோன்றுதற்கிடமான பொருளைக் குறிப்பதே இலிங்கம் என்பது.

உலகம் இறைவனோடு ஒடுங்கிச் சிறுத்து நிற்கும் அணு நிலையே—அதாவது தத்துவப் பொருள்களையெல்லாம் கடந்த அணுநிலையே இறைவனின் முடிந்தநிலை. அதையே மாணிக்கவாசகர் 'அணுவே போற்றி[31] எனப் போற்றினார். அவ்வணுவின் நிலையை,

"சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்து
ஒன்றாம் திருப்பெருந்துறை யுறை சிவனே"[32]

என்று குறிப்பிட்டார்.

"ஒன்றாம் சிவன் என்பதற்கு, 'உயிரானது ஐக்கியப்படும் இடமாகிய சிவன்' என்பது பொருள். உயிரானது ஒவ்வொரு பொருளையும்—தத்துவத்தையும் தன் சிவஞானத்தால், நிலையற்றன என்றுணர்ந்து நீங்கி நீங்கி, இறுதியில் நிலையான சிவத்துடன் ஐக்கியப்படும். அப்படி ஐக்கியப்படுவது சிவாய நம எனும் மந்திரவுணர்வால் ஆம்.

"சிவாய நம எனும் மந்திரம், சிவன், சத்தி, உயிர், மறைப்பு, மலம் எனும் ஐந்தன் கூட்டுச்சொல்—அதை

29. அதிசய. 8
30. சிவஞானபோதம் முதற் சூத்திரம்
31. போற்றித். 112
32. கோயில் திருப். 7

உரைப்பதன்மூலம் அவ்வைந்தையும் உணர்தல் வரும். சி—சிவத்தையும், வ—சக்தியையும், ய—உயிரையும், ந—மறைப்பையும், ம—மலத்தையும் குறிக்கும். 'நம' எனும் இரண்டையும் மலம் என்றும் கூறுவர். 'நம' எனும் இரண்டையும் நீக்கிச் 'சிவாய' என நினைப்பது மலத்தின் நீங்கிச் சென்று தேய்வதாகும். யகரத்தைவிட்டுச் 'சிவ' என நினைப்பது உயிருணர்வை விட்டு நீங்கிச் சென்று தேய்வதாகும். வகரத்தை விட்டுச் 'சி' என நினைப்பது, சக்தியையும் விட்டு நீங்கிச் சென்று சிவத்துடன் ஐக்கியப்படும் ஒன்றாம் தன்மையெய்துவதாகும்.

''இப்படியே சிவத்தையும் காணலாம். உலகம் சிவலிங்கமாகும். சிவாயநம என்பதில் நம என்பன உலகையும் மறைப்பையும் குறிக்கும். அவற்றை உள்ளடக்கிச் சிவமானது சக்தியுடனும் உயிருடனும் 'சிவய' எனத் தேய்ந்து நிற்கும். பின்னர் உயிரையும் அடக்கி சக்தியுடன் மட்டும் 'சிவ' எனத் தேய்ந்து நிற்கும். பின்னர்ச் சக்தியையும் தன்னுள் அடக்கிச் 'சி' எனத் தேய்ந்து நிற்கும். இப்படி ஒவ்வொன்றையும் அடக்கிச் சுருங்குவதே சிவத்தின் அணுவாம் தன்மையாகும்.

''உயிர் தேய்ந்து சிவத்துடன் ஒன்றாவதற்கும், சிவமே யாவற்றிலும் கலந்திருந்தாலும்—யாவுமாக இருந்தாலும் ஒவ்வொன்றாக நீக்கியுணரத் தான் ஒன்றே யாதற்கும் பொருத்தமாக அமைந்தது,

''சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்து
ஒன்றாம் சிவன்''

என்னும் தொடராகும்.''[33]

இவ்வாறு மாணிக்கவாசகர் சிவத்தின் அணுநிலையைக் கூறியதால் அத்தொடரமைந்த பின்வரும் பாடலைத் திருவாசகத்தின் இருதயப் பாட்டென்பர் அறிஞர்.

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை

33. வீரசைவம், வீரம் 6 வெற்றி 8 பக். 1. 2
1-5-1992

சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே[34]

இப்படிப் பல பாடல்களில் தத்துவக் கோட்பாடுகள் பிற்காலத் தவரால் வகுத்தற்கான குறிப்புகள் காணப்படுகின்றன, எனவே திருவாசகம் தத்துவச் சாத்திர நூல் என்பதில் ஐயமில்லை.

இனிச், "சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் சிவன்" என்பதற்கு, இன்றைய அறிவியலார் காணும் அணுவின் இயல்பைக் கொண்டு பொருள் காணலாம். தத்துவங் களாகச் சொல்லப்பட்டனவெல்லாம் இன்று அறிவியலாக ஆய்ந்து கூறப்படுகின்றன. அணு அழியாதது; பிரியாதது என்ற கொள்கையும் ஒரு காலத்தில் இருந்தது. இன்று அணுவும் பிரிக்கப் படும் என்று கண்டறிந்து காட்டுகின்றனர். அணு பிரிக்கப்படக் கூடியது என்பதைக் கம்பர்,

"சாணிலும் உளன்ஓர் தன்மை
அணுவினைச் சதகூ றிட்ட
கோணினும் உளன்"[35]

என்று, பிரகலாதன், நாராயணன் இயல்பைத் தன் தந்தையாகிய இரணியனுக்குக் கூறியதாகப் பாடியுள்ளார். மாணிக்கவாசகர் கம்பருக்கு முன்னர் இறைவனைப் பற்றிக் கூறும்போது,

"அணுத்தரு தன்மையில் ஐயோன் காண்க"[36]

என்றார். 'அணுவானது நமக்குத் தரும் அதன் இயல்புகளில் அதனிடமான நுண்மை மயமானவன் இறைவன்' என்பது அவ்வரி யின் பொருள். நுண்மை யெனினும் நொய்ம்மை எனினும் ஒக்கும். இதன்மூலம் அணுவும் பிரிக்கப்பட்டுப் பிரிக்கப்படுவனவற்றின் இயல்புகளும் அறியப்படும் என்பது புலப்படும். மேல்வரிக்கு உரை எழுதுவோர், அணு என்பது ஆணவமலத்தை உணர்த்தும் எனக் கொண்டு, "ஆணவத்தால் தரப்படுகின்ற தன்மையில்லாத வியப் பினன் இறைவன்" எனப் பொருள் கூறுவர். அருணைவடிவேலர் இப்படியே கூறினார். மேல்வரிக்கு முன்னர் உள்ள வரி, "விரி

34. கோயிற்றிருப். 7.
35. கம்பராமாயணம். 6312.
36. திருவண்ட. 45

பொழில் முழுதாய் விரிந்தோன் காண்க'' என இறைவனின் பேருருப் பற்றிக்கூறியதாக அமைதலின், இறைவனின் சிறியவுரு—நுண்ணுருப் பற்றியதாக ''அணுத்தரும் தன்மையில் ஐயோன்'' என்பது அமைந்தது என்பதே நன்று.

''நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்த அண்டங்கள் எல்லாம், வீட்டின் சிறு ஓட்டைவழியே வரும் சூரிய ஒளியின் ஊடே பறக்கும் சிறுசிறு அணுக்கள் (துகள்கள்)போல் சிறியனவாய்க் காணுமாறு, பெரியவன் ஆவான் (பேருருவாவான்) இறைவன்'' என்ற பொருள்பட,

> ''அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
> ... ... ... ... ... ... ... ... ...
> நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
> இல்நுழை கதிரின் துன்அணுப் புரையச்
> சிறிய வாகப் பெரியோன்''[37]

என முன்னர்த் திருவண்டப் பகுதித் தொடக்கத்தில் கூறியதற்கேற்ப, அணுவுக்கணுவாய்—நுண்மையாய் நிற்கும் நிலையையே 'அணுத்தருந் தன்மையில் ஐயோன்' எனக் கூறினார் மாணிக்க வாசகர் என்று கொள்ளலாம். எனவே, ''சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்'' என்பதற்கு, அறிவியலார் கூற்றுப்படி, அணுக்களைச் சிதைக்கச் சிதைக்க, அவ்வணு தேய்ந்து தேய்ந்து, மேலும் சிதைக்க முடியாத இறுதி நிலையில் உள்ள அணுமயமான ஒரே பொருள் எனக்கருத்துக் கூறலாம்.

மாணிக்கவாசகர் பொருட்டுச் சிவபிரான் நரிபரியாக்கிய வரலாற்றிற்கும் இக் காலத்தார், வலிந்து தத்துவப் பொருள் கூறியதையும் நாம் காணுகிறோம்.

> ''நரி—குதிரைப்பரி என்ற சொற்கள் ஞானயோகப் பரிபாஷைக்குரிய சொற்கள். 'நரி' என்றால் உடம்பை நசிக்கச் செய்கின்ற நாசிவழியாக விடும் மூச்சு என்று பொருள்.
>
> 'குதிரைப் பரி' என்றால் நமது உள்நாக்கின் வலது பக்கத்தும் இடது பக்கத்திலும் இருக்கும் கதிர்வாய், மதிவாய் என்ற இரண்டு வழிகள் மூலமாகப் பொன்னம்பலமான சிற்றம்பலம் வரை சென்று சுழன்று கொண்டிருக்கும் நிலைபெற்ற மூச்சு

37. திருவண்ட. 1-6

என்று பொருள். இது நம்மை யிந்த உலகில், நிலையாக வசிக்கச் செய்கிற மரணமில்லாமல் இருக்கச் செய்கிற வாசி மூச்சு''[38]

இப்படிக் கூறியவர் கிரிதாரி பிரசாத் என்பவர்.

**சிறந்த இலக்கிய நூல்**

**இலக்கணம் :** திருவாசகம் ஒரு தோத்திர நூல் மட்டுமன்று; சிறந்ததோர் இலக்கிய நூலும் ஆகும். இலக்கியம் கண்டு இலக்கணம் இயம்பியவர் தொல்காப்பியர். அவர் இலக்கணமே அவர்க்குப் பின்வந்தார் இலக்கியங்களுக்கு இலக்கணமாயிற்று. இன்று வரையுள்ள இலக்கியங்கள் யாவற்றுக்கும் தொல்காப்பியரின் தொல்காப்பியமே இலக்கண நூலாம். மாணிக்கவாசகர் பாடல்களுக்கும் அதுவே இலக்கண நூலாம்.

(1) திருக்கோத்தும்பிப் பதிகம் தரவுக் கொச்சகக் கலிப்பா என்னும் யாப்பால் அமைந்தது. கலிப்பாவின் அடிநாற்சீரடியாய் அமைதல் வேண்டும். அப்பதிகத்தின் இரண்டாம் பாடலில்,

''நானாரென் உள்ளமார் ஞானங்க ளாரென்னை
யாரறிவார்''

என ஐந்துசீர் கொண்ட அடியானது பாடலின் முதலடியாக அமைந்துளது. இதற்கு அமைதியாதெனின்,

''வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்
ஐஞ்சீ ரடியும் உளவென மொழிப''[39]

என்னும் தொல்காப்பியச் சூத்திரப் பொருளேயாகும். உரையாசிரியர்கள் கருத்துப்படி இச் சூத்திரம், ஆசிரியப்பாவிலும் கலிப்பாவிலும் ஐஞ்சீரடிவரலாம் என்பதாகும். இவ்விலக்கண அமைதியின்றேல் ''நானார் என் உள்ளமார்'' எனும் வரி தவறாகிவிடும்.

(2) பல பொருள் வாணிகம் செய்வோர் **'அல்லதுஇல்'** என்னும் வாய்பாட்டைக் கையாளும் முறையைத் தொல்காப்பியம் கூறுகிறது. உளுந்தும் கடலையும் விற்கும் வணிகனிடம் சென்று ஒருவன், 'கடலையுண்டோ?' என்று கேட்டால், வணிகனிடம் கடலை இல்லையென்றால், வணிகன், 'அல்லதுஇல்' என்னும் வாய்பாட்டை விடைச் சுருக்கம் கருதிப் பயன்படுத்தி 'உளுந்து' அல்லது

38. ஓம்சக்தி, திருவாசகப் பேருரை, சூலை 1992 ப. 50.

39. தொல். செய். 60

இல்லை' என்பான். உளுந்து இல்லாமல் கடலை மட்டும் அவனிடம் இருந்தால், வந்தவன் வேறு கேட்காதிருக்க, இக்கடலையல்லது இல்லை' என்று கடலையைச் சுட்டிச் சொல்வான். 'அல்லது இல்' என்ற வாய்பாட்டை வைத்துச் சொல்வதாயின் இவ்விருவகையில் தான் சொல்லுதல் வேண்டும். இதனைத் தொல்காப்பியம்

எப்பொரு ளாயினும் அல்லதுஇல் எனின்
அப்பொரு ளல்லாப் பிறிதுபொருள் கூறல்[40]
அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல்[41]

என்னும் இரண்டு சூத்திரங்களால் கூறும். இவ்விரண்டு வகை களையும் மாணிக்கவாசகர் ஒரே பாடலில் 'அல்லதுஇல்' என்பதைப் பயன்படுத்திக் கூறியுள்ளார்.

ஐய நின்ன தல்லதில்லை மற்றோர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்லதில்லை பொய்ம்மை யேனென் எம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க வந்து நின்க ழற்கணே
மெய்க லந்த அன்ப ரன்பெ னக்கு மாக வேண்டுமே.[42]

இப்பாடலில் "நின்ன தல்ல தில்லை" என்றதும். "பொய் கலத்த தல்லது இல்லை" என்றதும் காணத்தக்கன. பொய், மெய் என்னும் இரண்டனுள் மாணிக்கவாசகர் தாம் கலந்தது பொய் யையே என்றார். அவர் 'அல்லதுஇல்' என்னும் வாய்பாட்டைப் 'பொய்கலந்தது அல்லதுஇல்' என்றார். மெய்யிற் கலக்கவில்லை என்பதை நேரே கூறாமல் அதற்கு மாறான பொய்யில் கலந்ததைக் கூறி, 'அல்லதில்' என்ற வாய்பாட்டால் மெய்யிற் கலவாமையைக் கூறினார். இக்கூற்று கடலைப் பயிர் இல்லை என்று கூறவரும் வணிகன், உளுந்தல்லதுஇல் என்று கூறுவது போல்வதாகும்.

இனி 'நின்னது அல்லதுஇல் ஓர்பற்று' என்றதன் விளக்கம் வருமாறு : மாணிக்கவாசகர் இறைவனிடம் தமக்கு ஓர்பற்று வேண்டும் எனக் கூறவந்தார். இறைவன் (சிவபிரான்) அருளாகிய பற்று ஒன்றுதவிர, வேறுபற்று இருப்பதாக அவர்க்குப் புலப்பட வில்லை. கடலை மட்டும் உள்ள வணிகனிடம், கடலை உண்டோ எனக் கேட்பவனிடம், 'கடலை மட்டும் உண்டு; வேறு பயறு இல்லை' என்று கூறவரும் வணிகன், 'இக்கடலை அல்லதுஇல், எனக் கடலையைச் சுட்டிக் கூறுவதுபோலவே, மாணிக்கவாசகரும்'

---

40. தொல். சொல். கிளவி யாக்கம் 35
41. மேற்படி. 36
42. திருச்ச. 73

வேறு தெய்வத்தின் அருளாகிய பற்று இல்லாமையால், சிவபிரான் அருளாகிய பற்றே தாம் காண்பதால், ''நின்னது அவ்லதுஇல் ஓர் பற்று'' என்றார். 'நின்னது' என்பது 'நின்னதாகிய அருள்' என்னும் பொருள் தருவது. நின்னதாகிய பற்று எனச் சிவபிரானை முன்னிலைப் படுத்துமுகத்தான் சுட்டிக் கூறினார். எனவே மாணிக்கவாசகர் ''அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல் என்னும் சூத்திரக் கருத்துக்கேற்ப ''ஐய நின்ன தல்லதுஇல் மற்றோர்பற்று'' என்றும், ''அப்பொருளல்லாப் பிறிது பொருள் கூறல்'' என்னும் சூத்திரக் கருத்தைப் ''பொய்கலந்த தல்லதில்'' என்றும்கூறிய நயம் வியத்தற்குரியதாம்.

**உவமை நயம்**

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் இருநூற்றுக்கு மேற்பட்ட உவமைகளைக் கூறியுள்ளார். அவற்றுள் பழமொழி உவமைகளும் உண்டு.

அங்கையின் நெல்லிக்கனி,[43] மூர்க்கனும் முதலையுங் கொண்டதுவிடா[44], பசுமரத்தாணி[45], கண்கெட்ட ஊர்க்காளை[46], ஊர் ஆமிலைக்கக் குருட்டு ஆமிலைத் தாங்கு[47], தாம் வளர்த்தது நச்சு மரமானாலும் கொல்ல மாட்டார்[48], இருதலைக் கொள்ளி எறும்பு[49], கடலில் நாய் நக்கியதுபோல[50], வெள்ளத்துள் நாவற்றியதுபோல[51], நெய்க்குடம் மொய்க்கும் எறும்பு[52], எறும்புக் கூட்டத்துப் புழு[53], நீர்வற்ற மீன்துவண்டதுபோல[54], பலாப் பழத்து ஈமொய்த்ததுபோல[55], கன்றை நினைத்த பசுப்போல[56] என இப்படிப் பல உவமைப் பழமொழிகள் திருவாசகத்தில் காணப் படுகின்றன. குருட்டுக் காளையும் குருட்டுப் பசுவும் மட்டும் இங்கே சிந்திக்கப்படும்.

**குருட்டு மாடு**

மாடு மேய்ப்பவன், ஊர் மாடுகளை மேய்ச்சலுக்காக ஊரைக் கடந்து பசுமையான காட்டுக்கு ஓட்டிச் செல்வான். மாடுகள் வயிறார மேய்ந்த பின்னர், அவற்றை ஊர்க்கு ஓட்டி வருவான்.

43. திருவண்ட .162
44. போற்றித். 63
45, மேற்படி 65.
46. திருச்ச. 53
47. மேற்படி. 87
48. மேற்படி.96
49. நீத். 9
50. மேற்படி. 13
51. மேற்படி. 14
52. மேற்படி. 24
53. மேற்படி. 25
54. '' 26
55. மேற்படி. 46
56. திருப்புலம்பல் 3.

அப்போது அவனுக்கும் தெரியாமல் எப்படியோ கண்கெட்ட குருட்டுக் காளை ஒன்று, மற்றை மாடுகளுடன் சேர்ந்து வாராமல் காட்டிலேயே தங்க நேர்ந்தால், அது, தான் மட்டில் தனித்திருப்பதை, அதாவது மற்றை மாடுகள் காட்டில் இல்லாதிருப்பதை உணர்ந்து, தான் செல்ல வழியறியாமல் திகைத்துத், தன்னை மாடு மேய்ப்பவன் வந்து ஓட்டிச் செல்லும்வரை அலைந்து கிடக்கும். ஊர் சென்ற மாடுமேய்ப்பவன், மாடுகளை அவற்றவற்றின் தொழுவங்களிற் சேர்க்கும்போது கண்கெட்ட குருட்டு மாடு வாராமை கண்டு, காடுவந்து ஓட்டிச் செல்வான். இது நடைமுறை. இதனைத் தம்முடைய நிலைக்கு உவமையாக்கினார் மாணிக்கவாசகர்.

குருமணியால் கோகழிப் பொழிலில் ஆட்கொள்ளப்பட்டுக் குருமணியுடன் இருந்த அடியவர் நடுவில் இருந்த மாணிக்கவாசகர், ஒருநாள், அடியவருடன் குருமணி மறைந்தபோது, தாம் தனித்திருந்த நிலைக்கு மேற்கூறிய கண்கெட்ட குருட்டுக்காளை நிலையை ஒப்புமை கண்டார். மாடுமேய்ப்போன் திரும்ப வந்து அக்காளையை ஓட்டிச் செல்வதுபோல், தம்மைக் குருமணிவந்து தம்பால் சேர்க்க வேண்டும் என்று எண்ணினார்; காட்டில் கொடிய விலங்குகள் காளையைத் துன்புறுத்தவும் கூடும். அதுபோல் தம்மை ஐம்புலன்களும் அரிக்கின்றன என்றும், அதனால் தாம் மத்துறு தயிர்போல் அலைக்கழிக்கப் படுவதாகவும் நினைந்து வருந்தினார். அன்றியும் காளையானது தன் தலைவனால் ஓட்டிச் செல்லப்படவில்லையென்றால், அவனை நினைந்து வந்த வழியே செல்ல முயலும். அப்போது வழி தவறிச் செல்லவும் கூடும். அதுபோல் மாணிக்கவாசகர் தம் குருமணியை நினைந்து தேடிச்செல்லின் முத்தி நெறியறியாத மூர்க்கரொடு கூடவும்நேரும். இவ்வாறெல்லாம் நினைந்த காரணத்தால் இறைவனை நோக்கி,

"... ... ... அருள் பெற்ற
சீரே றடியார் நின்பாதம்
சேரக் கண்டும் கண்கெட்ட
ஊரே றாயிங் குழல்வேனோ
கொடியேன் உயிர்தான் உலவாதே"[57]

என்று புலம்பினார். இவ்வுவமை நினைந்து நினைந்து வியத்தற் குரியதாம்.

57. திருச்ச. 53.

## குருட்டுப்பசு *

காலையில் மற்றை மாடுகளுடன் மேயச் சென்ற குருட்டுப்பசுவானது, மாலையில் மாடுகள் ஊர்திரும்பும்போது, கூட்டத்திலிருக்கும் பசுக்கள் தத்தம் தொழுப்பக்கம் வந்தவுடன் தத்தம் கன்றுகளை நினைந்து கனைக்கும். அப்போது அக்குருட்டுப் பசுவும் தன் இடம் வாராதிருக்கவும் வந்ததாக எண்ணித், தன்கன்றை நினைந்து கனைக்கும். அது தன்னிடத்தைச் சேராமையால் அதன் கனைப்பு ஒலி அதன் கன்றுக்குக் கேளாது. இந்த நிலையை மாணிக்க வாசகர் தம் நிலைக்கு ஒப்பிடுகிறார். இறைவனை விளித்து ''இறைவனே! அடியார் பலரும் நின்னைப் பலவாறாகப் பெயரிட்டு அழைத்துக் கதறுவது கண்டு நின்பால் அன்பில்லாத யானும், நின்னை அமுதே! தேனே! பாலே! என்றெல்லாம் கூவி அழைக்கின்றேன். இடம் சாராத பசுவின் கனைப்புத் தூர இருக்கும் கன்றுக்குக் கேளாதது போல, நின்னை அன்பில்லாமையால் தூர இருக்கும் என்குரல் நினக்குக் கேட்கவில்லை போலும். நினக்கு—நின்திருவடியன்புக்கு அயலானவனாக இருந்து அரற்றுகின்றேன். அவ்வன்பினை எனக்கு அருள்வாயாக'' என்று வேண்டினார்.

தாராய் உடையாய் அடியேற்கு
    உன்தாள் இணையன்பு
பேரா வுலகம் புக்கார் அடியார்
    புறமே போந்தேன்யான்
ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்தாங்கு
    உன்தாள் இணையன்புக்கு
ஆரா வடியேன் அயலே
    மயல்கொண் டழுகேனே[58]

என்று பாடினார். இவ்வுவமையும் வியத்தற்குரியதே.

## சொல்லாட்சி

ஓர் இலக்கியம் சிறப்படைதற்கு அதில் ஆளப்படும் சொற்களே காரணமாகும். கில் என்பது ஆற்றற் பொருள் உணர்த்துவதோர் இடைச்சொல். 'தரிக்கிலேன் காய வாழ்க்கை'[59] என்பதில் 'கில்' ஆற்றற் பொருளில் ஆளப்பட்டது காணலாம். இவ்விடைச் சொல்லைக் ''கொள்ளுங்கில்[60] எனை'' என ஐயப் பொருளில்

---

* இதன் விரிவும் முன்வத்த குருட்டு மாடு என்பதன் விரிவும் வீரசைவமுரசு வீரம் 6 வெற்றி 5ல் (1-2-1992) காண்க.

58. திருச்ச. 87.
59. ஷை 61.
60. மேற்படி 46

ஆண்டதும் காணலாம். அதனையே தனிவினைச் சொற்குப் பகுதி யாக்கி, அதனால் வினைச் சொல் படைத்துக் 'கிற்றிலேன்' கிற்பன்'[61] என்றாண்டுள்ளார். சிறப்பு என்னும் சொல்லைச் சிறவு[62] என ஆண்டதும் அவர் சொற்படைப்பாளி என்பதைக் காட்டும்.

இடத்துக் கேற்பச் சொற்களை ஆளும் திறனுக்குப் பின் வருவன சான்று.

"... ... நாடொறும்
அருக்கனிற் சோதி அமைத்தோன்; திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன்; திண்திறல்
தீயின் வெம்மை செய்தோன்; பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன்; மேதகு
காலின் ஊக்கம் கண்டோன்; நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்த்தோன்; வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன்."[63]

இனி இவ்வரிகளிற் காணும் சொல்லாட்சிச் சிறப்பைக் காணலாம். "நாடொறும், அருக்கனிற் சோதி அமைத்தோன்" என்பதில், சிவபிரான் சூரியனில் ஒளியமைத்தது நாள்தொறும் அமைத்த தாகக் கூறியதற்கு, "சூரியனது சோதி நாள்தோறும் புதுவதாய்ப் புறப்பட்டு வருதலின், அதனை நாள்தோறும் அமைத்துத் தந்தது போலக் கூறினார்; இறந்த காலத்தாற் கூறியது முன்கண்ட நாள் களில் அது நன்கறியப்பட்டமை குறித்து" என விளக்கம் எழுதினார் அருணை வடிவேலர். பின்வருவனவும் அவர் விளக்கமே.

"திண்திறல், தீயின் வெம்மை செய்தோன்" என்பதில் தீயினுக்குத் திண்மையான ஆற்றல் என்றது எல்லாவற்றையும் நீறாக்கும் ஆற்றலை.

"பொய்தீர், வானிற் கலப்பு வைத்தோன்" என்பதில் வானுக் குப் 'பொய்தீர்' என்ற சிறப்புத்தந்தது, சில சமயத்தார் 'வான் என்பது ஒன்றில்லை; உண்டென்பது பொய்' என்று கூறுவதை மறுத்து 'வான்' என்பது ஒரு பூதமே என்பதற்காக.

'நிழல் திகழ் நீர்' என நீருக்கு 'நிழல் திகழ்' என அடைமொழி கொடுத்தது, "நீரின்கண் பிறபொருள் தோன்றுதல் அதனது தூய்மையாதலின் அதனை எடுத்தோதினார்."

---

61. மேற்படி 41.
62. போற்றித். 182
63. திருவண்ட. 19-26

"வெளிப்பட மண்ணில் திண்மை வைத்தோன்" என்பதில் 'வெளிப்பட' என்றது, 'ஏனைய பொருள்கள் போலன்றி உயிர் கட்கு நிலத்தின்மேல் நிற்றல் எஞ்ஞான்றும் இடையறவு படாமை யின், அதனது திண்மைக் குணம் மிக வெளிப்படையாக அறியப் படும் என்பதற்காக.

வெளிப்பட, மண்ணில் திண்மை வைத்தோன் என்பதில் உள்ள 'வெளிப்பட' என்பதை அருக்கன் முதலிய பூதங்களுக்கு ஏற்றிக் கூறுவர் மு.மு. இசுமாயில்.

> "வெளிப்பட என்னும் சொல் அதனையடுத்துவரும் மண் என்ற சொல்லையே குறிப்பதாகக் கொண்டு திருவாசகத்துக்கு உரை கண்ட பலரும் 'வெளிப்படையாக மண்ணிடத்து வலிமையை அமைத்தோன்' என்றும், 'புலனாக மண்ணி டத்துத் திட்பத்தை வைத்தோன்' என்றும் விளக்கம் செய் திருக்கிறார்கள். ஆனால், 'வெளிப்பட' என்ற சொல்லை "என் றென்று, எனைப்பல கோடி எனைப்பல பிறவும் அனைத் தனைத் தவ்வயின் அடைந்தோன்'[64] என்ற சொற்றொட ரோடு சேர்த்துப் பொருள் கொள்ளின் அடிகளார் (மாணிக்க வாசகர்) இங்குக் கூறும் கருத்துக்குப் பொருத்தமாக அமையும் என்பது என் எண்ணம்."

இப்படிக் கூறிய அவர், மேலும்,

> "கண்ணுக்குக் காணப்படாத புலன்களுக்கும் அப்பாற் பட்ட இறைவன், தான் தன்னை உயிர்களுக்கு வெளிப்பட்டுக் காட்டிக் கொள்வதற்காகவே அருக்கனிற் சோதி அமைத்தல் முதலியவற்றைச் செய்தான். அதாவது தன்படைப்புகளின் மூலமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறான் என்ற கருத்தும் பெற வைத்தார்."[65]

என்றும் கூறினார். அவர் கருத்தும் சிறப்புடையதே.

**கற்பனை**

இலக்கியங்களில் கற்பனைகளும் காணப்படும். திருஞான சம்பந்தர் பாடல்களில் கற்பனைகள் உண்டு. மாணிக்கவாசகர் திருவாசகத்தில் கற்பனைகள் இல்லை. சிவபிரானின் சடையில் கங்கையும் பிறைமதியும் இருப்பதைக், கங்கை வெள்ளத்தில் பிறை

64. திருவண்ட. 27, 28
65. திருப்பாதிரிப்புலியூர் பாடலேசுரர் கோயில் கும்பாபிடேக மலர், பக். 50, 51

யாகிய தோணியிருப்பதாகச் செய்த கற்பனையே இரண்டிடத்திற் காணப்படுகின்றது.

"... ... ... ... கங்கை பொங்கி
வருநீர் மடுவுள் மலைச்சிறு
தோணி வடிவின் வெள்ளைக்
குருநீர் மதிபொதியும் சடை"[66]

என்றதும்,

"... ... ... ... மணிப் பணிலம்
கொழித்து மந்தார மந்தாகினி
நுந்தும் பந்தப் பெருமை
தழிச்சிறை நீரிற் பிறைக்கலம்
சேர்தரு தாரவனே"[67]

என்றதும் அவ்விரண்டிடங்களாம்.

முடிப்பு

திருவாசகம் ஒருபக்தி இலக்கியம். பக்தி இலக்கியத்தில் வரும் பாடல்கள் நான்கு பகுப்பில் அடங்கும் என்பர்.[68]

1 தன்னைப் பாடுதல்
2 தனக்காகப் பாடுதல்
3 பிறருக்காகப் பாடுதல்
4 இறைவனைப் பாடுதல்

திருவாசகத்தில் இந்நான்கும் அமைந்திருந்தல் காணலாம்.

1. "தன்னைப் பாடுதல் என்பது, புலவர் தம்முடைய நிலைக்காக இரங்கி நிற்றல், இறையருள் பெற்றமை குறித்துப் பெருமிதம் கொள்ளல் போன்றன அமைகின்றன."

திருவாசகத்தில் நீத்தல் விண்ணப்பம் தம் நிலைக்காக இரங்கி நிற்றலையே குறிக்கும்.

நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை வெறுத்தன்றே வொறுத்திடவே[69]

எனும் பாடல் பெருமிதத்தைக் குறிக்கும். அச்சோப் பதிகமும் அது.

66. நீத். 26
67. மேற்படி. 47
68. இலக்கியப் பொருட் பகுப்பாய்வு, பக். 79
69. திருவேசறவு 10.

2. "தனக்காகப் பாடும்பொழுது இறைவனிடம் தன்னுடைய தேவைகளை நவின்று வேண்டிநிற்பதைக் குறிப்பிடலாம்."

மாவடு வகிரன்ன கண்ணியங் காநின் மலரடிக்கே
கூவிடு வாய்கும்பிக் கேயிடு வாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடு குழல்போற் கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடு வேனுடை யாயடி யேனுன் அடைக்கலமே.[70]

என்பது இதற்குப் பொருந்தும். இப்படிப்பல பாடல்கள் உள.

3. "அறிவுரைப் பகுதிகளையும், உலகிற்காக இறைமுன் இரங்கி நிற்றலையும் பிறருக்காகப் பாடுதலிற் கொள்ளலாம்."

காலமுண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவன் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப் பிரான் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே[71]

என்பது அறிவுரையாகும். திருவார்த்தைப் பாடல்கள் பத்தும் இதில் அடங்கும். யாத்திரைப்பத்தும் கொள்க. தனக்காக இறைவன் முன் இரங்கி நின்ற பாடல்களையே உலகிற்காக இரங்கி நின்று பாடியனவாகக் கொள்ளலாம்.

4. "இறைவனைப் புகழ்ந்து நிற்றல், அவனருள் வியத்தல், அவனியல்பு நவிலல் போன்றன இறைவனைப் பாடுதலின்கண் அமைகின்றன."

சிவபுராணத்தில், "உய்யவென் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா" என்பது முதல் "அல்லற் பிறவி யறுப்பானே" என்பது வரையுள்ள வரிகளாற் கூறப்பட்டன யாவும் மேற்கூறிய மூன்றற்கும் பொருந்தும். கீர்த்தித் திருவகவலில் வரும் காண்க என முடியும் வரிகளும், போற்றித் திருவகவலில் வரும் 'போற்றி' என முடியும் வரிகளும் அவன் புகழ் பாடுவனவே.

கீர்த்தித் திருவகவலில் வரும் பல தலச்சிறப்பு நிகழ்ச்சிகளும் அவனருள் வியத்தலுக்கு ஆகும்.

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே[72]

என்பது போலும் பாடல்கள் அவனியல்பு நவிலலாம்.

---

70. அடைக். 8.
71. திருப்பாண்டி. 5
72. திருச்ச.15

இதுகாறும் கூறியவற்றால் திருவாசகம் ஓர் சிறந்த இலக்கிய நூல் என்பதும், அதன்கண் இலக்கணம், சாத்திரம், இலக்கியப் பகுப்பு முதலியன உள என்பதும் பெறப்படும். அந்நூல் தொல்லை யிரும் பிறவி சூழுந் தளைநீக்கி அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கும் தன்மையிற் பயன் தருவதாம் என்ற துணிவோடு எட்டாந் திருமுறையாகச் சேர்க்கப்பட்ட திருக்கோவையாரைப் பற்றிய சில கருத்துகளைக் காண்போம். திருவாசகம் சற்று விரிவாகக் காணப் பட்டமையின் அதனினும் சுருக்கமாகச் சில கருத்துகளை மட்டும் காண்போம்.

# திருக்கோவையார்

## வரலாறு

மாணிக்கவாசகர் குருமணி ஆணைப்படித் தில்லையை யடைந்து இறைவனை வழிபட்டுத் தங்கியிருந்த காலத்தில் ஒரு நாள், நடராசப் பெருமான் தமிழந்தணர் வடிவுடன் வந்து, 'மாணிக்கவாசகர் பாடியருளிய திருவாசகப் பாடல்களை அவர் கூறக்கேட்டு எழுதிக் கொள்ளத் தாம் விரும்புவதாகக்' கூறி, அவ்வாறே அந்நாள்வரை தாம் பாடிய பாடல்களைக் கூற, ஓலையில் எழுதிக் கொண்டதாகவும், பின்னர்க் 'கோவை நூல் ஒன்று பாடுக' என வேண்டி, அவர் பாட, அக்கோவை நூலையும் எழுதிக் கொண்டு சென்றதாகவும், அவ்விரண்டோலைகளின் முடிவில் ''மாணிக்கவாசகன் சொல்ல அழகிய சிற்றம்பலம் உடையார் எழுதியது'' என்று கைச் சாத்திட்டு அவற்றைச் சிற்சபைப் பஞ்சாக்கரப்படியில் யாரும் அறியாமல் வைத்துச் சென்றதாகவும் திருவாதவூரர் புராணம் கூறும்.

நம்பி திருவிளையாடற் புராணம், குருமணியானவர் மாணிக்க வாசகரைத் தில்லைக்கு வருக என்றபோது, 'பல தலங்களும் சென்று பாடிக் கோவை ஒன்றும் பாடி வருக' என்றார் என்று கூறும். இவை திருக்கோவையார் பாடப்பட்ட வரலாறு.

## பெயர்க் காரணம்

தொல்காப்பியர் தமிழர்தம் குடும்ப வாழ்க்கையைக் கூற வந்தவர், முதலில் திருமண முறையைக் கூற எண்ணினார். திருமணம் தமிழர்களின் தொழில் வழிப் பிரிவான பார்ப்பனர், அரசர், வணிகர், வேளாளர் என்பவருள். தத்தம் குலத்து ஆடவன் ஒருவனுக்குத் தத்தம் குலத்துப் பெண் ஒருத்தியை மணந்து கொடுக்க, நடத்தப் பெறும் குடும்ப வாழ்க்கை யாவர்க்கும் ஒத்திருத்தலின் அதனை விட்டுவிட்டு, ஒத்த குலத்து ஒருவனும் ஒருத்தியுமோ, வேறுபட்ட குலத்து ஒருவனும் ஒருத்தியுமோ யாருங் காணா இடத்து எதிர்ப்பட்டு, மனம் ஒருமித்துக் காதல் வயப்பட்ட வராய்க் கூடிப் பின் மணந்து, குடும்பம் நடத்தும் வாழ்க்கை பற்றிய சிறப்பாக ஒரு கதைத் தொடர்போல் கோவைப்படுத்தி இலக்கணம்

வகுத்தார். பொருளதிகாரத்தில் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்னும் நான்கியல்களில் விவரித்தார். அவ்விலக்கணத்தை அடியொற்றி மாணிக்கவாசகர் பாடிய நூலே **திருக்கோவையார்**. அவ்விலக்கணம் அகப்பொருள் இலக்கணம் எனப்படும். அகப்பொருள் இலக்கணத்தைத் தொல்காப்பிய வழி நின்று, கோவைப் படுத்திப் பாடப்பட்ட நூலாதலின் **கோவை** என்ற பெயராகவே அமைந்தது. தில்லைத் திருச்சிற்றம்பல வாணனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டதாதலின் **திருச்சிற்றம்பலக் கோவை** என்னும் பெயர் ஆயிற்று. திருச்சிற்றம் பலக் கோவையின் சிறப்புக் கருதிப் பின்வந்தவர் 'ஆர்' என்னும் விகுதியைக் கூட்டித் **திருச்சிற்றம்பலக் கோவையார்** என்றனர். அது திருக்கோவையார் என்றும் வழங்கப்படுகிறது. திருவாசகர் அருளிய நூல் திருக்கோவையார் ஆதலின், **கோவைத் திருவாசகம்** என்றும் பிற்காலத்தாரால் கூறப்பட்டது. திருக்கோவையார் நானூறு பாடல்களால் அமைந்தது.

**யாப்பு**

திருக்கோவையார் கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பால் பாடப்பட்டது. கலிப்பாவின் இனம் கலித்துறை, அது ஐஞ்சீரடி யான் நான்கடி வருவது. நேரசை முதலாகத் தொடங்கும் பாடலில் ஓரடிக்கு ஒற்றெழுத்துகளை நீக்கி எண்ணப் பதினாறு எழுத்து களும், நிரையசை, முதலாகத் தொடங்கும் பாடலில் ஓரடிக்கு அவ்வாறு எண்ணப் பதினேழ் எழுத்துகளும் அமையுமாறு பாடப் படுவது கட்டளைக் கலித்துறையென்றும், எழுத்தெண்ணிக்கை யின்றி அமைவது கலித்துறையென்றும் கூறப்படும். கட்டளைக் கலித்துறைக்குத் தொல்காப்பிய இலக்கணம் இல்லை. என்றாலும் அவர்க்குப் பின்வந்தோர் பாடல்களில் இயல்பாய் அமைந்தது கண்டு அதனை இலக்கணமாக அமைத்தனர் பின்னோர். காலத்தால் முந்தியவரான மாணிக்கவாசகரே கட்டளைக் கலித்துறை யாப்பை அமைத்தவராகவும் ஆகலாம்.

அவர்க்குப் பின்னர்க் கோவை நூல் பாடினோர் யாவரும் அதற்குக் கட்டளைக் கலித்துறை யாப்பையே மேற்கொண்டனர். அதன் சிறப்புக் காரணமாகக் கட்டளைக் கலித்துறை, கோவைக் கலித்துறை என்றும் கூறப்பட்டது.

திருவிரட்டை மணிமாலை என்னும் நூல் காரைக்காலம்மை யாரால் பாடப்பட்டது. அது கட்டளைக் கலித்துறை முன்னும்

வெண்பா பின்னுமாக அமைந்த இருபது பாடல்களையுடையது. காரைக்காலம்மையார், அப்பர், சம்பந்தர் காலங்களுக்கு முற்பட்டவர். மாணிக்கவாசகரால் பாடப் பெறாமையால் அவர்க்குப் பிற்பட்டவர். அதனால் கட்டளைக் கலித்துறைப் பாக்களுக்கு மூலம் மாணிக்கவாசகரது கட்டளைக் கலித்துறைப்பாக்களே என்னலாம். திருவாசகத்தும் கட்டளைக் கலித்துறைப்பாக்கள் உண்டு. அதுமுன்னர்க் குறிக்கப்பட்டது.

பாண்டிக் கோவை என்றொரு நூல் இருந்ததாக இறையனார் களவியல் உரையால் அறியப்படுகிறது. இறையனார் களவியல் உரையில் பாண்டிக் கோவைப் பாடல்கள் 326 பாடல்கள் உள்ளன. அவற்றுக்கு அகப்பொருள் துறைகள் 175 துறைகளே உள்ளன. பல துறைகளுக்கு ஒவ்வொரு பாடல் இல்லாமல், இரண்டும் மூன்றும் ஐந்துமாகப் பல பாடல்கள் உள்ளன. இப்படி ஒரு கோவை பாடுவார் யாரும் இலர். உரை படித்து வந்தோர் தாம்தாம் ஒவ்வொரு பாடல் பாடிச் சேர்த்தனராதல் வேண்டும். இடைச் செருகல்களாலேயே 326 பாடல்கள் பெருகின. எனவே பாண்டிக் கோவைப் பாடல்கள் என அவற்றைப் பின்னோர் குறிப்பிட்டாலும் களவியலுரைக்கு உதாரணப் பாடல்களாகப் பிற்காலத்தார் பாடினவே என்னலாம். அதனால் உதாரணப் பாடல்களை ஒரு கோவை நூற் பாடல்கள் என்பதற்கில்லை. அதனால் அப்பாடல்கள் கட்டளைக் கலித்துறைக்கு மூலம் ஆகா.

## பொருள்

தெய்வத்தால் உந்தப்பட்டு ஒருவனும் ஒருத்தியும் தனியொரு பொழிலிடத்து யாரும் காணாமல் எதிர்ப்பட்டுத் தம் உணர்விழந்தவராய் ஒருவரையொருவர் இன்றியமையாத அன்பினராய்க் கூடுவர். அக்கூட்டம் இயற்கைப்புணர்ச்சி எனப்படும்.

அடுத்த நாள் அதே இடத்தில், 'முன் தந்த தெய்வம் இன்னும் தரும்' என வந்து கண்டு கூடுவர். இது இடந்தலைப்பாடு எனப்படும்.

அடுத்த நாள் ஒருவனாகிய அத்தலைவன், தன் பாங்கனிடம் கூறி, அவன் துணையால் அப்பொழிலிடம் வந்து அவ்வொருத்தியாகிய தலைவியைக் கூடுவான். இது பாங்கற் கூட்டம் எனப்படும்.

அடுத்தநாள் இனி இவ்வாறு கூடுதல் தகாது என்று தலைவியின் தோழியை நாடி, அவள் கூட்டுவிக்கக் கூடுதல் தோழியிற் கூட்டம் எனப்படும். தோழி உடனே இசையாமல் தலைவியைச் சோதிப்

பதும், தானும் தலைவியும் இருக்கும்போது தலைவன் வருவதும் தன்னிடம் பேசுவதும் போவதுமாக இருக்கக் குறிப்பறிந்து உடன் பட்டும் இருவரையும் சேர்த்து வைப்பாள். தோழியால் அவனும் அவளும் பகலிலும் இரவிலும் கூடுவர்.

இவர்தம் கூட்டம் ஊர் அறிய நேரும் என அஞ்சித் தோழி, உடன் மணந்து கொள்ள வற்புறுத்துவாள். அடிக்கடி வந்து போவ தற்குப் பல இடையூறுகள் நேர்வதைச் சுட்டிக் காட்டுவாள் தோழி.

கூட்டத்திற்கிடையே, பொருள் தேடி வந்து மணந்து கொள் வதாகக் கூறித் தலைவன் பிரிதலும் உண்டு. பொருள் காரணம் இன்றி வேறு யாதேனும் ஒரு காரணத்தால் அடிக்கடி வராமல் தலைவன் இருத்தலும் நேரும்.

ஊரில் இவர் நடத்தை பற்றி 'அலர்' எழும். அதனால் தோழி இருவரையும் யாரும் அறியாவகை வெளியூர்க்கு அனுப்பி வைப்பாள். அப்படிப் போவது உடன்போக்கு எனப்படும்.

தலைவன் தலைவியை மணம் பேசிவரத் தலைவியின் தமர் இசையாமையால் உடன் போக்கு நிகழ்வதும் உண்டு.

உடன்போக்கைத் தலைவியின் தாயர் (நற்றாய், செவிலித் தாய்) தோழியால் அறிவர்.

உடன் போனவர், தலைவன் ஊரில் மணம் முடித்தல் உண்டு. இல்லையேல் மீண்டு வந்து தலைவியின் இல்லில் மணம் முடிப்பர்.

குடும்ப வாழ்க்கையில் தலைவன் பொருள், தூது, காவல் முதலிய காரணங்களாலும், பரத்தைமை காரணத்தாலும் தலைவி யைப் பிரிதல் உண்டு. பரத்தைமைப் பிரிவால் தலைவிக்கு ஊடல் நிகழும்.

ஊடல் தீர்ந்து கூடல் இல்வாழ்வின் இன்பம். இவையே கோவைப் பாடல்களின் பொருளமைப்பாகும். இவ்வமைப்பை விரிவுபடுத்தி 400 துறைகளாகப் பாடப்பட்டதே திருக்கோவை யார்.

மேலே கூறப்பட்ட பொருண்மையாவும் உலகில் ஆங்காங்கு நிகழ்வனவேயாம். அவை ஒரு சேரக் கோவையாக நிகழாமல் தனித்தனியாக நிகழ்வனவாம். அவற்றை ஒழுங்குபடுத்தி யமைத்தது இலக்கணமாகும். தனித்தனி நிகழ்ச்சிகள் துறைகள் எனப்படும். அத்துறைகளின் ஒழுங்கே கோவை. அந்நிகழ்ச்சிகள் ஒழுக்கம் எனப்படும். அவை குடும்ப ஒழுக்கங்களாகக் கருதப்

படுதலின் அகவொழுக்கம் எனப்படும். இலக்கண நூலார் அக வொழுக்கத்தை **அகத்திணை** என்பர். எனவே, ஆங்காங்கு நிகழும் துறைகளே பின்னர்த் திணைக்குள் அமைக்கப்பட்டன. துறையிலிருந்து திணை எனும் இலக்கணம் அமைக்கப்பட்டது. அக்காலத்தில் இலக்கியம் கண்டு இலக்கணம் அமைத்தனர். பின்னர் இலக்கணம் கண்டு இலக்கியம்அமைக்கும் வழக்கு வந்தது. அதனால் கோவை நூலுக்கும் இலக்கணம் பிற்காலப் பாட்டியல் நூல்கள் கூறுவனவாயின.

> "நெறியை முன்னாக வைத்துத் துறையைப் பின்னாக வைத்தல் இக்காலத்தே பழகிவரும் முறை. ஆயினும் தமிழகத் தத்துவச் சான்றோர் மேற்கொண்ட மரபு அதுவன்று. துறையி லிருந்து நெறி வகுக்கப் பெறுகின்றது. இலக்கியத்திலிருந்து இலக்கணம் அமைப்பதுபோல."

என வீரசைவ நூலுடையார் கூறியதும் இங்கு நோக்கத் தக்கது.[1]

திருக்கோவையார்ச் செய்யுள் ஒவ்வொன்றற்கும் தனித்தனிப் பெயரில் துறைகள் கூறப்பட்டுள்ளன. அத்துறைகளின் கருத்து களைக் கொண்ட இரண்டடிப் பாடல்கள் கொளு என்ற பெயரில் பின்னோரால் கொடுக்கப்பட்டுள்ளன.

**உரை**

திருக்கோவையார்க்குப் பேராசிரியர் என்பவரால் சிறந்த தோருரை எழுதப்பட்டுள்ளது. அவர்க்கு முன்னரும் உரையிருந் துளது. எனினும் பேராசிரியர் உரையே சிறந்தது. அருணை வடிவேலர் குறிப்புரை எழுதியுள்ளார். குறிப்புரை என்றாலும் விளக்கமாக அமைந்துளது. இக்காலத்தில் அவ்வப்போது உரை யெழுதினாரும் உளர்.

**நூற்சிறப்பு**

> ஆரணங் காண்என்பர் அந்தணர்; யோகியர் ஆகமத்தின்
> காரணங் காண்என்பர்; காமுகர் காமநன் னூலதென்பர்;
> ஏரணங் காண்என்பர் எண்ணர்; எழுத்தென்பர் இன்புலவோர்;
> சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே

என்னும் பாடலும்,

---

1. வீரசைவம் பக். 213

உருவாரும் தமிழ்ச்சங்கத் தடம்பொய்கைத் தோன்றி
உயர்ந்தோங்கு மெய்ஞ்ஞான ஒளியுடைத் தாகி
மருவாரும் கிளவியிதழ் நானூறாகி
மதுப் பொருள்வாய் மதிப்புலவர் வண்டாய் உண்ணத்
தருவாரும் புலியூரின் உலகுய்யக் குனிப்போன்
தடங்கருணை யெனுமிரவி தண்கதிரால் அலரும்
திருவாத வூராளி திருச்சிற்றம் பலவன்
திருவடித்தா மரைசாத்தும் திருவளர்தா மரையே

என்னும் பாட்டும் திருக்கோவையார்ச் சிறப்புணர்த்தும்.

திருக்கோவையார்க்குத் தனிச்சிறப்புத் தரவேண்டும் என்பதற்காகப் பாடல்களுக்குத் தத்துவப் பொருள்களை வலிந்து காட்டுவாரும் உளர்.

"நான் இவளாம் பகுதிப் பொற்புஆர் அறிவார்"[2] என்னும் தொடர் அத்துவிதத்தைக் குறிக்கும் என்பர். தலைவன் என்பவன் இறைவனாகவும் தலைவி என்பவள் உயிராகவும் கொண்டு, 'இறைவனை உயிர் அடைந்தின்புறுதலே தலைவனைத் தலைவி யடைந்து இன்புறுதல்' என்றும், தலைவன் தலைவியையடைய வேண்டிப் பலவாறு வந்து போதல், 'இறைவன் உயிரின்பொருட்டு இரங்கி வந்தாட் கொள்ளுதல்' என்றும் பலவாறு கூறுவர். திருக்கோவையார்ப் பாடல்களில் எங்கும் அப்படித் தத்துவப்பொருள் காணுவதற்கான குறிப்புகள் இல்லை. திருக்கோவையார்க்குத் தத்துவப் பொருள் கூறுவதாயின், பிற்காலத்தனவான தஞ்சைவாணன் கோவை, கோடீச்சுரக் கோவை, திருவேங்கைக் கோவை முதலியவற்றுக்கும் கூறல் வேண்டும். இன்று கரந்தைக் கல்லூரிப் பேராசிரியர் பாலசுந்தரம் பாடிய கரந்தைக்கோவையும் தத்துவ நூலே என்னலாம். எனவே திருக்கோவையார் ஒரு சிறந்த இலக்கிய நூல் என்ற அளவில் அமைவதே நன்று.

### அகச்சான்று

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் தம் வரலாற்று நிகழ்ச்சிகளை வெளிப்படையாகவே கூறியிருப்பதுபோல திருக்கோவையாரில் எங்கும் கூறவில்லை. ஆனால் சில குறிப்புகள் சிவபிரான் அவரை ஆட்கொண்டதைத் தெரிவிக்கும்.

---

2. திருக்கோவையார் 8

"அடிச்சந்தம் மால்கண் டிலாதன காட்டிவந் தாண்டு
கொண்டுஎன்
முடிச்சந்த மாமலராக்கு முன்னோன்"[3]

"பொருளா எனைப்புகுந் தாண்டு"[4]

"இப்பிறப்பில் அழுந்தாவகை யெனை யாண்டவன்"[5]

"அழுந்தேன் நரகத்து யான்என் றிருப்பவந் தாண்டுகொண்ட
செழுந்தேன்"[6]

என வருவன மாணிக்கவாசகரை இறைவன் ஆட்கொண்டமைக்குச் சான்றாம்.

உள்ளம் உருகி உரோமம் சிலிர்ப்ப உடையவன்ஆட்
கொள்ளும் அவரில்லோர் கூட்டந் தந்தான்"[7]

என்பது குருமணியானவர் மாணிக்கவாசகரை அடியார் கூட்டத் திருக்கச் செய்தமைக்குச் சான்று.

"எம்மைப் பிடித்து இன்று ஆண்டு எல்லைதீர் இன்பம்
தந்தவன்"[8]

என்பது குருமணி வலியவந்து ஆண்டதைக்குறிக்கும்.

"தொழும்பிற் பிரிந்தெனை யாண்ட சிற்றம்பலத்தான்"[9]
என்பதும் அதுவே.

"தன்வார் கழல்கள் எனக்களியா நிற்கும் அம்பலத்தோன்"[10]
என்பது திருவடி தீட்சையைக் குறிக்கும். மேலும்,

"சுற்றம் பலம்இன்மை காட்டித் தன்தொல்கழல்தந்த
தொல்லோன்"[11]

என்றதும் காணத்தக்கது.

புயலோங் கலர்சடை யேற்றவன் சிற்றம் பலம்புகழும்
மயலோங் கிருங்களி யானை வரகுணன் வெற்பின்வைத்த
கயலோங் கிருஞ்சிலை கொண்டுமன் கோபமும் காட்டிவரும்
செயலோங் கெயிலெரி செய்தபின் இன்றோர் திருமுகமே[12]

---

3. திருக்கோவையார் 78
4. மேற்படி 73
5. மேற்படி 124
6. மேற்படி 166
7. மேற்படி 185
8. மேற்படி 230
9. மேற்படி 279
10. மேற்படி 393
11. மேற்படி 346
12. மேற்படி 327

இப்பாடல் பாண்டியன் மாணிக்கவாசகர்க்குச் சினந்து அனுப்பிய ஓலைச் செய்தியைக் குறிக்கும் என்பர். தலைவன் தன் அரசனுக்குத் துணையாகச் சென்று போரில் வெற்றி கண்டபின் தலைவி நினைவுவர, அவள் முகம் வெளிப்படுவதுபோல் கொண்டு கூறியது இப்பாட்டு. "யான் போரில் பகைவர் மதிலை எரியிட்டு வென்ற பின், ஒரு திருமுகம் வெளிப்படுகின்றது. எப்படி எனின், வரகுண பாண்டியன் பிறர் மலையில் பொறித்த மீனையும் (கண்ணையும்) சேரனை வென்று கொண்ட சிலையை (வில்போலும் புருவத்தை) யும், இந்திரகோபப்பூச்சி நிறம்போன்ற சிவந்த உதட்டையும் கொண்டு வெளிப்படுகின்றது" என்று தலைவன் கூறினான். இதில், வரகுணன் மாணிக்கவாசகர்க்கு அனுப்பிய திருமுகம் (ஓலை) அவனின் அடையாளமாகிய கயலையும் சிலையையும் கொண்டு கோபத்தையும் காட்டி வந்தது என்ற குறிப்பும் உண்டு.

மேலே கூறப்பட்டன தவிர, வேறு வரலாற்றுச் செய்திகள் காணப்படவில்லை. நரிபரியாக்கியது, வையைக்கரை நிகழ்ச்சி கூறப்படவில்லை. மேலே கூறப்பட்டனவற்றுக்கு மாணிக்க வாசகரின் வரலாற்றோடு தொடர்பு படுத்தாமலும் பொருள் கூறலாம். ஆதலின் அவை குறிப்பாற் பெற வைத்தனவே என்க.

**சில அரிய செய்திகள்**

**இரத்தினசபாபதி**

"சேணிற் பொலிசெம்பொன் மாளிகைத் தில்லைச்சிற் றம்பலத்து
மாணிக்கக் கூத்தன்"[13]

இதில் மாணிக்கக் கூத்தன் என்பது இன்று தில்லைப் பிராமணர்களால் பூசிக்கப்பட்டுவரும் இரத்தினசபாபதியைக் குறித்ததாகலாம். மாணிக்கவாசகர் காலத்தில் தில்லைவாழ் அந்தணர்களால் பூசிக்கப்பட்டு வந்த மாணிக்கக் கூத்தனே இன்று இரத்தின சபாபதி என வழங்கப்படுகிறான். (மாணிக்கம்—இரத்தினம்)

**மழை வேண்டி வழிபாடு**

தினைப் பயிர்கள் வெயிலில் காய்வதுகண்டு, கானக்குறவர்கள், மழைவேண்டித் தெய்வத்தைப் பரவுதல் கூறப்பட்டுள்ளது. இது துன்பம் வரும்போதும் தெய்வத்தைப் பரவுதல் என்னும் வழக்கு உண்மையைக் காட்டும்.

---

13. மேற்படி 23

"ஏனற் பசுங்கதிர் என்றூழ்க்கு அழிய எழிலி யுன்னிக்
கானக் குறவர்கள் கம்பலை செய்யும் வம்பார் சிலம்பர்"[14]

என்பது திருக்கோவையார். (கம்பலை—வழிபாட்டாரவாரம்)

**தில்லையைக் கண்டால் முத்தி**

திருவாரூரில் பிறந்தால் முத்தி; காசியில் இறந்தால் முத்தி; தில்லை சென்று நடராசப் பெருமானைக் கண்டால் முத்தி; திருவண்ணாமலையினை நினைத்தால் முத்தி என்பர்.

"துவக்கற வறிந்து பிறக்குமா ரூரும்
துதைந்திடா தடைந்துகாண் மன்றும்
உவப்புடன் சென்று மரிக்குமோர் பதியும்
ஒக்குமோ நினைக்குநின் னகரை"[15]

எனச் சிவப்பிரகாசரும் சோணசைல மாலையிற் கூறியது காணலாம். தில்லையைக் கண்டாலே முத்தி என்னும் வழக்கு மாணிக்கவாசகர் காலத்திலேயே யிருந்திருக்கலாம். அதற்கேற்ப,

"கனைகடற் செய்தநஞ் சுண்டுகண்டார்க்கம் பலத்தமிழ்தாய்
வினை கெடச் செய்தவன்"[16]

என்றும்,

"செழுவார் கழல்தில்லைச் சிற்றம்பலவரைச் சென்றுநின்று
தொழுவார் வினைநிற்கிலே"[17]

என்றும் அவர் கூறியது காணலாம்.

**நந்தி**

சிவபிரானை நந்தி என்றும், நந்தியே சிவம் என்றும் சொல்வர். நந்தி எனும் சொல்லை முதன் முதலில் ஆண்டவர் மாணிக்க வாசகரே. பின்னரே திருமூலர் முதலியோர் ஆண்டனர். "நந்தி நாமம் நமச்சிவாயவே" என ஞானசம்பந்தரும் ஆண்டார்.

"நந்தீ வரம் என்னும் நாரணன்"[18]

என நாரணன் சிவபிரானிடம், 'நந்தியே எனக்கு வரம் அருள்' என வேண்டியதாகக் கூறியது காணலாம்.

"நந்தி என்பது ஆநந்தி என்ற சொல்லின் சிதைவு. ஆநந்தி என்ற சொல் ஆநந்தத்தைச் செய்பவனாகிய

---

14. மேற்படி 159
15. சோணசைலமாலை 2
16. திருக்கோவையார் 141
17. மேற்படி 142
18. மேற்படி 163

சிவபெருமானைக் குறிக்கும். அச்சிவபெருமானின் வேறற நிற்பவரும் அபரசிவம் என்று வேதங்களாற் சொல்லப்படுகின்ற வரும் நந்தியெம் பெருமானே யாவர்''[19]

**திருமால் வரம் கிடந்தது**

திருவடியைக் காணாது மீண்ட திருமால், இறைவனிடம் முறையிட, இறைவன் தன் திருவடியொன்றைக் காட்ட, 'மற்றதும் காட்டுவாயாக' எனச் சிற்றம்பல முற்றத்தில் வரங்கிடந்தான் என்ற அரிய செய்தியைத் திருக்கோவையாரில், ''புரங்கடந்தானடி'' எனத் தொடங்கும் பாடல் உணர்த்தும் என்பது முன்னர்க் கால ஆராய்ச்சியிற் கூறப்பட்டது.

**காக்கைக் குணம் ஐந்து**

''குணங்கள் அஞ்சாற் பொலியும் சேட்டைக் குலக் கொடியே''[20] எனக் காக்கைக்குக் குணம் ஐந்து என்றது திருக் கோவையார்.

பிறர் அறியாமல் புணர்தல், மனம் கலங்காமை, காலம் கடவாமல் தன் இடம் அடைதல், தொலைப் பொருளைக் காணுதல், மடியின்மை என்பன அவை என்பர்.

**நாய்க்குணம்**

திருவாசகப் பாடலில் தம்மை நாயினும் கடைப்பட்டவராகவே கூறிக் கொண்டார் மாணிக்கவாசகர். நாயை இழிந்ததாகவே கூறினார். நாய்க்குரிய நன்றியை வியந்து,

''நாய்வயின் உள்ள குணமும் இல்லேன்''[21]

எனத் தம்மை இழித்துரைத்தது காணலாம்.

**தில்லை கடற்கரையூர்**

தில்லை கடற்கரையூராக இருந்திருக்கலாம் என்பதற்குப் பின்வருவன சான்று பகரும்.

ஆண் நண்டு தன் பெண் நண்டுக்கு நாவற்கனி கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது.

---

19. மயிலம் பொம்மபுர ஆதீனம் 18ஆம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள் 26-5-1940இல் கும்பகோணத்தில் நடைபெற்ற வீரசைவ மகா சபை மாநாட்டில் நந்திக் கொடியேற்று விழாவில் ஆற்றிய வுரை. பக். 5, 6.
20. திருக்கோவையார் 235
21. மேற்படி. 343

"......... ஓர் அலவன் தன் சீர்ப்பெடையின்
வாய்வண் டனையதோர் நாவற்கனி நனி நல்கக்கண்டு"[22]

என்பது காணலாம்.

"தில்லைக் கானலில் சீர்ப்பெடையோடு
அலவன் பயில்வது கண்டு"[23]

என்று அலவன் (நண்டு) செய்தி கூறப்பட்டுள்ளது.

"வங்கம் மலிகலி நீர்தில்லை"[24]

எனக் 'கப்பல் மிகுந்துள கடற்கரைத் தில்லை' யென்றும் கூறப்பட்டுள்ளது.

"கடல்தில்லை"[25] என்றும் ஒரு பாட்டில் கூறப்பட்டுள்ளது.

**வீரசைவக் குறிப்பு**

"கூம்பல் அங்கைத் தலத்தன்பர் என்பூடுரு கக்குனிக்கும்
பாம்பலங் காரப் பரன்"[26]

என்னும் தொடர்க்கும் இருவகையிற் பொருள் கொள்ளலாம்.

"குவிதலையுடைய அழகிய கைத்தலத்தையுடைய அன்பரது எலும்பு உருகுமாறு நடமாடும் பாம்பணியுடைய சிவபிரான்".

இப்படிப் பொருள் கூறுவர் யாவரும்.

"கூம்புதல் (குவிதல்) அல்லாத விரிந்த உள்ளங்கையிடத்து இட்டலிங்கமாகத் தங்கியிருந்து அங்கே நடமிடும் பாம்பலங் காரப் பரமன்"

என்றும் பொருள் கொள்ளலாம். அப்படியாயின் அன்பர் தம் உள்ளங்கையில் இட்டலிங்கப் பெருமானை வைத்துப் பூசித்தலைக் குறித்தார் மாணிக்கவாசகர் எனக் கொள்ளலாம்.

**பிற**

திருவாசகத்தில் பல பதிகங்களில் பிற தலங்களை வைப்புத் தலங்களாகக் கூறியதுபோலத் திருக்கோவையாரிலும் குற்றாலம்[27] திருப்பனையூர்[28], மூவல்[29], ஈங்கோய்[30], இடைமருது[31],

---

22. மேற்படி. 84
23. மேற்படி. 155
24. மேற்படி
25. மேற்படி.
26. மேற்படி. 11
27. மேற்படி. 135
28. மேற்படி. 137
29. மேற்படி. 191
30. மேற்படி. 304
31. மேற்படி. 269

ஏகம்பம்[32], வாஞ்சியம்[33], வெண்காடு[34], பூவணம்[35] என்னும் தலங்கள் வைப்புத் தலங்களாகக் கூறியுள்ளார் மாணிக்கவாசகர்.

பிள்ளை என்னும் சொல் பெண்பாற்கு ஆளப்பட்டுள்ளது. பெருந்துறைப் பிள்ளை[36] எனத் தலைவியைக் குறித்துள்ளமை காணலாம்.

பெண்பிள்ளையைப் பெண்மகன் என'ன' கரவொற்றுக் கொடுத்துக்கூறும் வழக்குண்மை தொல்காப்பியத்தால் அறியப் படும்[37]. அதற்கேற்பத் தலைவியை 'வெண்காடனைய பாலன்'[38] என்று கூறியது அரிய ஆட்சியாம். பாலன்—ஆண்மகன். பாலள் என்று கூறப்படவேண்டுவது பாலன் எனக் கூறப்பட்டுள்ளது.

திருக்கோவையார் ஓர் பேரிலக்கியம் என்பதற்கான சிறப்புகள் பலவுடையதாய் விளங்குகிறது. உவமை முதலிய அணிகளும், சொல்லாட்சிகளும், பிறவும் உடையதாய் விளங்குகிறது. விரிக்கிற் பெருகும் ஆதலின் விடுத்து நிறைவுரைக்குச் செல்லுதல் சாலும்.

---

32. மேற்படி. 268
33. மேற்படி. 268
34. மேற்படி. 286
35. மேற்படி. 305
36. மேற்படி. 104
37. தொல். சொல். 164
38. திருக்கோவையார் 286

# நிறைவுரை

எட்டாந் திருமுறைகளாகிய திருவாசகம், திருக்கோவையார் என்பனவற்றை ஆய்ந்த வகையில், பின்வரும் கருத்துகள் சில ஆய்வுக்கு மேற்கொள்ளப்படவேண்டியனவாகும்.

ஞானசம்பந்தர், அப்பரடிகள், சுந்தரர் ஆகிய மூவரும் தம் தம் பதிகங்களில் தம் வரலாற்று நிகழ்ச்சிகளை வைத்துப் பாடியுள்ளனர். எந்த எந்த ஊர்களுக்குச் சென்றனரோ அந்த அந்த ஊர்களில் நடந்த நிகழ்ச்சிகளை அந்த அந்த ஊர்ப்பதிகங்களில் வைத்துப் பாடியுள்ளனர். நிகழ்ச்சிகள் நடைபெறாத ஊர்ப்பதிகங்களில் நடந்த நிகழ்ச்சிகளை வைத்துப் பாடவில்லை. மாணிக்கவாசகர் செல்லும் ஊர்கள் தோறும் பதிகம் பாடுதல் வேண்டும் என்னும் கொள்கையிற் பாடாமல், பாடத்தோன்றியபோது ஆங்காங்கிருந்து பாடியமையால் தம் பதிகங்களில் தம் நிகழ்ச்சிகளை வைத்துப் பாடியுள்ளார்.

திருவாசகப் பதிகங்கள் பாடிய காலங்களைப் புராணங்கள் மாறுபட்டுக் கூறுகின்றன. மறைமலையடிகளார் ஒரு வகையில் நிரல்படுத்தியுள்ளார். அவற்றைக் கண்டு தெளிவுபடுத்த வேண்டியது இன்றியமையாதது.

மாணிக்கவாசகர் காலம் பற்றிய பல கருத்துகளை மேலும் ஆய்ந்து முடிவு செய்ய வேண்டுவதும் இன்றியமையாததே.

மாணிக்கவாசகர் வீரசைவர் என்பதற்கான சான்றுகள் திருவாசகத்திலும் திருக்கோவையாரிலும் இருக்கவும் சைவர் என்றே கூறி வந்தமைக்குக் காரணம் என்ன?

திருக்கோவையார் மாணிக்கவாசகரால் பாடப்பட்டதன்று; அவர் வழியினர் பாடியிருக்கலாம் என்பது ஒரு கருத்துண்டு. மாணிக்கவாசகர் காலம் மூவர்க்கும் முற்பட்டது என்று கூறுபவர்கள் திருக்கோவையாரில் வரகுண பாண்டியன் கூறப்பட்டிருத்தலின்

அவன் காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டோ அதற்குச் சற்றுப் பிற்பட்டோ இருத்தலின் அதையே காரணமாகக் கூறுவர். (கால ஆய்வில் இது மறுக்கப்பட்டது )

அந்தண வடிவில் வந்த சிவபிரான் எதிர் இருக்கத் திருக் கோவையாரைப் பாடினார் மாணிக்கவாசகர் என்றால், தம்மை யாட்கொண்ட இறைவனை யாதும் அறியாது கோவையைப் பாடினார் என்பது ஏற்கக் கூடியதா? ஞானமுதிர்வு நிலையில் இருந்த மாணிக்கவாசகர் இறைவனையறியாதது, இறைவனின் எண்ணத்தால் விளைந்ததா? 'நீயே என்னைப் பாடவைத்தாய் என்ற குறிப்பைப் பாடலில் எங்கேனும் காட்டியிருக்கலாமே?

நரிபரியாக்கியது, வையைக்கரையடைத்தது ஆகிய செயல் களைத் திருவாசகத்தில் சில விடங்களில் கூறியது போல் திருக் கோவையாரில் எங்கும் கூறப்படவில்லை.

திருவாசக உருக்கம் திருக்கோவையாரில் இல்லை. காரணம் அது அகப்பொருட்சுவையோடமைந்துவிட்டதாகலாமா?

திருமால் சிவபிரானைப் பூசை செய்ததைத் திருவாசகத்தில் கூறிய மாணிக்கவாசகர், திருமால் வரங்கிடந்த செய்தியை அதில் கூறாமல் திருக்கோவையாரில் கூறியுள்ளார். திருமால் இடபமாகத் தாங்கியதைத் திருவாசகத்தில் கூறியதும் நோக்கத் தக்கது.

இனித் திருக்கோவையாரை மாணிக்கவாசகரே பாடினார் என்பதற்குப் பின் வரும் சான்றுகளைக் கொள்ளலாமா?

குருமணி தம்மை யாட்கொண்ட குறிப்புகளும், வீரசைவர் என்பதற்கான ''கூம்பலங் கைத்தலத் தன்பர் என்பூடுருகக்குனிக்கும், பாம்பலங்காரப்பரன்'' என்னும் குறிப்பும்—இரண்டு நூல்களையும் மாணிக்கவாசகரே பாடினார் என்பதைத் தெரிவிக்கும்.

திருவாசகத்தில் இலிங்கம் இல்லை. திருக்கோவையாரிலும் கூறப்படவில்லை.

உருத்திராக்கம் திருவாசகத்தில் எங்கும் கூறப்படவில்லை. திருக்கோவையாரிலும் இல்லை.

''அக்கின் தவா மணிசேர் கண்டன்''[1]

''அக்கும் அரவும் அணிமணிக் கூத்தன்''[2]

---

1. திருக்கோவையார். 68 2. மேற்படி. 103

"மணியக் கணியும் அரன்"[3]

என்னுமிடங்களில் 'அக்கு' என்பது அக்கமணியை (உருத்திராக் கத்தை)க் குறிக்கும் என்பர். இறைவன் எலும்பணியும் உடையவன் ஆதலின் 'அக்கு' என்பது எலும்பைக் குறிக்குமேயன்றி உருத்திராக் கத்தைக் குறிக்காது என்று கொள்வாரும் உளர். "எலும்பால் அணியிறை"[4] என வருவது கொண்டு அக்கு என்பதற்கு எலும்பு எனக் கொள்வதே பொருந்தும் என்பாரும் உளர். "அக்கின் நகை யிவள்"[5] என்ற விடத்து 'அக்கு' என்பது சங்கு மணியைக் குறித்தலின் மேலே உள்ள 'அக்கு' என்பதற்கும் எலும்பு எனக் கொள்ளலே சாலும் என்பர் அவர். உருத்திராக்கம் திருவாசகத்தில் காணப்படாமையின் திருக்கோவையாரிலும் அது குறிக்கப்பட வில்லையென்றே கொள்ளல் வேண்டும் என்பர் அவர்.

மாணிக்கவாசகர் 'கில்' என்னும் இடைச்சொல்லை வைத்துக் 'கிற்றிலேன்,' 'கிற்பன்', 'கிற்றவா' எனச் சொற்படைத்து ஆடிய காரணத்தால் அவர் ஒரு கில்லாடி என்பர்.[6] அதற்கேற்பத் திருக் கோவையாரிலும் பொருள் தரக்கிற்கின்றது,[7] என்றும், "ஆழி திருத்தித் தரக்கிற்றியோ"[8] என்றும் 'கில்' வைத்து ஆடியுள்ளார்.

கயிலாயத்தைத் திருவாசகத்தில் பலவிடங்களில் 'சிவநகர்' அல்லது 'சிவபுரம்' எனக் கூறியது போலவே திருக்கோவையாரிலும் சிவநகர்[9] என்று கூறியுள்ளார்.

இனிச் சொல்லாட்சியிலும் ஒற்றுமை காணப்படுதலைக் காணலாம். திருவாசகத்தில்,

"தில்லைமூதூர் ஆடிய திருவடி"[10] என்பதில் 'அடி' என்பது அடியினையுடைய சிவபிரானைக் குறித்தது போலவே, திருக் கோவையாரிலும் "சிலம்பணிகொண்ட செஞ்சீறடி பங்கன்"[11] எனுமிடத்தில் 'சீறடி' என்பது சிறிய அடியையுடைய உமை யம்மையைக் குறித்தது. 'அடி' என்பன சினையாகு பெயராய் முன்னது இறைவனையும் பின்னது இறைவியையும் குறித்தன.

'சோத்து' எனும் வழிபாட்டையுணர்த்தும் சொல்லானது "சோத்தெம்பிரான்" என நீத்தல் விண்ணப்பத்திலும்[12] திருப்

3. மேற்படி. 195
4. மேற்படி. 197
5. மேற்படி. 376
6. ஆய்வுக்கோவை, பக். 374
7. திருக்கோவையார் 336
8. மேற்படி. 186
9. மேற்படி. 209
10. கீர்த்தித்திருவகவல் 1
11. திருக்கோவையார் 54
12. நீத். 44

பொற் சுண்ணத்திலும்[13] ஆளப்பட்டமை போலவே, "சோத்துன் அடியோம்"[14] எனத் திருக்கோவையாரிலும் ஆளப்பட்டுள்ளது.

"......... மறந்தும் மற்றைப்
பொய்வா னவரிற் புகாது தன்பொற் கழற்கே யடியோன்
உய்வான்புக ஒளிர் தில்லை நின்றோன்"[15]

எனவும்

"என்கடைக் கண்ணினும் யான்பிற ஒத்தா வகையிரங்கித்
தன்கடைக் கண்வைத்த தில்லைச் சங்கரன்"[16]

எனவும் பிறதெய்வ வணக்கத்தை வெறுத்தமையைத் திருக்கோவையாரில் கூறியதும்,

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவருளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாதெங்கள் உத்தமனே[17]

எனத் திருவாசகத் திருச்சதகத்துக் கூறியதும் ஒத்தல் காணலாம்.

இப்படிப் பல ஒப்புமைகள் திருவாசகத்தும் திருக்கோவையாரிலும் இருத்தலைக் காணும்போது இரண்டும் மாணிக்கவாசகராலேயே பாடப்பட்டன எனக் கொள்ளலாம். முன்னோர் நூலின் கருத்துகளையும் சொற்களையும் பின்னோர் தம் நூலில் எடுத்தாளுதல் முறையே ஆதலின் அவ்வாறு ஒப்புமைகள் காணப் படுவது கொண்டு மாணிக்கவாசகரே இரண்டும் பாடினார் என முடிவு கூற இயலாது என்று ஒதுக்கவும் கூடும். ஆய்வறிஞர் ஆய்வுக்குரியது என்ற அளவில் அமைவேம்.

மாணிக்கவாசகர் முன்னோர் கன்னட நாட்டிலிருந்து வந்தவராகலாம் என்பதும் உண்டு. போனகம், ஊட்டா என்னும் சொற்கள் கன்னடத்தில் உணவைக் குறிக்கும். 'போனகம் ஆனவா'[18] என்றும், 'ஊட்டாம் காண்'[19] என்றும் அவற்றைத் திருவாசகத்தில் ஆண்டுள்ளார்.

மாணிக்கவாசகரால் ஆளப்பட்ட பஞ்சப்பள்ளி என்பது கன்னட நாட்டில் உள்ள பஞ்சஹள்ளியைக் குறிக்கும். நந்தம்பாடி

13. திருப்பொற். 8
14. திருக்கோவையார். 173
15. திருக்கோவையார். 67
16. மேற்படி. 298
17. திருச்ச. 2
18. திருப்பூவல்லி .12
19. திருச்சாழல். 14

என்பது, கோதாவரி டெல்டாப் பகுதியில் தனுக்கிற்கு அணித்தாயிருந்த நந்தம்பாடியைக் குறிக்கும். "பழங்காலத்தில் குந்தள நாடென வழங்கப் பெற்ற பல்லாரி மாவட்டத்தில் கோகழி என்னுமிடத்தில் இயக்கிமார் அறுபத்து நால்வரால் கோகழித் திருமடம் என்றதொரு நிலையம் அமைக்கப்பட்டிருந்ததெனவும் அம்மடத்தில் தலைமையேற்றிருந்த ஞானாசாரியார் பரம்பரையில் வந்த ஒருவரே மாணிக்கவாசகரைத் திருப்பெருந்துறையில் ஆட்கொண்ட குருநாதர் எனவும் ஒரு வரலாறும் வழங்கி வருகின்றது என்றும், இதை நினைவு கூர்ந்தே அடிகளார், "இயக்கிமார் அறுபத்து நால்வரை எண்குளம் செய்த ஈசனே" எனத் திருக்கழுக் குன்றப் பதிகத்தில் கூறியுள்ளார் என்றும் கூறுவாரும் உண்டு.[20] இக்கருத்தை ஒதுக்கிவிட முடியாது. இதையும் நன்று ஆய்ந்து முடிவு செய்தல் வேண்டும்.

இறுதியாக ஒரு கருத்து. வையாபுரி பிள்ளையவர்கள் பின்வருமாறு எழுதியது காணத்தக்கது.

> "ஸ்ரீ பொன்னம்பல பிள்ளையவர்கள் 'Manicka vasagar and the early Christians of Travancore' என்ற நூலை எழுதி, மாணிக்கவாசகர் மலைநாடு சென்று அங்குள்ள கிறிஸ்தவர்களைச் சைவராக்கினார் என்று முடிவு கட்டினார்கள். சுவாமிகளுடைய ஜீவிய சரிதத்திற் பெரிதும் வழங்கிக் காணப்படும் திருப்பெருந்துறை என்னும் ஸ்தலம் கொச்சியையடுத்துள்ள திருப்பூணித் துறையே யாதல் வேண்டும் எனவும் இவர்கள் கருதினார்கள்"[21]

இக்கதைபோல் மாணிக்கவாசகர் கதைகள் இன்னும் என்னென்ன உளவோ! அவை அவர்க்கே வெளிச்சம்.

---

20. மாணிக்கவாசகர் யார்? பக். 32, 44, 45

21. தமிழ்ச்சுடர்மணி, பக் .125.

# துணை நூற்பட்டியல்


**கருவி நூல்கள்**

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்
உ.வே. சாமிநாதய்யர் (பதி), சென்னை, 1927

பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற் புராணம்
காசிமடம், திருப்பனந்தாள், 1951

திருவாதவூரர்புராணம், திருவாவடுதுறையாதீனம்,
திருவாவடுதுறை 1977

உத்தரகோச மங்கைப்புராணம், உத்தரகோச மங்கை
தேவத்தானம், 1959

திருப்பெருந்துறைப்புராணம், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்
பிள்ளை, ஜூபிலிஅச்சுக்கூடம், சென்னை, 1892

திருப்பாதிரிப்புலியூர்புராணம், வசனம், கமலாபிரஸ், திருப்
பாதிரிப்புலியூர், 1917

திருவாசகம், திருவாவடுதுறையாதீனம், 1971

திருக்கோவையார், காசிமடம், திருப்பனந்தாள், 1952

**துணை நூல்கள்**

அடிகளாசிரியர், சிவபுராணச்சிற்றுரை, சித்தநாதேச்சுர
ஆதீனம், குகையூர் 1986.

அருணாசலம், மு திருவாசகம் சில ஆராய்ச்சிக் குறிப்புகள்
சைவசித்தாந்த மகா சமாச 60ஆம் ஆண்டு நினைவுமலர்
சை.சி. சமாசம், மயிலாப்பூர், சென்னை-1965

அருணந்தி சிவாசாரியர், சிவஞான சித்தியார் சுபக்கம், திருவாவடு
துறை ஆதீன வெளியீடு, திருவாவடுதுறை, 1954

அருணைவடிவேல் முதலியார், திருவாசகம் திருக்கோவையார்
குறிப்புரை, தருமபுர ஆதீனம், தருமபுரம், 1966

இரத்தினசபாபதி, வை. வீரசைவம், சென்னைப் பல்கலைக்
கழகம், சென்னை, 1977
திருமுறைத் தெளிவே சிவஞானபோதம்,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1981.

இராசமாணிக்கம், மா., பெரியபுராண ஆராய்ச்சி, மாடல்பப்ளிகே
ஷன்ஸ், சென்னை, 1948

இராமசாமி, துளசி. மங்கலாதேவி கண்ணகி கோட்டம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1987

இரேவணசித்தர், சிவஞானதீபம், தஞ்சை சரசுவதிமகால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1970

உமாபதி சிவாசாரியார், கோயிற்புராணம், வித்யாநுபாலன எந்திரசாலை, சென்னை, துந்துபி, மார்கழி, 1921.
திருமுறைகண்டபுராணம், பெரியபுராணம், பிற் சேர்க்கை, சை.சி. சமாசம், மயிலாப்பூர், சென்னை, 1937

சாத்தனார், மணிமேகலை, கழகவெளியீடு, சென்னை.

சிவகாமி, ச. இலக்கியப் பொருட்பகுப்பாய்வு, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1991.

சிவசுப்பிரமணியம், கி.வை. மாணிக்கவாசகர் யார்?, குமாரதேவர் மடாலயம், விருத்தாசலம், 1981

சிவப்பிரகாசசுவாமிகள், சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள், மயிலம் பொம்மபுர ஆதீனம், மயிலம், 1944

சிவலிங்கனார், ஆ, மாணிக்கவாசகர் காலமும் சமயமும், அருள்-சுடர்பதிப்பகம், வளசரவாக்கம், சென்னை, 1991
மாணிக்கவாசகர் ஒருகில்லாடி, ஆய்வுக்கோவை, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், புதுச்சேரி, 1991.

தொல்காப்பியத்தேவர், திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், உ.வே. சாமிநாதய்யர், விபர்ட்டி அச்சகம், சென்னை, 1940

தொல்காப்பியர், தொல்காப்பியம் மூலம், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1978

மருததுரை, அரு. புராண இலக்கிய வரலாறு, ஐந்திணைப் பதிப் பகம், சென்னை, 1988

மறைமலையடிகள், மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1957

முத்துசாமிபிள்ளை, கோ.மு. தில்லைச் சிற்றம்பலவாணர் திருக் கோயில், அப்பர்அருள்நெறி பதிப்பகம், சென்னை, 1987

விசயலட்சுமி, ர. தமிழகத்தில் ஆசீவகர்கள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1988

வெள்ளைவாரணன், க. பன்னிருதிருமுறை வரலாறு, இரண்டாம் பாகம். அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1969

வையாபுரிபிள்ளை, எஸ். தமிழ்ச்சுடர்மணி, பாரிநிலையம், சென்னை, 1968

**இதழும் மலரும்**

ஓம்சக்தி, சென்னை, சூலை 1992

மெய்கண்டார், மலர் 7 இதழ் 1 1988

வீரசைவமுரசு, வீரம் 5 வெற்றி 6 வெற்றி 8 1992

திருப்பாதிரிப்புலியூர் அருள்மிகு பாடலேசுரர் கும்பாபிஷேக மலர் 1973

மயிலம், திருப்புகழ்—திருப்படிவிழா வெள்ளிவிழா மலர் 1980

சிவஞான பாலயசுவாமிகள் நந்திக்கொடியேற்றுவிழா அருளுரை, கும்பகோணம் வீரசைவ மாநாடு 1940.

# சிறப்புச் சொல்லகராதி

(எண்—பக்க எண்)


அங்குத் தர நிகாயம் 55
அடிகளாசிரியர் 49, 52, 82
அப்பரடிகள் 3, 19, 34, 42, 121
அருணாசலம் மு., 18
அருணை வடிவேலர் 50, 68, 85, 87, 97, 104, 113
ஆசிவகக் கோட்பாடு 44
ஆதிசங்கரர் 61
இராசமாணிக்கனார் மா., 65
உத்தரகோச மங்கை புராணம் 30
உமாபதி சிவாசாரியார் 3, 11
கண்ணப்ப நாயனார் 45
கரந்தைக் கோவை 114
களவியல் உரை 61
குலசேகர ஆழ்வார் 39
கோடீச்சுரக் கோவை 114
சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் 51
சாமிநாதையர் உ. வே., 29
சிதம்பரநாத முனிவர் 29
சிலப்பதிகாரம் 46
சிவசுப்பிரமணியம் சி. வை., 78
சிவஞான சித்தியார் 58
சிவஞானபோதம் 26
சிவப்பிரகாச சுவாமிகள் 32, 58, 67
சிவப்பிரகாசப் பெருந்திரட்டு 74, 81
சுந்தரர் 3, 4, 19, 62, 121
சுப்பிரமணியம், சீ. வை., 79
சேக்கிழார் 60, 63
ஞானசம்பந்தர் 19, 21
ஞானியாரடிகள் 74
தஞ்சைவாணன் கோவை 114
தனித்திருத்தாண்டகம் 34
திருஞானசம்பந்தர் 3, 42, 44, 45, 60, 61, 105
திருத்தொண்டத் தொகை 62
திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம் 28, 29
திருப்பாதிரிப் புலியூர் புராணம் 28, 31, 33
திருப்பெருந்துறைப் புராணம் 34
திருமங்கையாழ்வார் 37, 39
திருமந்திரம் 4, 75
திருமுருகாற்றுப்படை 60
திருமுறை கண்டபுராணம் 1, 3
திருமூலர் 75
திருவாதவூரர் புராணம் 26, 27, 28, 31, 78, 109
திருவாதவூராணி நாயனார் 10
திருவேங்கைக் கோவை 114
திவ்வியப் பிரபந்தம் 1
தேவாரம் 1, 3, 61, 63, 64
தொல்காப்பியத் தேவர் 28, 29
தொல்காப்பியர் 48, 49, 82, 99, 100
நக்கீரர் 60
நந்திவர்ம பல்லவன் 37, 38, 39, 40
நம்பி திருவிளையாடல் 26, 27, 109
நம்பியாண்டார் நம்பி 1, 2, 60, 79
பரஞ்சோதி திருவிளையாடற் புராணம் 17, 26, 27
பாண்டிக்கோவை 64, 111
பாலசுந்தரம் 114
புத்தசாதகக் கதை 52
பெரியபுராணம் 3, 4, 47
பெருந்துறைப்பிள்ளை 120
பெருமாள் திருமொழி 39
பேயாழ்வார் 42
பொய்கை ஆழ்வார் 42
மகேந்திரவர்மன் 60
மணிமேகலை 46, 55
மணிவாசகர் திருப்பதிகக் கொத்து 20
மணிவார்த்தை 7, 11
மறைமலையடிகள் 13, 17, 28, 34, 41, 47, 59
மாணிக்கக் கூத்தன் 116
மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் திருப்பெருந்துறைப் புராணம் 25
முதல் திருவந்தாதி 42
மெய்கண்ட தேவர் 26
வரகுணன் 41
ஸ்ரீபொன்னம்பலபிள்ளை 125

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF
TAMIL STUDIES

டி.டி.டி.ஐ. (அஞ்சல்) தரமணி,
சென்னை-600 113.

## அறக்கட்டளைச் சொற்பொழிவு வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| இஸ்லாம் வளர்த்த தமிழ் | 15 | 00 |
| தமிழரின் தாயகம் | 10 | 00 |
| உ.வே.சா. சங்க இலக்கியப் பதிப்புகள் | 10 | 00 |
| இனிக்கும் இராசநாயகம் | 50 | 00 |
| பாவாணரும் தனித்தமிழும் | 12 | 00 |
| தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள் | 10 | 00 |
| உ.வே.சா. காப்பியப் பதிப்புகள் | 10 | 00 |
| விவிலியம் திருக்குறள் சைவசித்தாந்தம் | 20 | 00 |
| அகலமும் ஆழமும் | 12 | 00 |
| செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார் | 15 | 00 |
| உ.வே.சா. இலக்கணப் பதிப்புகள் | 12 | 00 |
| மகாமதிப்பாவலர் | 11 | 00 |
| உலக முதன் மொழி தமிழ் | 12 | 00 |
| மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை | 15 | 00 |
| தமிழ் தந்த வ.உ.சி. | 15 | 00 |
| உ.வே.சா. ஒரு தமிழ் வாழ்வு | 15 | 00 |
| வண்ணக் களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம் | 15 | 00 |
| மு.வ. புதினங்களில் தமிழ் — தமிழினம் | 20 | 00 |
| பாவாணர் ஆய்வு நெறி | 22 | 00 |
| கிறித்தவமும் தமிழகமும் | 15 | 00 |
| நாமக்கல் கவிஞர் கவிதைகள்-தேசியம், காந்தியம் | 16 | 00 |
| தமிழில் அறிவியல்—அன்றும் இன்றும் | 25 | 00 |
| இதழாளர் ஆதித்தனார் | 26 | 00 |
| காந்தீயப் பெருந்தலைவர் காமராசர் | 20 | 00 |
| மலையாளக் கவிதை | 15 | 00 |
| நாட்டுப்புறப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள் | 18 | 00 |
| நாட்டுப்புறவியலில் உளவியல் பார்வை | 14 | 00 |
| தொல்காப்பியப் பதிப்புகள் | 27 | 00 |
| தமிழும் பிராகிருதமும் | 12 | 00 |
| இலக்கியச் சிந்தனையாளர் டி. என். சேஷாசலம் | 12 | 00 |
| அறிவியல் தமிழ் - இன்றைய நிலை | 12 | 00 |